திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

மார்ச் 2026,
விலை ரூ.20/-

SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:5, Issue:08, Pages:56
MARCH-2026, Price Rs.20/-



## ஒண்டிமிட்டா
## ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி திருக்கல்யாணம்
## 31-03-2026




## ஒண்டிமிட்டா
## ஸ்ரீகோதண்டராமஸ்வாமி பிரம்மோத்ஸவம்
## 25-03-2026 முதல் 03-04-2026 வரை

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 25-03-2026 | புதன் | ந்யாஸாபிஷேகம் | அங்குரார்ப்பணம் |
| 26-03-2026 | வியாழன் | துவஜாரோஹணம் | சேஷவாகனம் |
| 27-03-2026 | வெள்ளி | வேணுகான அலங்காரம் | ஹம்ஸ வாகனம் |
| 28-03-2026 | சனி | வடபத்ரசாயி அலங்காரம் | சிம்ம வாகனம் |
| 29-03-2026 | ஞாயிறு | நவநீத கிருஷ்ண அலங்காரம் | ஹனுமத்சேவை |
| 30-03-2026 | திங்கள் | மோகினி சேவை | கருடசேவை |
| 31-03-2026 | செவ்வாய் | சிவதனுர்பாணாலங்காரம் | வரவேற்பு, கல்யாணோத்ஸவம், யானை வாகனம் |
| 01-04-2026 | புதன் | திருத்தேர் | --- |
| 02-04-2026 | வியாழன் | காளீயமர்த்தன அலங்காரம் | குதிரை வாகனம் |
| 03-04-2026 | வெள்ளி | சக்கரஸ்நானம் | துவஜாவரோஹணம் |



ராமசந்துருடிதடு ரகுவீரடு
காமித பலமுலிய்ய கலிகெ நிந்தரிகி
கௌதமு பார்ய பாலிடி காமதேனுவிதடு
காதல கௌசிகு பாலி விருக்ஷமு
சீதாதேவி பாலிடி சிந்தாமணீதடு
ஈதடு தாஸுல பாலி இஹபர தெய்வமு
பரக சுக்ரீவு பாலி பரம பந்துடிதடு
சரி ஹநுமந்து பாலி சாம்ராஜ்யமு
நிரதி விபீஷணனி பாலி நிதானமு
கரிம ஜனகுபாலி கனபாரிஜாதமு
தலப சபரி பாலி தத்வபு ரஹஸ்யமு
அலரி குகனி பாலி ஆதிமூலமு
கலடன்ன வாரி பாலி கண்ணுலெதுடி மூரிதி
வெலய ஸ்ரீவேங்கடாத்ரி விபுடிதடு



இராமச்சந்திரன் ரகுவம்சத்து வீரன்; எல்லோருக்கும் நலன்களை வழங்கவே பிறந்தவன்; கல்லாயிருந்த கௌதமனின் மனைவியான அகலிகைக்கு மீண்டும் மனித உருவம் அளித்ததால் இவன் காமதேனு; அரக்கர்களைக் கொன்று தன்னுடைய வேள்வியைக் காத்ததனால் கௌசிகனுக்கு இவன் கல்பவிருக்ஷம்; சீதையை மணந்ததால் சீதைக்கு இவன் சிந்தாமணி; தன் பக்தர்களுக்கு இம்மை மறுமை பேறுகளை வழங்கிடும் கண்கண்ட தெய்வம் இவன்; சுக்ரீவனுக்கு நெருங்கிய உறவினன் இவன்; அனுமந்தனுக்கு மாபெரும் சாம்ராஜ்யம் இவன்; விபீஷணனுக்கு மாபெரும் புதையல் இவன்; ஜனகனுக்கு பாரிஜாத மலர் இவன்; சபரிக்கு இவன் தத்துவ ரகசியமாக விளங்கினான்; குகனுக்கு இவன் பரம்பொருளாகத் திகழ்ந்தான்; கடவுள் உள்ளான் என்போர்க்குக் கண்ணெதிரில் விளங்கும் மூர்த்தியாகக் கருதப் பட்டான்; இறுதியாகப் பார்க்கின் இவன், திருமலையில் நின்றவண்ணம் அருள்புரியும் அவ்வேங்கடவனேயாவான்.

– அன்னமய்யா



அகீர்திம் சாபி பூ$_4$தாநி கத$_2$யிஷ் யந்தி தேSவ்யயாம்।
ஸம்ப$_4$ாவிதஸ்ய சாகீர்திர் மரணாத$_3$திரிச்யதே||

அனைவரும் உன்னுடைய நீண்ட காலம் இருக்கக்கூடிய இகழ்ச்சியைப் பற்றிக் கூடப் பேசுவார்கள். மேலும், கௌரவம் உடையவனுக்கு இகழ்ச்சி மரணத்தைக் காட்டிலும் அதிகமான துன்பத்தைக் கொடுக்கக்கூடியது.

*– ஸ்ரீமத் பகவத் கீதை 2-34*





# திருமலையப்ப ஸ்வாமி வஸந்தோத்ஸவம்



வஸந்தோத்ஸவத்தின் முன்னர் வாஸ்து சாந்தி, அங்குரார்ப்பணம், புண்யாஹவசனம் போன்ற சடங்குகள் நடைபெறும். வஸந்தோத்ஸவ முதல் நாளன்று காலை 8 மணிக்கு ஸ்ரீதேவி, பூதேவியுடன் திருமலையப்பஸ்வாமி மாட வீதிகளில் திருவீதி உலா வந்து ஆலயத்திற்குப் பின்புறம் அமைந்துள்ள வஸந்த மண்டபத்திற்கு எழுந்தருளி பிற்பகல் 2 மணி முதல் 5 மணி வரை ஸ்நபன திருமஞ்சனம், நிவேதனம், ஆஸ்தான சேவை நடைபெறும். இரண்டாவது நாள் திருமலையப்ப ஸ்வாமி தங்கத் திருத்தேரில் மாடவீதிகளில் திருவீதி உலா வந்து, வஸந்த மண்டபத்தை அடைகிறார். மூன்றாம் நாள் ஸ்ரீதேவி பூதேவி சமேதராக திருமலையப்ப ஸ்வாமி, ஸ்ரீசீதா லட்சுமணர், ஆஞ்சநேயர் சமேத ஸ்ரீஇராமச்சந்திர மூர்த்தி, ருக்மணி சமேதராக ஸ்ரீநவநீதகிருஷ்ண ஸ்வாமி ஆகியோர் எழுந்தருள்கின்றனர். இந்த மூன்று நாட்களும் வஸந்த மண்டபத்தில் சிறப்பு ஸ்நபன திருமஞ்சனம், தீபாராதனைக்குப் பின்னர் உற்சவ மூர்த்திகள் மாட வீதிகள் வழியாக மீண்டும் ஆலயத்திற்குள் எழுந்தருளுவர்.




*30 – 03 – 2026, திங்கள், திருமலையப்ப ஸ்வாமி*
*31 – 03 – 2026, செவ்வாய், திருமலையப்ப ஸ்வாமி,*
*(தங்கத்திருத்தேர்)*
*01 – 04 – 2026, புதன், திருமலையப்பஸ்வாமி,*
*ஸ்ரீகோதண்டராமஸ்வாமி மற்றும்*
*ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி*



# திருப்பதி ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி தெப்போத்ஸவம்

திருப்பதி நகரத்தின் மையப்பகுதியில் கொலுவீற்றிருக்கும் இரகுகுல நந்தரான ஸ்ரீஇராமச்சந்திர பிரபுவிற்கு அருமை மனையாள் சீதாப் பிராட்டியுடனும், இளவல் லக்ஷ்மணப் பெருமானுடனும் இராமச்சந்திர புஷ்கரணியில் தெப்போத்ஸவம் 30–03–2026 திங்கட்கிழமை முதல் 01–04–2026 புதன்கிழமை வரை மிகச் சிறப்பாக நடைபெறும். புஷ்பங்களாலும், அலங்கார விளக்குகளாலும் ஜொலிக்கும் தெப்பத்தில் பவனி வரும் ஸ்ரீகோதண்டராமனை "ராம" என்கிற இரண்டெழுத்து மந்திரத்தினால் ஜபித்து பக்தர்கள் கண்டுகளிப்பது மதுரமானது.ஸ்ரீராமபிரானுக்கு வீதி புறப்பாடு கண்டருளி, பின்பு தெப்பத்தில் ஏளப் பண்ணி முதலில் வேத பண்டிதர்களின் வேத பாராயணம், பக்தி கீர்த்தனைகள் இறுதியாக மேள, தாளத்தோடு மங்கள வாத்யத்துடன் கற்பூர மங்கள ஹாரத்தி காட்டப்பட்டு தெப்போத்ஸவம் நிறைவு பெறும்.

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி

## சமய மாத இதழ்

மார்ச் 2026 மலர் 05 இதழ் 08



சிறப்பு ஆசிரியர் :
**திரு. முத்தாட ரவிச்சந்திரா,** ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர் (F.A.C), தி.தி.தே.
வெளியீட்டாளர்-ஆசிரியர்,
பிரதான ஆசிரியர் (முழு கூடுதல் பொறுப்பு) :
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி.,
பி.ஜி.டிப்.இன் ஜே.எம்.சி.,

அச்சிடுபவர் :
**திரு. R.V. விஜயகுமார்,** பி.ஏ., பி.இடி.,
துணை செயலாட்சித் தலைவர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.

புகைப்படங்கள் :
**திரு. P.N. சேகர்,**
**திரு. B. வெங்கடரமணா**

**பிரதிகளுக்கு:**
THE CHIEF EDITOR,
"Sapthagiri", 2nd Floor, T.T.D Press
Building, Tirupati - 517 507.
**0877- 2264543, 2264359**
**பிரதான ஆசிரியர் : 2264363**

நீங்கள் ஸப்தகிரி இதழை
**www.tirumala.org**யில் பார்த்து,
படித்து மகிழலாம். ஆலோசனைகள்/
கருத்துக்கள்/புகார்களுக்கு
editorsapthagiri@gmail.com

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |

இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும்
அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர்
-பிரதான ஆசிரியர்

## உள்ளுறை

பக்கம்

ஸ்ரீராமனும் திருமலையப்பனும் *-பேராசிரியர் எஸ்.கோகுலாச்சாரி, புவனகிரி.* 7
மஹாலக்ஷ்மி பூஜையால் நினைத்தது நடக்கும் 10
*- திருமதி பா.கவிதா, சிதம்பரம்.*
நம்மாழ்வார் பாசுரங்களில் அறிவியல் செய்திகள் 12
*-முனைவர் ந. திருமால், சென்னை.*
துன்பத்தைப் போக்கும் பெருந்தேவித் தாயார் 16
*-திரு. பொ.பாலாஜிகணேஷ், சிதம்பரம்.*
திருக்குடந்தை திருக்குளம் *-திரு.சதா.ஸ்ரீஹரிஹரன், கும்பகோணம்.* 18
என்றென்றும் பெண்கள் *-திருமதி டி. ராஜலக்ஷ்மி, கேரளா.* 21
சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்: குகன் 25
*-படிமக்கலைஞர் திரு.ப.சரவணன், குடந்தை.*
தி.தி.தேவஸ்தானம் நிர்வகிக்கும் ஸ்ரீராமர் திருக்கோயில்கள் 31
*-திருமதி விஜயலட்சுமி சுப்பிரமணியம், கல்லிடைக்குறிச்சி.*
அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை : சுமித்திரை 35
*- திரு.எஸ். ஸ்ரீதுரை, காஞ்சிபுரம்.*
ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் *- டாக்டர் சி. கோவிந்தசாமி, புத்தூர்.* 38
108 திவ்யதேச வைபவம் : திருசிங்கவேள்குன்றம் 40
*- உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.*
அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும்: முதலியாண்டான் 42
*-ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை.*
ஆரோக்கியம் காப்போம்: நினைவாற்றல் 44
*-ஆயுர்வேத மருத்துவர் டாக்டர் கி.ஜ.நிகிலா வெங்கட், கோவை.*
ராசிபலன்கள் : மார்ச் 2026 *- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம்.* 47
நீதிக்கதை : மன்னிப்பு கேட்பதும் மனித நேயமே! 48
சிறுவர் உலகம் : பல்சுவைப் பகுதி 49
சித்திரக்கதை : நட்பின் இலக்கணம் 52

### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : *சீதாதேவி சமேத ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி,ஒண்டிமிட்டா.*

பின்னட்டை : *அன்னமய்யா (சித்திரம் – திரு.தேவநாதன், சென்னை)*





# தர்மத்தின் வடிவான தசரதராமன்

நம் பாரத கலாச்சாரத்தில் பண்டிகைகள் என்பவை வெறும் சடங்குகளைப் பற்றியது மட்டுமல்ல. அவை நம்முடைய வாழ்க்கை முறையைப் பற்றி சிந்திக்கும் வழி காட்டிகளுமாகும். அத்தகைய ஒரு பண்டிகைதான் 'ஸ்ரீராம நவமி' ஆகும். அயோத்தியின் அரசரான இராமபிரான் பிறந்த இப்புனிதமான நாள் "தர்மம் என்றால் என்ன?, ஒரு இலட்சிய வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும்?" எனும் வினாக்களுக்கு விடையாகத் திகழ்கின்றது. அதனால்தான் "ராமோ விக்ரஹவான் தர்ம:" – என்று குறிப்பிடுகிறது இராமாயணம்.

இராமபிரான் அரசன் ஆவதற்கு முன்னதாகவே ஒரு சிறந்த மகனாகவும், நல்ல மணாளனாகவும், சகோதரனாகவும், நண்பனாகவும் திகழ்ந்தார். தந்தையின் கட்டளையை ஏற்று அரசுரிமையை விடுத்து காடேகினார். அவருடைய தியாக உணர்வும், சத்தியவாக்கும் இன்றைய சமுதாயத்திற்கு மிகவும் அவசியமான குணங்களாகும். ஆட்சி அதிகாரம், செல்வம் மற்றும் சுயநலத்தை விடுத்து "தர்மோ ரக்ஷதி ரக்ஷித:" எனும் நெறியைத் தனது வாழ்க்கையில் கடைபிடித்தவர் இராமபிரான். இராமாயணம் வெறும் காவியம் மட்டுமல்ல அது வாழ்க்கையின் அறிவியல் ஆகும். ஒவ்வொரு கதாபாத்திரமும் நமக்கான வாழ்வியல் முறையைக் கற்பிக்கின்றன. சீதையின் பொறுமை, லக்ஷ்மணன் மற்றும் சத்ருக்கனின் சேவை, அனுமனின் பக்தி மற்றும் பரதனின் தியாகம், சத்ருக்கனின் பாகவத பக்தி – இவை யாவும் மானிடர்கள் எப்படி இருத்தல் வேண்டும் என்பதை நமக்குக் கற்பிக்கின்றன. ஆதலால்தான் இராமபிரான் அனைவரின் இதயங்களிலும் குடி கொண்டுள்ளார். இந்த இராம நவமியின்போது இராமபிரானை வழிபடுவது மட்டும் இன்றி நமது அன்றாட வாழ்க்கையிலும் இராமபிரானைப் போன்று தர்மத்தின் பாதையைக் கடைபிடிக்க உறுதி ஏற்போம். உண்மை, நீதி மற்றும் கடமையின் மதிப்புகளை மீட்டெடுப்போம். சமுதாயத்தில் தர்மத்தின் ஒளியைப் பரப்புவோம். இதுதான் இராமபிரானுக்கு நாம் சமர்ப்பிக்கும் உண்மையான காணிக்கையாகும்.

திருமலையில் புனிதமானத் தீர்த்தங்கள் பலப் பாய்ந்தோடுகின்றன. அவற்றில் குமாரசுவாமி தவம் புரிந்த தீர்த்தமான குமாரதாரா தீர்த்தமும் ஒன்றாகும். இத்தீர்த்தத்திற்கு பால்குண பௌர்ணமி (தமிழ் மாதம் மாசி பௌர்ணமி) அன்று அங்கு தீர்த்த முக்கோட்டி நடைபெறும். இத்தீர்த்தம் பாபவிநாசனம் அணையில் இருந்து சுமார் 5 கிலோ மீட்டர் தூரத்தில் அடர்ந்த வனப்பகுதியில் அமைந்துள்ளது. மாசி பௌர்ணமியன்று இத்தீர்த்தத்தில் குமாரசுவாமிக்கு சிறப்பு வழிபாடு நடைபெறுவதோடு பக்தர்களின் புனித தீர்த்தமாடுதலும் நடைபெறும்.

தெலுங்கு மொழியில் 32,000 கீர்த்தனைகளை இயற்றிய பதகவிதா பிதாமகர் தாள்ளபாக்க அன்னமய்யாவின் 523வது நினைவு தினமும் இம்மாதத்தில் பால்குண பகுல கிருஷ்ண பட்சம் துவாதசி அன்று திருமலை திருப்பதி தேவஸ்தானத்தால் மிகச் சிறப்பாக திருப்பதி மற்றும் அவர் பிறந்த ஊரான தாள்ளபாக்கத்திலும் கொண்டாடப்படுகிறது. இந்நாளில் அவருடைய கீர்த்தனைகளைத் துதித்து அவருக்கு நாம் அஞ்சலி செலுத்துவோம்.

மேலும், இம்மாதத்தில் லக்ஷ்மி ஜெயந்தி, மத்ஸ்ய ஜெயந்தி, ஹோலிப் பண்டிகை, தர்மராஜா தசமி போன்ற பண்டிகை மற்றும் பருவ தினங்கள் கொண்டாடப்பட இருக்கின்றன. அதோடு திருப்பதி ஸ்ரீ கோதண்ட ராம ஸ்வாமி, வால்மீகிபுரம் ஸ்ரீ பட்டாபி ராம ஸ்வாமி, ஒண்டிமிட்டா ஸ்ரீ கோதண்ட ராம ஸ்வாமி ஆலயங்களிலும் வருடாந்திர பிரம்மோற்சவம் சிறப்பாக நடைபெற இருக்கின்றன. திருமலையிலும் திருவேங்கடமுடையானுக்கு வசந்தோத்ஸவமும் நடைபெற இருப்பது குறிப்பிடத்தக்கது.

இம்மாதத்தில்தான் தெலுங்கு மொழி பேசும் மக்களின் வருடப் பிறப்பான 'சைத்ர மாதம்' தொடங்குகிறது. இந்நாளினை உகாதி திருநாளாகக் கொண்டாடுவது வழக்கமாகும். இந்த பராபவ ஆண்டில் கலியுகக் கண்கண்ட தெய்வம் ஸப்தகிரி வாசனான திருவேங்கடமுடையானின் இன்னருளோடு அனைவருக்கும் அனைத்து பணிகளும் சிறப்புற்று விளங்கிட, வாழ்வில் மேன்மேலும் வெற்றி அடைந்து முன்னேறிட ஸப்தகிரி இதழ் வாழ்த்துகிறது.

பங்குனி மாதத்தில் பெரிய பெருமாள், பெரிய பிராட்டியார் திருநட்சத்திர வைபவத்தோடு திருவரங்கத்தமுதனார் திருநட்சத்திரமும் வருகிறது. இது தவிர ஸ்ரீராம நவமி பங்குனி மாதம் 13–ஆம் தேதி (27–3–2026) வெள்ளிக்கிழமை வருகிறது.

திருவரங்கத்தமுதனாரின் ஸ்ரீ ராம அனுபவம், ஸ்ரீ ராமாநுஜர் அனுபவம், திருவேங்கட அனுபவம் என எல்லாவற்றையும் இணைத்து இக்கட்டுரையில் காண்போம். திருவரங்கத்து அமுதனார் பெரிய கோயில் நம்பி என்ற திருநாமத்தோடு திருவரங்கத்தில் இருந்தவர். திருவரங்க ஆலயத்தின் நிர்வாகம் முழுக்க அப்போது அவரிடம்தான் இருந்தது.

இராமாநுஜர் திருவரங்கத்து கோயில் நிர்வாகத்தினைத் திருத்தி அமைக்க எண்ணினார். ஆனால் பரம்பரை நிர்வாகமும், செல்வாக்கும் மிகுந்த நம்பியால் இராமாநுசரின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. தடை செய்தார்.

இராமாநுஜரின் பிரதான சீடரான கூரத்தாழ்வான் இராமாநுசரின் திருவுள்ளத்துக்கு ஏற்ப பெரிய கோயில்நம்பியைத் திருத்த வேண்டும் என்று விரும்பினார். இதற்கான நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். நம்பியின் தாயாரின் ச்ரார்த்த தினம் வந்தது. ஞானமும், வைதீகமும், பக்தியும் மிகுந்த ஒரு பெரியவர் ச்ரார்த்த போஜனத்தை ஏற்றுக் கொண்டால் தன்னுடைய அன்னைக்கு ஸத்கதி கிடைக்கும் என்று நினைத்தவர் அப்படி ஒரு ஏற்பாட்டுக்காக இராமாநுஜரை அணுகினார். இது தான் சமயமென்று கூரத்தாழ்வான் "நான் போகிறேன்" என்றார். ச்ரார்த்த தினம் வந்தது. ச்ரார்த்த போஜனத்தை ஏற்க அமுதனார் இல்லத்திற்கு கூரத்தாழ்வான் சென்றார். கூரத்தாழ்வான் தன் இல்லத்திற்கு வந்தது குறித்து கோயில் நம்பிக்கு மகிழ்ச்சி. ச்ரார்த்த போஜனம் முடிந்தவுடன் 'திருப்தியா' என்று கேட்பது வழக்கம்.

"திருப்தியா?" என்று கேட்டார் நம்பி. "இல்லை" என்றார் கூரத்தாழ்வான். வந்தவர் திருப்தி என்று சொல்லாதவரை ச்ரார்த்தம் நிறைவு பெற்றதாக ஆகாது என்பதை அறிந்தவர், 'திருப்திக்கு என்ன செய்ய வேண்டும்?' என்று கேட்க, கூரத்தாழ்வான் 'எதைச் சொன்னாலும் செய்வீரா?' என்றார். நம்பி தனது தாயின் ச்ரார்த்த நிகழ்வு நல்லபடியாக நடந்து, முழுமையாக நிறைவு பெற வேண்டும், தாய்க்கு நற்கதி கிடைக்க வேண்டும் என்று கருதினார்.

"சுவாமி! சொல்லுங்கள். நான் என்ன செய்ய வேண்டும்?". கூரத்தாழ்வான் சொன்னார். "வேறு ஒன்றும் இல்லை. என்னுடைய ஆசாரியர்



# ஸ்ரீராமனும் திருமலையப்பனும்

–பேராசிரியர் எஸ்.கோகுலாச்சாரி, புவனகிரி, 94434 39963.

இராமாநுசருக்கு ஏற்றபடி நீர் மாற வேண்டும். அவருடைய மனதிற்கு இசைய திருவரங்கம் கோயிலில் செய்ய வேண்டிய நற்செயல்களுக்கு தடையின்றி உம் செயல் அமைய வேண்டும்!”

ஒரு கணம் யோசித்தார் நம்பி. அடுத்து உள்ளே சென்று திருவரங்கம் திருக்கோயிலின் சாவிகளை கூரத்தாழ்வானின் திருப்பாதத்தில் வைத்தார். ஆழ்வானின் உபதேசங்களால் மனம் மாறிய நம்பி, எம்பெருமானாரிடம் சிஷ்யராக விரும்பினார். ஆழ்வானால் அவர் திருத்தப்பட்டதால், எம்பெருமானார் அவரை ஆழ்வானுடைய சிஷ்யரா கவே ஆக்கினார். ஆழ்வானின் சிஷ்யரானபின் அவரது அபாரமான பாடலியற்றும் திறன் அறிந்து சுவாமி தாமே அவர்க்கு அமுதனார் என்னும் திருநாமம் சாற்றினார், இதன்பின் அமுதனார் ஆழ்வானிடமும், எம்பெருமானாரிடமும் அளவு கடந்த பக்தி பூண்டொழுகலானார்.

இராமாநுஜரின் திருவருட் கருணையைக் கண்டு, அவருக்கே அடிமையாகி, அவர் பேரில் அற்புதமான ஒரு புகழ் மாலையை இயற்றினார். அதில் வரிக்கு வரி இராமாநுஜரின் மெய்ப்புகழைப் பாடியிருந்தார். முதலில் அதனை இராமாநுஜர் ஏற்றுக்கொள்ளவில்லை.

“நீர் பாடுவதாக இருந்தால், பகவானின் புகழைப் பாடும்; ஆழ்வார்களின் புகழைப் பாடும்; அடியேன் புகழைப் பாடவேண்டாம்'' என்றார். அமுதனார் யோசனை செய்தார்.வேறு ஒரு நூலை எழுதி அவரிடம் சமர்ப்பித்தார். அதனைப் படித்துப் பார்த்த இராமாநுஜர், “இந்நூலை மறுக்க முடியாமல் ஏற்றுக் கொள்கிறேன்” என்றார். முதல் நூலுக்கும் அடுத்த நூலுக்கு ஒரே ஒரு மாற்றம்தான். முதல் நூலில் நேரடியாக இராமாநுஜரின் புகழ் பாடியிருந்தார். அடுத்த நூலில் பகவானின் புகழையும், ஆழ்வார்க ளின் புகழையும் பாடும் இராமாநுஜரைப் போற்று வோம் என மாற்றினார். இன்றளவும் திருப்பா வையைப் போலவே தினசரி ஓதப்படும் அந்த நூலின் பெயர் இராமாநுச நூற்றந்தாதி. எப்படி காயத்ரி மந்த்ரம் ப்ரஹ்ம உபதேசம் பெற்றவர்களால் தினமும் அனுஸந்திக்கப்படுகிறதோ, அதேபோல, ஆசார்ய ஸம்பந்தம் பெற்று எம்பெருமானார் திருவடிகளில் ஆசை உடையவர்களுக்கு இது தினமும் அனுஸந்தானத்துக்கு விஷயமாகும்படி ஒவ்வொரு பாசுரத்திலும் இராமாநுஜரின் திருநாமத்துடன் அருளிச்செய்யப்பட்டது. ஆகையாலே இதை ப்ரபந்ந காயத்ரி என்று கொண்டாடுவார்கள்.

இதை தினசரி சேவிக்கும் பொழுது, ஸ்ரீராமனு டைய அனுபவத்தையும், ஸ்ரீராமாநுஜருடைய அனுபவத்தையும் சேர்த்து அனுபவித்த பலன் கிடைத்துவிடும். காரணம் ஸ்ரீ ராமாநுஜர் மனதிலே எப்பொழுதும் பூரணமாக இரண்டு விஷயங்கள் இருக்கும். 1.ஸ்ரீ ராமாயணம். 2.திருவேங்கடம்.

முதலில் ஸ்ரீராம விஷயத்தைப் பார்ப்போம்.

*படி கொண்ட கீர்த்தி இராமாயணம் என்னும் பத்திவெள்ளம்*
*குடி கொண்ட கோயில் இராமாநுசன் குணம் கூறும் அன்பர்*
*கடி கொண்ட மா மலர்த் தாள் கலந்து உள்ளம் கனியும் நல்லோர்*
*அடி கண்டு கொண்டு உகந்து என்னையும் ஆள் அவர்க்கு ஆக்கினரே*

– இராமாநுச நூற்றந்தாதி 37

ஸ்ரீ ராமாயணம் இதிகாசங்களில் ஒன்று. சகல வேதங்களின் சாரமாக விளங்கக் கூடியது. வேதங்க ளின் சாரமாகிய காயத்ரி மந்திரத்தின் 24 அட்சரங் களே 24,000 சுலோகங்களாக விரிந்து உருவானது.

ஸ்ரீ ராமாயணம் வேதமாகவும், ஸ்ரீராமன் அந்த வேதம் காட்டும் பரம்பொருளாகவும் உலகத்தில் அவதரித்தனர். அதனால்தான் சுவாமி நம்மாழ்வார் கற்றவர் என்றால் ஸ்ரீ ராமாயணம் படித்திருக்க வேண்டும். குணவானாகிய ஸ்ரீராமனைப் படித்திருக்க வேண்டும் என்றார். *''கற்பார் ராமபிரானை அல்லால் மற்றும் கற்பரோ?''* என்பது அவருடைய வாக்கு.

ஸ்ரீ ராமாயணம் உலகம் முழுக்க பிரசித்தி பெற்றது என்பதை “படி கொண்ட கீர்த்தி” என்கிற பதத்தாலே தெரிவித்தார். அடுத்து ஸ்ரீ ராமாயணம் என்பது பக்தி வெள்ளம். அந்த வெள்ளத்தில் மூழ்கி முத்தெடுக்காத ஆசார்யர்களே கிடையாது. ஸ்ரீ ராமாயணத்தை பல கவிஞர்கள் தங்கள் தங்கள் மொழிகளில் இயற்றி பக்தி வெள்ளத்தைப் பரப்பினார்கள். கம்பன் தமிழிலே கவி செய்தான். அருணாச்சலக் கவிராயர் இராமநாடகக் கீர்த்தனை

கள் பாடினார். துளசிதாசர் இராமாயணத்தைப் பாடினார். தியாகராஜ சுவாமிகள் மிக அற்புதமாக இராமாயணத் தத்துவங்களை கீர்த்தனைகளாகப் பாடினார். இராமாயண பக்தி வெள்ளம் இராமாநுஜ ரின் உள்ளத்தில் குடி கொண்டிருந்தது என்பது அமுதனார் வாக்கு. திருவேங்கடத்தோடு எப்படி இது தொடர்பு கொண்டதாக இருக்கும் என்று ஒரு கேள்வி வரும் அல்லவா.

ஸ்ரீ ராமாயணத்தின் அர்த்த விசேஷங்களைத் தெரிந்து கொள்வதற்காக, தத்துவங்களைத் தெரிந்து கொள்வதற்காக, ஸ்ரீராமாநுஜர், திருமலைக்கு வந்து, பெரிய திருமலை நம்பிகளிடம் ஒரு வருட காலம் ஸ்ரீ ராமாயணத்தைக் காலக்ஷேபம் கேட்டார் என்பது குருபரம்பரை. அதற்காக அவர் மலைமேல் கூட ஏறவில்லை. மலையின் அடிவார மாகிய அலிபிரியிலே தங்கி, ஒரு வருட காலம் ஸ்ரீ ராமாயணத்தைக் கேட்டார் என்றால், ஸ்ரீ ராமாயணத் தின் சிறப்பும், திருவேங்கடத்தின் சிறப்பும் விளங்கு கிறது. மலையப்ப ஸ்வாமி வேறல்ல; ஸ்ரீராமன் வேறல்ல; ஸ்ரீராம என்கிற பதத்துக்கு “எல்லோரையும் கவர்கிறவன்” என்று பொருள்.

*‘‘சந்திரகாந்தானனம் ராமம்’’* என்று வால்மீகி சொல்லுகின்றார். காந்தம் எப்படி இழுக்குமோ, அப்படி ஸ்ரீ ராமருடைய திருக்காட்சி காண்பவரை தன் வசப்படுத்தும். கொடியவர்களையும் தன்னிடத் திலே ஆகர்ஷனம் செய்யும். அதனால்தான் சூர்ப்பனகையைக் கூட ஸ்ரீ ராமனுடைய அழகு விட்டு வைக்க வில்லை. முனிவர்கள், தாங்கள் யுவதிகளாக மாறி இராமனுடைய திருத்தோள் சேர வேண்டும் என்று நினைத்தார்களாம். *‘‘ஆடவர் பெண்மையை அவாவும் தோளினாய்’’* என்பது கம்பன் வாக்கு.

அவ்வளவு ஏன்? இராவணனே இராமனுடைய அழகைப் பார்த்து வியந்து போனான். இப்படிப்பட்ட அழகனை கணவனாக அடைந்த சீதை, என்னையும் விரும்புவாள் என்று நான் எப்படி எதிர்பார்க்க முடியும்? என்று இராவணன் அப்பொழுதுதான் நிதானித்தான் என்பார் கம்பர்.

மலையப்ப ஸ்வாமியும் ஸ்ரீராமனைப் போலவே சேவார்த்திகளை ஆகர்ஷனம் செய்பவன். அதனால் தான் ஒருமுறை வந்து சேவித்தவர்கள் அடுத்தடுத்து வந்து சேவிக்கிறார்கள். ஒரு கணம் அவனைச் சேவிப்பதற்கு முன்னாலே, அவன் நம்முடைய மனதைப் பறித்துக் கொண்டு விடுகின்றான். காண்ப வர்களை கவர்ந்து தன்பால் இழுப்பதில் ஸ்ரீராமனும் மலையப்ப ஸ்வாமியும் ஒன்று. அதனால்தான் இராமாநுஜர், மலையப்ப ஸ்வாமிக்கு நித்திய புஷ்ப கைங்கரியம் பண்ண வேண்டும் என்பதற்காக அனந்தாண் பிள்ளையை திருமலைக்கு அனுப்பி னார். இப்படி ஸ்ரீராம நாமத்தையும், திருவேங்கடவ னையும் தம்முடைய உள்ளத்திலே கொண்ட ஸ்ரீ ராமாநுஜரின் புகழையும், அவர் விரும்பிய ஸ்ரீராமாயணத்தையும், ஸ்ரீராமனையும், இப்பெருமை களை நமக்கு எடுத்துச் சொன்ன திருவரங்கத்து அமுதனாரின் திருவடிகளையும் பல்லாண்டு பாடுவோம்.


திருமலை திருப்பதி தேவஸ்தானம்

**திருமலையானின் அக்ஷர தீபிகை**



# ஸப்தகிரி

மலர் எழுத்தால் ஸ்வாமியை அர்ச்சிக்கும் ஸப்தகிரி உங்களுடையது. அதனை மேன்மேலும் வளர்ச்சியடைய செய்வதும் ஸ்ரீவாரி சேவையே...

- பரந்தாமனைத் தரிசிப்பதற்கும், அவரைச் சென்ற டைவதற்கும் எத்தனையோ வழிகள் உண்டு.
- அனாதைகளின் காப்பாளன், ஆபத்தைத் தவிர்ப்பவனான அந்த ஏழுமலையானை அக்ஷர (எழுத்துப் பூவினால் ஆராதிக்கின்றனர்.
- திருமலையானின் அக்ஷரப் பிரசாதமான ஸப்தகிரியைப் படிப்பதும், படிக்க வைப்பதும் அவனுக்குச் செய்யும் திருத்தொண்டே.
- “ஸப்தகிரி” படியுங்கள். உங்கள் அன்பானவர் களையும் படிக்க வையுங்கள். திங்கள்தோறும் திருமலையானை இந்த ஸப்தகிரி மூலம் தரிசியுங்கள். சிறப்பைத் தெரிந்து கொள்ளுங்கள்.
- நீங்கள் ‘ஸப்தகிரி’ வாசகரானால்... உங்கள் அன்பானவர்களுக்குப் பரிசாக அளியுங்கள். சந்தா செலுத்த வையுங்கள். உங்கள் பக்கத்து வீட்டாருக்கும், நண்பர்களுக்கும், உறவினர் களுக்கும் ஸப்தகிரி குறித்து கூறுங்கள்.
- உங்கள் அன்பானவர்களையும் ஸப்தகிரி மூலம் ஸ்வாமி திருவருளைப் பெற வையுங்கள்.

# மஹாலக்ஷ்மி பூஜையால் நினைத்தது நடக்கும்

மனதில் எண்ணிய வேண்டுதல் நல்ல படியாக நிறைவேற வேண்டுமா? தாயாரின் பாதங்களை நம்பிக்கையோடு பற்றிக் கொண்டு வீட்டில் இருக்கும் பெண்கள் இந்தப் பரிகாரத்தை செய்து பாருங்கள். எவ்வளவு பெரிய வேண்டுதலாக இருந்தாலும் சரி அதை நிறைவேற்றி தரக்கூடிய சக்தி வாய்ந்த பரிகாரம் இது. வீட்டில் இருக்கும் பெண்கள் தான் இந்தப் பரிகாரத்தை செய்ய வேண்டும். ஏதாவது ஒரு வேண்டுதலாக வைத்துக் கொள்ளுங்கள்.

உங்கள் பிள்ளைகளுக்கு திருமணம் நடக்க வேண்டும். பிள்ளைகள் நன்றாக படிக்கும் திறன் அதிகரிக்க வேண்டும். கணவரின் நன்மைக்காகக் கூட இந்தப் பரிகாரத்தைச் செய்யலாம். அல்லது உங்களுக்கே நல்ல வேலை கிடைக்க வேண்டும். நல்ல கணவன் கிடைக்க வேண்டும் என்று கூட வேண்டிக் கொள்ளலாம். கடன் சுமை குறைய, வருமானம் அதிகரிக்க எதுவாக இருந்தாலும் சரி, நம்பிக்கையுடன் 48 நாட்கள் தொடர்ந்து இந்தப் பரிகாரத்தைச் செய்யும்போது உங்களுக்கான பலன் நிச்சயம் கை மேல் கிடைக்கும்.

இந்தப் பரிகாரத்திற்கு நமக்கு விரலி மஞ்சள் கட்டாயம் தேவை. சில இடங்களில் இதை கொம்பு மஞ்சள் என்றும் சொல்லுவார்கள். அந்த விரலி மஞ்சள் 108 என்ற கணக்கில் வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். முனை உடையாத விரலி மஞ்சளாக இருக்கட்டும். ஒவ்வொரு விரலி மஞ்சளின் மேலே ஒரு குங்கும பொட்டை வைத்து விடுங்கள். இந்த 108 விரலி மஞ்சளை ஒரு தட்டில் போட்டு அந்த தட்டை மஹாலக்ஷ்மித் தாயாரின் பாதங்களில் வைத்து விடுங்கள்.

தினமும் காலையில் எழுந்து சுத்தபத்தமாக குளித்து விட்டு பூஜை அறையில் தீபம் ஏற்றி வைத்து விட்டு மஹாலக்ஷ்மித் தாயாருக்கு இரண்டு ஏலக்காய்களை நிவேதனமாக வைக்க வேண்டும். எடுத்து வைத்து இருக்கும் 108 விரலி மஞ்சளிலிருந்து ஒவ்வொன்றாக எடுத்து தாயாருக்கு அர்ச்சனை செய்தல் வேண்டும்.

குங்கும அர்ச்சனை செய்வோம் அல்லவா? "ஸ்ரீம் ப்ரக்ருதே நம:, ஸ்ரீம் விக்ருத்யை நம:..." என 108 நாமங்களை துதித்து ஒவ்வொரு விரலி மஞ்சளையும் எடுத்து தாயாரின் திருப்பாதங்களில் வைத்து அர்ச்சனை செய்தல் வேண்டும். ஒவ்வொரு முறையும் இந்த மஞ்சளை எடுத்து தாயாரின் திருப்பாதங்களில் சமர்ப்பிக்கும்போது நம் வேண்டுதல்களுடன் மனதார ஒரு முறை சொல்லி சமர்ப்பிக்க வேண்டும்.

இறுதியாக தாயாருக்கு கற்பூர ஆராதனை காண்பித்து பூஜையை நிறைவு செய்தல் வேண்டும்.



– திருமதி பா. கவிதா, சிதம்பரம்,

பூஜை முடிந்து சிறிது நேரம் கழித்து தாயாரின் பாதத்தில் இருக்கும் மஞ்சள் கொம்புகளை எடுத்து தாம்பூலத் தட்டிலேயே பத்திரப்படுத்தி வைத்து இதனை கொண்டு 48 நாட்கள் விரலி மஞ்சள் அர்ச்சனை செய்தல் வேண்டும்.

பிரசாதமாக வைத்த ஏலக்காய்களை பாலில் போட்டு குடித்துக் கொள்ளலாம். இல்லை என்றால் அப்படியே பிரசாதமாகச் சாப்பிடலாம்.

48வது நாள் மஹாலக்ஷ்மித் தாயாருக்கு பால் பாயசம் மணக்க மணக்க நெய் ஊற்றி முந்தரி பருப்பு, ஏலக்காய், திராட்சை போட்டு செய்து வைத்து, பூஜையை நிறைவு செய்தல் வேண்டும். தாயாருக்கு தினமும் அர்ச்சனைக்கு பயன்படுத்திய விரலி மஞ்சளை ஒரு மஞ்சள் கயிறால் கட்டி உங்கள் வீட்டின் அருகில் உள்ள தாயாருக்கு அணிவித்தல் வேண்டும்.

இது உடனே செய்ய வேண்டும் என்பது இல்லை. உங்கள் வீட்டின் அருகில் பெருமாள் கோயில் இல்லையெனில் ஒரு நாள் பெருமாள் கோயிலுக்குச் சென்று சிரமம் பார்க்காமல் இந்த மாலையை தாயாருக்கு அணிவித்து விட்டு வாருங்கள்.



இந்த மாலையை மஹாலக்ஷ்மித் தாயாருக்கு அணிவித்த ஒரு சில நாட்களிலேயே நீங்கள் மனதில் நினைத்த வேண்டுதல் நிச்சயம் நிறைவேறும் என்பது நம்பிக்கை. (பெண்களால் 48 நாட்கள் இந்தப் பூஜையைத் தொடர்ந்து செய்ய முடியாது. இடையில் பூஜை செய்ய முடியாத ஐந்து நாட்களை தவிர்த்துக் கொள்ளலாம் தவறு கிடையாது.) நம்பிக்கை உள்ளவர்கள் பரிகாரத்தை செய்து பலன் பெறலாம்.

இந்த எளிய பரிகாரத்தை தங்களின் வேண்டுதல் களோடு நம்பிக்கையுடன் தொடர்ந்து செய்து வாருங்கள். இல்லத்திலும் எதிர்மறை சக்திகள் நீங்கி நேர்மறை ஆற்றல் பெருகி சுபிட்சம் பெருகிடும்.



## திருமலையில் பிளாஸ்டிக் பொருட்கள் தடை



**புண்ணிய திருத்தலமாம் திருமலையின் தூய்மைக்காக ஒவ்வொருவரும் தம் பங்கு முயற்சி செய்ய வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டே திருமலை திருப்பதி தேவஸ்தானமும் திருமலையில் பிளாஸ்டிக் (பிளாஸ்டிக் பாட்டில் கள், பிளாஸ்டிக் பைகளுக்கு) பொருட்களுக்கு நிரந்தர தடை விதித்துள்ளது.**

**எனவே, பக்தர்கள் திருமலையிலும், இரு மலைவழிச் சாலைகளிலும், அலிபிரி, ஸ்ரீவாரி மெட்டு நடைபாதைகளிலும் பிளாஸ்டிக் பொருட்களை எறியக் கூடாது. துணிப்பைகளையும், பிளாஷ்டிக் அல்லாத குடிநீர் பாட்டில்களையும் பயன்படுத்துங்கள். திருமலையில் தி.தி.தே. வழங்கும் ஜலப்பிரசாதத்தை உபயோகியுங்கள். திருமலையின் சுற்றுப்புறத்தையும், சுகாதாரத்தையும் காப்பதோடு நீர் வளத்தையும் நில வளத்தையும் காப்பதும் நம் கடைமையாகும்.**

# நம்மாழ்வார் பாசுரங்களில் அறிவியல் செய்திகள்

முனைவர் ந.திருமால்,
சென்னை, 6383955019

### ஆழ்வார்கள்

இறைவனுக்கு அடியார்களான ஆழ்வார்கள் தாம் பெற்ற இறை அனுபவங்களைப் பாசுரங்களாகப் பாடி வழிபட்டனர். அவ்வாறான பாசுரங்கள் வழி அடியவர்களின் அறிவியல் சிந்தனைகள் ஆங்காங்கே பொதிந்து உள்ளதை வெளிக்கொண்டு வருவது இந்தக் கட்டுரையின் நோக்கமாக அமைகிறது. ஆழ்வார்கள் என்றால் ஆழங்கால்பட்டவர்கள் எனப் பொருள் கொள்ளலாம். ஓடுகின்ற ஆற்றுநீரில் நின்றால் நம் காலுக்கடியில் உள்ள மணல், நீரின் ஓட்டத்தால் அடித்து செல்லப்பட்டு நாம் சிறிது சிறிதாக மூழ்கிப்போய்விடுவோம். அவ்வாறே பக்தி பெரு வெள்ளத்தால் மூழ்குபவரே ஆழ்வார்கள் என்கிறோம். அப்படி திருமாலின் மீதுள்ள பக்தியால் மூழ்கிய ஆழ்வார்களில் குறிப்பிடத் தகுந்தவர் நம்மாழ்வார்.



### நம்மாழ்வார் படைப்புகள்

நம்மாழ்வார் இயற்றிய பாசுர நூல்கள் நான்கு ஆகும், அவை திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி. இவை ரிக், யசுர், அதர்வண மற்றும் சாம வேதத்தின் சாரமாக அமைந்து இருப்பதாக வைணவப் பெரியோர்கள் புகழ்வார்கள்.

### உலகத் தோற்றம்

உலகமானது பஞ்சபூதங்களின் சேர்க்கையினால் ஆனதாகும். வானம், காற்று, நெருப்பு, நீர் மற்றும் நிலம் ஆகியன ஐம்பூதங்களாகும். இந்த ஐம்பூதங்களின் சேர்க்கையினாலே இந்தப் பிரபஞ்சம் மற்றும் உயிர்கள் தோன்றின. ஆழ்வார் பாடல்களில் திருமாலே பஞ்சபூதமாக உள்ளார் என்கிறார்கள். இவ்வுலகம் ஐந்தினுள் அடக்கம் என்ற மெய்ம்மையை விளக்குவதாக உள்ளது.

*கரவிசும்பெரி வளி நீர் நிலம் இவைமிசை*
*வரன் நவில் திறல் வலி அளி பொறையாய்நின்ற*
*பரன் அடிமேல் குருகூர்ச் சடகோபன் சொல்*
*நிரநிறை ஆயிரத்து இவை பத்தும் வீடே*

– திருவாய்மொழி 1.1.11

வானம், நெருப்பு, காற்று, நீர், மண் இவற்றின் தன்மைகளான சிறந்த ஒலியும், தெறலும், வலியும், தண்ணளியும், பொறுத்தலும் இவையாகி நின்ற திருமால் என்று சுட்டுவதின் மூலம் கடவுள் கோட்பாட்டோடு இவ்வுலகம் எவற்றின் தொகுப்பால் ஆனது என்ற அறிவியலை நம்மாழ்வார் பதிவு செய்திருப்பதை அறிய முடிகின்றது. மேலும், உலகத் தோற்றத்துள் உயிர்கள் உண்டு. அந்த உயிர்கள் வாழ உடல் வேண்டும். உடலின்றி உயிரோ, உயிரின்றி உடலோ தனித்து இயங்க முடியாது என்ற கருத்தை தம் பாசுரத்தின் வாயிலாகக் குறிப்பிடுகிறார்.

*திட விசும்பு எரி வளி நீர் நிலம் இவை மிசை*
*படர் பொருள் முழுவதுமாய் அவை அவை தொறும்*
*உடல்மிசை உயிர் எனக் கரந்து எங்கும்பரந் துளின்*
*சுடர்மிகு சுருதியுள் இவை உண்ட சுரனே*

– திருவாய்மொழி 1.1.7

உடலில் உயிர் இரண்டறக் கலந்துள்ளது போல் இறைவன் தன்னுள் கலந்துள்ளான் என்று கூறினாலும் உடலில் உயிர் கலக்கும் உண்மையை நம்மாழ்வார் கூறியுள்ளார். உயிர்களின் தோற்றம் குறித்து விளக்கும் விஞ்ஞானம் நீரிலிருந்து தான் உயிரின் பரிணாம வளர்ச்சி தொடங்குகின்றது என்றும், குறிப்பிட்ட இடைவெளியில் ஓரறிவு உயிர் முதல் தொடங்கி ஐந்தறிவு வரை உள்ள உயிர்கள் தோற்றம் கொள்கின்றன எனும் அறிவியலை,

*உடல் ஆழிப்பிறப்பு வீடு உயிர்முதலாமுற்றுமாய்*
*கடல்ஆழி நீர் தோற்றி அதனுள்ளே கண் வளரும்*
*அடல் ஆழி அம்மானைக் கண்டக்கால் இது சொல்லி*
*விடல் ஆழி மட நெஞ்சே! வினையோம் ஒன்றாம் அளவே*

– திருவாய்மொழி 1.4.9

என்ற பாசுரம் வழி விளக்குகிறார். மேலும். கடல் அமைதியாக இருந்தால்தான் மக்கள் நலமோடு வாழ முடியும், இல்லையேல் ஆழிப் பேரலை அலைகழித்து விடும். ஆழிப்பேரலையில் உலகு அழிந்துவிடும் என்ற அறிவியல் உண்மை குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், கடல்தான் உலகம், கடலிலிருந்துதான் உலகம் தோன்றியது. கடலிலிருந்து விடுபட்ட மணல் திட்டுக்கள்தாம் பூமி. அதுதான் மண்வாழ் உயிரினங்களின் வாழிடம் என்ற அடிப்படையில் உலகமே கடல் என்றும், கடலே உலகம் என்பதை,

*கடல்ஞாலம் செய்தேனும் யானே என்னும்*
*கடல்ஞாலம் ஆவேனும் யானே என்னும்,*
*கடல்ஞாலம் கொண்டேனும் யானே என்னும்*
*கடல்ஞாலம் கீண்டேனும் யானே என்னும்,*
*கடல்ஞாலம் முண்டேனும் யானே என்னும்*
*கடல்ஞாலத் தீசன்வந் தேறக் கொலோ?*
*கடல்ஞா லத்தீர்க் கிவையென் சொல்லுகேன்*
*கடல்ஞா லத்தென் மகள்கற் கின்றனவே*

– திருவாய்மொழி 5.6.1

பராங்குச நாயகியாகப் பாவித்து உலகத்துக்கெல்லாம் அடிப்படையாக இறைவனே உள்ளான் என்றும், அவனே கடலில் உறைகிறான் என்கிறார் நம்மாழ்வார்.

## கற்றதொழுகு

**புதிய ஆத்திசூடி 13**



கல்வியின் முக்கியத்துவத்தை பாரதியார் பல முறைகளில் வலியுறுத்துகிறார். “காலை எழுந்தவுடன் படிப்பு” என்று குழந்தைகளுக்கு கல்வியின் அருமையை எடுத்துக் கூறுகிறார். கற்றால் மட்டும் போதுமா? கற்றதின் படி நடக்க வேண்டும் என்பதைத் தான் “கற்றது ஒழுகு” என்று கூறுகிறார்.

‘‘கற்க கசடற கற்றவை கற்றபின் நிற்க அதற்குத் தக’’ என்ற வள்ளுவர் வாக்கை மெய்ப்பிக்கிறார் பாரதி. கல்வி என்பது பெரும் கடலைப் போன்றது, எனவே கல்வி கற்பது அலைவரிசை போலத் தொடர்ந்து கற்றுக் கொண்டே இருக்க வேண்டும். சரியானப் பருவத்தில் தேவையான அனைத்து வகை கல்வியையும் கற்றுப் பூர்த்தி செய்ய வேண்டும்.

“பள்ளித்தல மனைத்தும் கோயில் செய்குவோம்” என்று மாணவர்கள் இறைவனை பயபக்தியுடன் வேண்டுவதுபோலக் கல்வியையும் உள்ளுணர்வோடு கற்க வேண்டும் என்கிறார். “கல்வி சிறந்த தமிழ்நாடு” என்று கல்வியின் சிறப்பைப் போற்றுகிறார்.

‘‘தேர்ந்த கல்வி ஞானம் எய்தி வாழ்வோம் இந்த நாட்டிலே’’ என்று “வாழி கல்விச் செல்வம் எய்தி மனமகிழ்ந்து கூடியே” என்று கல்வியை ஞானம் என்றும், செல்வம் என்றும் விவரிக்கிறார். கல்வியைப் போலவே அதனால் அறிவும், கருணையும் பெற்று விளங்க வேண்டும் மாணவச் செல்வங்கள் எனக் கனவு காண்கிறார் பாரதி. கல்வி கற்பதோடு நாம் நின்று விடாமல் அதன் கருத்துக்களை நாம் மனதில் இறுத்திக் கொள்ள வேண்டும். அதன்படி நடக்க வேண்டும் என்று பல முறை வற்புறுத்திக் கூறி “கற்றதொழுகு” என்று நிறைவு செய்கிறார். குழந்தைகளே! நாமும் அதன்படி நடப்போம்.

- டாக்டர் கவிஞர் இரா. உமா பாரதி, சென்னை, மகாகவி பாரதியார் வம்சாவளி, 73389 97938

## உலகின் அழிவு

உலகில் தோற்றம் கொண்ட அனைத்து உயிர்களுக்கும், பொருள்களுக்கும் அழிவு உண்டு. இந்த உலகமும் அழிவுக்கு உள்ளதாகும்.

இதனை இலக்கியங்கள் பிரளய முடிவு என் கின்றன. இன்றைய விஞ்ஞான உலகமும் இயற்கையைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும். இல்லையேல் ஒவ்வொரு பகுதியாகவோ, முழுவது மாகவோக் கூட இப்பேரண்டம் அழிவுறலாம் என்று எச்சரிக்கிறது.

*நாளும் எழ நிலம் நீரும் எழ, விண்ணும்*
*கோளும் எழ எரிகாலும் எழ, மலை*
*நாளும் எழ சுடர் தானும் எழ, அப்பன்*
*ஊளிஎழ உலகம் உண்ட ஊணே*

– திருவாய்மொழி 7.4.3

உலகின் தோற்றம் பற்றி மட்டுமல்லாது உலக அழிவைப் பற்றியும் ஒரு கருத்தினை நம்மாழ்வார் பதிவு செய்துள்ளார்.

## காலம் அளவீடில்லாதது

காலத்தின் அளவீடு இல்லாத உலகத் தன்மை இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்ற முக்காலத்திற்கும் ஒப்பாகும் என்ற தன்மை உறுதி செய்கிறது.

*மனனகமலமறமலர் மிசை எழுதரும்*
*மனன் உணர்வு அளவு இலன் பொறி உணர்வு அவைஇலன்*
*இனன் உணர் முழுநலம் எதிர் நிகழ் கழிவினும்*
*இனம் இலன் என்ன உயிர் மிகுநரை இலனே*

– திருவாய்மொழி 1.1.2

காலத்தின் அளவீடில்லாத உலகத் தன்மை யாய்த் திருமால் விளங்குவதாகக் கூறினாலும், இதன் வழியாகக் காலம் அளவீடில்லாத குறியீடு அல்லது பரிமாணமற்ற குறியீடு என்ற கருத்து அறிவியல் நுட்பம் வாய்ந்த சிந்தனையை விளக்குவதாக அமைந்துள்ளது.

8 – 9ஆம் நூற்றாண்டு வரை வாழ்ந்ததாகக் கருதப்படும் நம்மழ்வார் இவ்வறாகப் பல அறிவியல் செய்திகளைப் பக்தியோடு இழைத்தளித்துள்ளார்.

### திருமலை திருப்பதி தேவஸ்தானம்,

## திருமலையில் பார்க்க வேண்டிய முக்கிய இடங்கள்

**ஸ்வாமி புஷ்கரணி :**

இந்தத் திருக்குளம் திருமலையில் திருமலை யான் சந்நதியின் அருகிலுள்ளது. பக்தர்கள் கோயிலுக்குள் நுழையும் முன்னர் இந்தப் புனிதமான திருக்குளத்தில் நீராடினால் உடல் சுத்தத்துடன் மன சுத்தியும் ஆகிறது.

**ஆகாச கங்கை :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையில் இருந்து 5 கி.மீ. தூரத்தில் உள்ளது.

**பாபவினாசம் :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையில் இருந்து 5 கி.மீ. தூரத்திலுள்ளது.

**தி.தி.தே. வனத்தோட்டம் :**

தேவஸ்தானத்தினர் திருமலையில் கண்களுக்கு விருந்தளிக்கும் விதத்தில் வனத்தோட்டம் வளர்க் கின்றனர். இந்தத் தோட்டத்தில் மிகவும் அழகான செடிகள், மரங்கள் அதிகமாக வளர்க்கப்படுகின்றன.

**புவியியல் வளைவு (சிலாதோரணம்) :**

புவியியல் அமைப்பில் இயற்கையாக அமைந்த இந்த சிலாதோரணம் ஆலயத்தின் வடமேற்கு திசையிலிருந்து 1 கி.மீ. தூரத்திலுள்ளது.

**நாதநீராஜன மண்டபம் :**

தர்ம பிரசார பரிஷத்தின் கீழ் இயக்கப்படுகிற இந்த மண்டபத்தில் சொற்பொழிவுகள், ஹரிகதை கள், சங்கீத பஜனைகள் இன்னும் பல கலைநிகழ்ச்சி கள் நடத்தப்படுகின்றன.


**ஸ்ரீவேங்கடேஸ்வரா தியான மண்டபம் :**

அபூர்வமான புராணப் பொருட்களோடு மட்டு மல்லாமல் சித்திரம், சிலை கைவண்ண கலை வேலைப்பாடுகளோடு தியானத்திற்கு ஏற்றவாறு அமைந்த மண்டபம் இது. திருமலை எஸ்.வி. மியூஜியம் அருகே தியான நிலையத்தில் அமர்ந்து பக்தர்கள் பகவானைத் தியானித்து மனதில் ஏற்பட்ட மனச்சுமைகளைக் குறைத்துக் கொள்ளலாம்.

**நாகுல பாவி (கிணறு)**

ஒரு பெரிய பாறையில் நாகங்களின் சிற்பங்கள் வடிக்கப்பட்டு அதனருகில் ஒரு திருக்குளம் உள்ளது. வராக ஸ்வாமி விருந்தினர் விடுதி எதிராகச் செல்லும் சாலையில், சேவாசதன் பின்புறம் உள்ள பாட்ட ஸ்ரீகங்கை அம்மன் ஆலயத்திலிருந்து சிறிது தூரம் சென்று இடதுபுறம் திரும்பினால் நாக தீர்த்தத்தைச் சென்றடையலாம்.

# குறுக்கெழுத்துப் புதிர் -116



தொகுப்பு : திரு. என். இராஜன், சென்னை.

புதிருக்கு விடை அறிய 39ம் பக்கம் பார்க்கவும்...

## இடமிருந்து வலம்

01. இக்ஷ்வாகு குல குலகுரு...(5)
03. "....(6) செல்வன் தந்திடும்" - பெரிய திருமொழி பாசுரம்.
04. ...(4) இந்துக்களின் பண்டிகை.
06. நரசிம்மரின் திருநட்சத்திரம்...(3)
08. கிருத்திகைக்கு முந்தைய நட்சத்திரம்...(3)
09. ...(4) இராமாயணத்தை சமஸ்கிருதத்தில் இயற்றியவர்.
12. வியாசரின் புதல்வர்...(3)
13. "...(5)பாலும் கருடன் பாலும்" - பெரியாழ்வார் திருமொழி.
16. ...(7)திருமலையப்ப ஸ்வாமி அருள் புரியும் இடம்.
17. "...(3)கில்லேன் இறையும்" - திருவாய் மொழி.
18. "...(3) மன்னு வடமதுரை மைந்தனை" - திருப்பாவை.
19. ...(4)திருவரங்கனைப் பற்றிய பாமாலை.
20. இராமாயணத்தில் அரக்கி...(3)
21. பாரதப்போர் நிகழ்ந்த இடம் ...(6)
22. திருக்குடந்தை மூலமூர்த்தி...(6)
24. திருப்புல்லாணி மூலமூர்த்தி ...(10)

## வலமிருந்து இடம்

07. பெரியாழ்வாரின் திருநட்சத்திரம்...(3)
10. "...(2) அமுது" - திருவாய்மொழி பாசுரம்.
11. நளன் மனைவி...(5)
14. பன்னிரு ஆழ்வார்கள் பாடிய பாசுரங்களின் தொகுப்பு...(9)
15. திருப்பாணாழ்வார் அருளிச் செய்த பிரபந்தம்...(8)
16. ...(4) யோகம், ஞானம் ஆன்மீக சாதனம்.
17. "நிலனும்..."(6) - பெரிய திருமொழிப் பாசுரம்.
21. பெருமாள் திருமொழியை அருளியவர்...(5) ஆழ்வார்.
23. கண்ணனுக்குத் தந்தை ...(5)

## மேலிருந்து கீழ்

01. மழைக்கு அதிபதி...(4)
02. மகாபாரதப்போரில் பீஷ்மருக்கு எதிராக நின்றவர்...(4)
04. திருவண்ணாமலை மலைமீது ஏற்றப்படுவது...(3)
05. கண்ணன் பாட்டு இயற்றிய கவி...(3)
13. திருவேங்கடவனை மனமுருகி பாடிய தெலுங்கு கவி...(8)

## கீழிருந்து மேல்

14. 108 திவ்யதேசங்களில் முதலாவது திவ்யதேசம் ...(7).
24. ...(3) வடிவம் கொண்டவர் ஜாம்பவான்.

# துன்பத்தைப் போக்கிடும் பெருந்தேவித் தாயார்

– திரு. பொ.பாலாஜிகணேஷ்
சிதம்பரம், 9842550844

நடுநாட்டு திவ்ய தேசங்களான திருக்கோவிலூர், திருவந்திபுரம், திவ்விய தேசங்களுக்கு நடுவில் (வராஹபுரியாம்) பண்ருட்டியில் அருள்மிகு வரதராஜ பெருமாள் உடனுறை பெருந்தேவித் தாயார் எழுந்தருளியிருக்கிறார்.

கிழக்கு திருமுகம் கொண்டு கம்பீரமான தோற்றத்தோடு வலது கரம் அபய முத்திரை, கதை தாங்கிய இடது கரம். சங்கு சக்கரம் தரித்தபடி காட்சி தருகிறார். மனமுருகிப் பிரார்த்தித்தால் வேண்டியதை அருளும் வரதராஜர் ஆவார். வலதுபுறம் ஸ்ரீதேவி தாமரை மலர் தாங்கி காட்சி தருகிறாள். இடதுபுறம் பூமாதேவி கருங் குவளை மலர் தாங்கியபடி அருள்பாலிக்கிறார்.

பகவானின் கருணையாலும் பக்தர்களின் பிரேமையினாலும் அதிசயங்கள் நடப்பது உண்மை. சுமார் சில நூற்றாண்டுகளுக்கு முன் பண்ருட்டியைச் சேர்ந்தவரும், தீவிரமான பெருமாள் பக்தருமான பரமபாகவதர் ஒருவர் ஸ்ரீமந்நாராயணனிடம் அபார பக்தி கொண்டு இருந்தார். இவருக்கு பரம்பரையாக சில கைங்கரியங்கள் உண்டு. இதில் ஒன்று திருவதிகை ரங்கநாதப் பெருமாள் சன்னதியில் ஆனி மாத பௌர்ணமி திருமஞ்சன உபயம். அதுசமயம் வண்டியில் பொருட்களை ஏற்றிக்கொண்டு திருமணம் செய்ய திருக்கோயிலை அடைந்தார்.

அங்கே இவருக்குப் போட்டியாக வேறு ஒரு உபயதாரரால் திருமணம் செய்ய ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தது. இதுபற்றி அந்த பக்தர் கேட்டவுடன் தக்க பதில் எதுவும் இல்லை. எனவே திருமஞ்சனப் பொருட்களை எடுத்துக்கொண்டு நமக்கு பாக்கியம் கிட்டவில்லை என நினைத்து கண்ணீர் விட்டபடி வீடு திரும்பினார். கவலையோடு பசி தாகம் தெரியாமல் மூன்று நாட்கள் வீட்டில் நித்திய பூஜை செய்து தீர்த்தம் மட்டுமே அருந்தி படுத்துக் கொண்டிருந்தார். மூன்றாவது நாள் நாராயணன் அவரின் கனவில் தோன்றி நான் உன்னிடமே வந்துவிட்டேன் கவலையை விடு. எனக்காக இன்னொரு ஆலயம் அமைத்திட வேண்டும். அந்த பாக்கியத்தை உனக்கு நான் அளிக்கிறேன். இது என்னுடைய திருவிளையாடல் என்று உரைத்து நாராயணன் ஓர் இடத்தைக் குறிப்பிட்டு அங்கே ஒரு திருக்கோயில் கட்டவும் பணித்தார்.

செய்வது அறியாது திகைத்துப்போன அந்த பக்தர் அவ்விடம் கோயில் கட்ட அஸ்திவாரங்கள் போடும் பணியைத் துவங்கினார். கொஞ்சம் கொஞ்சமாக சன்னதி கட்டும் வேலை நடந்து கொண்டு இருந்தது. இதற்கு இடையே இந்த



பக்தரின் உறவினர் ஒருவர் ஏனாதி மங்கலம் என்னும் கிராமத்தில் விவசாய நிலத்தில் பள்ளம் தோண்டும் போது பெருமாள் ஸ்ரீதேவி பூதேவி ஆகிய மூர்த்திகளின் கற்சிலைகளைக் கண்டு எடுத்தார். இந்த பக்தர் கோயில் கட்டுவதை அறிந்து கொண்டு அந்தச் சிலைகளை அவர் பண்ருட்டிக்கு அனுப்பி வைத்தார். இந்த பக்தர் தனக்குச் சொந்தமான புகையிலை கிடங்கில் இந்த மூன்று சிலைகளையும் வைத்தார். ஸ்வாமியும் இவரின் கனவில் வந்து உடம்பு எரிகிறது என்று கூற, உடனே அந்த பக்தர் சிறிதளவு நீருடைய கிணற்றில் படுக்க வைத்தார். இரண்டு நாட்களும் நீரானது மேலே வாரி தெறித்தது. இந்த சத்தமும் இந்த பக்தரின் கனவில் கேட்பது போல் இருந்ததாம். எனவே அது சாதாரண சிலை அல்ல ஜீவனுடைய தெய்வீகத் திருமேனி என்று உணர்ந்து கொண்டு திருக்கோயிலில் சிலைகளை முறைப்படி பிரதிஷ்டை செய்தார். இதுவே இன்று பண்ருட்டி காந்தி சாலையில் அமைந்துள்ள எல்லோருக்கும் வேண்டியதை வேண்டிய நேரத்தில் வாரி வழங்கும் வள்ளல் பெருமாளாக ஸ்ரீ வரதராஜப்பெருமாள் அருள்பாலிக்கும் திருக்கோயில் ஆகும்.

தைரியம், அறிவு, நோயில்லா வாழ்வு, குழந்தைப்பேறு, தானியம், பயிர் பச்சைகள், வெற்றி, மோட்சம் என 18 லட்சுமிகளாக வர்ணிக்கப்படுகிறது. இங்கு ஸ்ரீபெருந்தேவித் தாயார் சன்னதியில் திருமணமாகாதப் பெண்கள் திருமணம் விரைவில் நடக்க வேண்டி பிரார்த்தனை செய்தால் எவ்வளவு பெரும் கஷ்டத்தில் திருமணம் தடைபட்டு இருந்தாலும் சில நாட்களிலேயே அந்தத் தடைகள் தகர்த்தெறியப்பட்டு திருமணம் நடக்கிறது. இதை பக்தர்கள் உணர்வுப்பூர்வமாகக் கூறுகிறார்கள்.

ஸ்ரீ வரதராஜப் பெருமாளுக்கு இடது பக்கம் ஆண்டாள் சன்னதி உள்ளது. திருப்பாவை, வாரணமாயிரம் பாசுரங்களை திருமணம் ஆகாதவர்கள் பக்தி சிரத்தையுடன் மனமுருகிப் பாடி வர விரைவில் திருமணம் கைகூடும் என்பது பெரியோர்கள் அனுபவித்த உண்மை. இந்த ஆண்டாளுக்கு இரண்டு மாலைகள் சாற்றி ஒரு மாலையைப் பிரசாதமாக வீட்டுக்கு கொண்டு சென்று பூஜையில் வைத்து வழிபட கணவன் மனைவி இல்வாழ்க்கை எல்லையற்ற மகிழ்ச்சியும், திருமணப் பாக்கியம், மனமகிழ்ச்சி, செல்வம் முதலிய பலன்களும் கிடைப்பது கண் கண்ட உண்மை என்று பக்தர்கள் கூறுகிறார்கள்.

யோக நரசிம்மர், ஸ்ரீ சுதர்சனர் பிரகாரத் தூண்களில் அழகாக நுட்பமான கலைவடிவோடு காட்சி தருகிறார்கள். கருடன், அனந்தாழ்வார், விஷ்வக் சேனர், நம்மாழ்வார், திருமங்கை ஆழ்வார், இராமானுஜர், மணவாள மாமுனிகளுக்கும் தனி சன்னதிகள் உள்ளது.

ஆஞ்சநேயர் பிரகாரத்தின் மேற்கு திருமுகம் மண்டலம் கொண்டு ஸ்ரீ வரதனை சேவித்தவாறு அருள்பாலிக்கிறார். சனிக்கிழமைகளில் இவருக்கு சிறப்பு பூஜைகள் செய்யப்படுகிறது. ஆஞ்சநேயரை வணங்கினால் மன தைரியம் மட்டுமல்ல துணிச்சலும் பிறப்பதாக நம்பப்படுகிறது. அதனாலேயே சனிக் கிழமைகளில் மற்றும் அமாவாசை தினங்களில் இங்கு பக்தர்கள் கூட்டம் அலைமோதுகிறது

ஒவ்வொரு மாதமும் அஸ்த நட்சத்திரத்தன்று இங்கு திருமஞ்சன சேவை நடைபெறுகிறது அதேபோல் மாங்கல்ய தோஷம் உள்ளவர்கள் மாதம்தோறும் நடைபெறும் திருவோண நட்சத்திரம் அன்று கல்யாண உற்சவத்தில் கலந்து கொண்டு வரதராஜப் பெருமாளையும், பெருந்தேவித் தாயாரையும் சேவித்தால் சர்வ தோஷமும் நீங்கி திருமணம் நடைபெறும்.

இத்திருமண உற்சவத்தில் பெருந்தேவித் தாயாருக்கு ஆயிரத்தெட்டு தாமரை மலர்களால் சகஸ்ர நாமம் உச்சரிக்கப்படும். மாசி மகத்தன்று தீர்த்தவாரி உற்சவம் தேவனாம்பட்டினம் கடற்கரையில் நடைபெறும். வைகுண்ட ஏகாதசி கிருஷ்ண ஜெயந்தி, ஆடிப்பூரம், மார்கழி மாதம் 27 ஆம் நாள் கூடாரவல்லி ஆண்டாள் பெருமாள் சேர்த்தி உற்சவம், ஆடி மாதம் நான்காம் வெள்ளி பெருந்தேவித் தாயார் உள் புறப்பாடு புஷ்ப அங்கி சேவை, பங்குனி உத்திரம் திருக்கல்யாணம் என உற்சவங்கள் நடைபெறும்.

இந்த ஆலயத்தில் வழங்கப்படும் தீர்த்தம் நோய் எதிர்ப்பு சக்தி வாய்ந்ததாகக் கருதுகிறார்கள். இத்திருத்தலத்திற்கு வந்து பிரார்த்தனை செய்தால் சகலமும் வெற்றி இதில் எந்தவிதமான ஐயப்பாடும் கிடையாது என்று பக்தர்கள் உறுதிபட கூறுகிறார்கள் நம்புகிறார்கள்.

# திருக்குடந்தை திருக்குளம்

திரு. சதா. ஸ்ரீஹரிஹரன், கும்பகோணம், 9488241383

தமிழக அளவில் கோயில்கள் நிறைந்த ஊர்கள் இரண்டு. ஒன்று பல்லவ தேசமான காஞ்சிபுரம். மற்றொன்று சோழ தேசமான திருக்குடமூக்கு என்று அழைக்கப்படும் கும்பகோணமாகும்.

சோழ வளநாடான தஞ்சை மாவட்ட காவிரி ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ள ஆயிரம் ஆண்டுகள் கடந்தும் மிளிரும், மூர்த்தி, தலம், தீர்த்தம் என மூன்றிலும் மட்டுமல்லாமல், சைவ நாயன்மார்கள் மற்றும் வைணவ ஆழ்வார்களால் பாடல் பெற்ற திருக்கோயில்கள் நிறைந்த கோயில் மாநகரம் என்று அனைவராலும் பக்தியுடன் அழைக்கப்படும் கும்பகோணம் பல புராதன வரலாறுகளை தன்னகத்தே கொண்ட பல சித்தர்கள் உலா வந்த திருத்தலமாகும்.

## திருக்குளத்தின் சிறப்பு

புண்ணியம் நல்கும் காவிரி நதிக்கரை நகரான கும்பகோணத்தின் அடையாளமாக மிளிரும் திருக்குளம் உலக பிரசித்தி பெற்ற மகாமகக் குளமாகும்.

இக்குளத்தில் பன்னிரண்டு ஆண்டிற்கு ஒரு முறை மகாமக தீர்த்தவாரி விழாவும், வருடத்திற்கு ஒரு முறை மாசிமக தீர்த்தவாரி விழாவும் நடைபெறும். மேலும், பங்குனி உத்திர தினத்தன்று அருள்மிகு மந்திர பீடேஸ்வரி ஸ்ரீமங்களாம்பிகை எழுந்தருள தெப்போத்ஸவ விழாவும் நடைபெறும். கூடுதல் சிறப்பாக ஆடி மாதத்தில் இத்தல சிவாலயங்களில் எழுந்தருளி உள்ள ஐந்து ஆலயங்களின் அம்மன்கள் ஒன்றாக எழுந்தருள ஆடிப்பூர தீர்த்தவாரி விழாவும் இக்குளத்தில் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

திருக்குடந்தை திருத்தலம் மற்றும் தல திருக்குளமான மகாமகக்குள மகத்துவத்தை எடுத்துரைக்கும் பவிஷ்ய புராணத்தின் பதிகம்

*அன்யக்ஷேத்ரே க்ருதம்பாபம் புண்ய க்ஷேத்ரே வினஸ்யதி*
*புண்ய க்ஷேத்ரே க்ருதம்பாபம் வாராணஸ்யம் வினஸ்யதி*
*வாராணஸ்யாம் க்ருதம்பாபம் கும்பகோணே வினஸ்யதி*
*கும்பகோணே க்ருதம்பாபம் கும்பகோணே வினஸ்யதி*


## விளக்கம்

பல தலங்களில் செய்யும் பாவங்கள் புண்ணியத் தல தீர்த்தங்களில் நீராட விலகும். புண்ணியத் தலங்களில் செய்யும் பாவங்கள் காசியில் நீராட விலகும். காசியில் செய்த பாவங்கள் கும்பகோணத்தில் உள்ள மகாமகக் குள தீர்த்தத்தில் நீராட விலகும். கும்பகோணத்தில் செய்யும் பாவங்கள் கும்பகோணத்தில் மட்டுமே விலகும் என்பது ஐதீகம்.

## புராணவரலாறு

உலகிலுள்ள உயிர்கள் அறிந்தும், அறியாமலும் தாங்கள் செய்யும் அனைத்து பாவங்களையும் போக்கும் புண்ணிய நதிகளான கங்கை, யமுனா, நர்மதா, சரஸ்வதி, காவிரி, கோதாவரி, துங்கபத்ரா, கிருஷ்ணா, சரயு ஆகிய நவ நதிகள் ஒரு சமயம்,








மகாமகக்குளத்திலுள்ள குளத்தின் வரைபட கல்வெட்டு



பட்டீஸ்வரம் ஸ்ரீதேனுபுரீஸ்வரர் ஆலயத்திலுள்ள ஐயன் கோவிந்த தீக்ஷிதர் மற்றும் அவரின் மனைவி நாகம்மாள் சிலை வடிவங்கள்

உலகாளும் ஈசனிடம் பூவுலகில் வாழும் உயிர்கள் எங்கள் வசம் விட்டுச் சென்ற பாவக் கழிவுகள் எங்களின் மீது பாவச் சுமைகளாக உள்ளதால் அதனில் இருந்து விடுபட வழி ஒன்று நல்குமாறு இறைவனின் திருவடியில் விண்ணப்பம் வைத்தனர். அதனைத் தொடர்ந்து அருள்மிகு வீரபத்திரர் வடிவத்தில் எழுந்தருளிய பரமனின் வழிகாட்டுதலின்படி குடந்தை மகாமகக் குளத்திற்கு வந்து நீராடி கரை அருகிலுள்ள அருள்மிகு ஸ்ரீகாசிவிஸ்வநாதரை வழிபட்டு பேறு பெற்றார்கள் என்பது புராண வரலாறாகும்.

### திருப்பதிகம்

*பூமருவும் கங்கை முதல் புனிதமாம் பெருந்தீர்த்தம்*
*மா மகந்தான் ஆடுதற்கு வந்துவழிபடும் கோயில்*

என்று சேக்கிழார் பெரிய புராணத்தில் பதிகம் பாடிவுள்ளார்.

இம்மாநகரைச் சுற்றியுள்ள சிவாலயங்களில் எழுந்தருளி உள்ள 1) அருள்மிகு ஸ்ரீமங்களாம்பிகை சமேத ஆதி கும்பேஸ்வரர், 2)அருள்மிகு ஸ்ரீசோமசுந்தரி சமேத வியாழ சோமேஸ்வரர், 3)அருள்மிகு ஸ்ரீஅமிர்தவல்லி சமேத அபிமுகேஸ்வரர், 4)அருள்மிகு ஸ்ரீவிசாலாட்சி சமேத காசிவிஸ்வநாதர், 5)அருள்மிகு ஸ்ரீஞானாம்பிகா சமேத காளஸ்தீஸ்வரர், 6)அருள்மிகு ஸ்ரீசௌந்தரநாயகி சமேத கௌதமேஸ்வரர், 7)அருள்மிகு கீழ்க்கோட்டம் ஸ்ரீபிரஹன்நாயகி சமேத நாகேஸ்வரர், 8)அருள்மிகு ஸ்ரீசோம கமலாம்பாள் சமேத பாணபுரீஸ்வரர், 9)அருள்மிகு ஸ்ரீஆனந்தநிதியம்பிகை சமேத ஆதிகம்பட்ட விஸ்வநாதர், 10)அருள்மிகு ஸ்ரீகாமாட்சியம்மன் சமேத ஏகாம்பரேஸ்வரர் (இராவுகால காளிகா பரமேஸ்வரி அம்மன் ஆலயம்) 11)அருள்மிகு கொட்டையூர் ஸ்ரீபந்தாடுநாயகி சமேத கோடீஸ்வரர், 12)அருள்மிகு ஸ்ரீஅமிர்த வல்லி சமேத அமிர்த கலச நாதர் (சாக்கோட்டை) ஆகிய சிவாலய மூர்த்திகள் மகாமகம் மற்றும் மாசி மகம் அன்றும் மகா மகக்குள படித்துறையில் ரிஷப ரூடராக எழுந்து அருளி தீர்த்தவாரி கண்டு அருள்வார்கள். இப்படி பல சிறப்புகள் நிறைந்த மகா மகக் குளத்தின் மகத்துவத்தை ஆயிரம் நாவு கொண்ட ஆதிசேஷனாலும் எடுத்து உரைக்க முடியாது.

நாயக்க மன்னர்களின் அறப் பணியில் மிளிரும் மகாமகக்குளம் தஞ்சை மாவட்டத்தில் உள்ள பல ஆலயங்களை மீட்டெடுத்து அதனை புதுப் பொலிவுடன் நமக்குத் தந்து சென்றது. சோழர்களுக்குப் பின் தஞ்சை மண்ணை ஆட்சி புரிந்தவர்கள்



அருள்மிகு ஸ்ரீகாவிரி நதி அம்மன்

நாயக்க மன்னர்கள் ஆவர். இவர்களில் செவாப்ப நாயக்கன் (தந்தை), அச்சுதப்ப நாயக்கன் (மகன்), விஜயரகுநாத நாயக்கன் (பேரன்) ஆகியோர் ஆட்சி காலத்தில் இம்மூவருக்கும் முதல் அமைச்சராக இருந்து வந்தவர் ஐயன் கோவிந்த தீக்ஷிதர் ஆவார். இவர் நாயக்க மன்னர்களின் ஆணையை நிறைவேற்றும் வண்ணம், பல அறப்பணிகளை மிகச்சிறப்பாக செய்து வந்துள்ளார் என்பது வரலாற்று சுவடுகள் தரும் தகவலாகும். அதில் குறிப்பாக குடந்தை மகாமகக்குளத்தின் திருப்பணி என்பது மானுடம் உள்ளவரை வரலாற்றில் ஒளிரும் என்று சொன்னால் அது மிகையாகாது.

### சோடச (16) மகாலிங்கங்கள் ஆலயம்

இருபது கிணறுகளுடன் கூடிய இம்மகாமகக் குளத்தில் தாம் திருப்பணி மேற்கொண்ட போது இக்குளத்தைச் சுற்றிலும் விமானங்களுடன் சோடச (16) மண்டபங்கள் அமைத்து அதில் 1)பிரம்ம தீர்த்தேஸ்வரர், 2)முகுந்தேஸ்வரர், 3)தாளேஸ்வரர், 4)விருஷபேஸ்வரர், 5)பரணேஸ்வரர், 6)கோணேஸ்வரர், 7)பக்திஹேஸ்வரர், 8)பைரவேஸ்வரர், 9)அகத்தீஸ்வரர், 10)வியாசேஸ்வரர், 11)உமைபாகேஸ்வரர், 12)நைருதீஸ்வரர், 13)பிரம்மேஸ்வரர், 14)கங்காதரேஸ்வரர், 15)முக்த தீர்த்தேஸ்வரர், 16)க்ஷேத்ரபாலேஸ்வரர் ஆகிய சோடச (16) மகாலிங்க மூர்த்தங்களைப் பிரதிஷ்டை செய்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும், விஜயரகுநாத நாயக்க மன்னனின் பாவங்கள் குறைய சோடச மகாதனம் (16) வகை தானங்கள் அளிக்க (தனது எடைக்கு எடை சொர்ணம் வழங்க) துல புருஷாதான மண்டபமும் கட்டி மகாமகக்குளத்தின் பெருமையைப் புதுப் பொலிவுடன் உலகுக்கு உணர்த்தியவர் ஐயன் தீக்ஷிதர் ஆவார்.

### சோடச மண்டப சிற்பங்கள்

தீக்ஷிதரின் தலைமையில் உருவான சோடச மகாலிங்க சுவாமி எழுந்தருளியுள்ள மண்டபங்கள் ஒவ்வொன்றிலும் நாயக்கர் கால சிற்பியின் கற்பனையில் சிகரம் தொட்ட கலை மிகு கற்றளிச் சிற்பங்கள். பல இதிகாச காவியங்களை தன்னுடன் நிறைந்து காணும் கண்கள் வியக்கும் வண்ணம் மிகச்சிறப்பாக தூண்களில் வடிக்கப்பட்டுள்ளது என்பது கூடுதல் தகவலாகும்.

### வழிபாட்டு சிறப்பு

வாழ்வில் ஒரு முறையாவது குடந்தை மகாமகக்குளம் சென்று அக்குளத்தில் நீராடி சுற்றி உள்ள 16 லிங்கங்களை வணங்கிய வண்ணம் குறைந்தது மூன்று முறையாவது தீர்த்தக் குளமான மகாமகக் குளத்தை வலம் வந்து அருகிலுள்ள அருள்மிகு விசாலாட்சி சமேத காசிவிஸ்வநாதர் ஆலயத்திற்குச் சென்று அங்குள்ள ஸ்வாமி, அம்பாள் மற்றும் நவநதி தேவிகளுக்கும், இவ்வாலயத்தின் மிக அருகில் உள்ள அருள்மிகு வீரபத்திரர் ஆலயத்திலுள்ள சுவாமி, அம்பாள் மற்றும் அங்குள்ள மற்ற பரிவார தெய்வங்களுக்கும் தீபம் ஏற்றி வழிபட நாம் மற்றும் முன்னோர்கள் செய்த பாவங்கள் குறையும், இல்லத்தில் ஐஸ்வர்யங்கள் நிறையும் என்பதும், மேலும் உடல் பிணி, உள்ளப் பிணி, அறிவுப்பிணி அகலும் என்பதும் ஐதீகம்.

குறிப்பு: கும்பகோணத்தில் எதிர் வரும் மாசி மாதம் 18 –ஆம் தேதி (2–3–2026) அன்று மாசிமக தீர்த்தவாரி விழா மகாமகத் திருக்குளத்தில் நடைபெறும் என்பது கூடுதல் தகவலாகும்.



## வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



கேநாபி கார்யேண தத: கத$_3$ாசித்$_3$
ராமாநுஜே பூ$_4$தபுரம் ப்ரயாதே।
தத்பத்நயதி$_4$க்ஷேபநிகர்ஷவாசா ருஷ்டாம்
ஸ்வதே$_3$வீம் ஸ சுகோப பூர்ண:॥

(48)

**ஒரு காரியத்தை முன்னிட்டு இராமாநுஜர் ஸ்ரீபெரும்பூதூருக்குச் சென்றிருந்தபோது, அவரது பத்னியாலே கீழ் மொழிகளாலே அவமதிக்கப் பெற்றுக் கோபமடைந்த தனது பத்னியைப் பெரிய நம்பி கோபித்தார்.**

– "ஸுதர்சனம்" ஆசிரியர் இயற்றியது

# என்றென்றும் பெண்கள்

திருமதி டி. ராஜலக்ஷ்மி, கேரளா, 99461 28102

''லட்சுமி நாத சமாரம்பாம்...'' என்ற சுலோகம் நம் குருபரம்பரைப்பற்றி குறிப்பிடும். இது லட்சுமி நாதனிடமிருந்து துவங்குகிறது. அப்படி என்றால், பகவானின் பெயரில் "லட்சுமி" முதலில் சேர்த்தாலே சிறப்பு. பார்வதி பரமேஸ்வரன் என்று பார்வதி தேவியை முன்னிட்டு பரமசிவனை வணங்குகிறோம். பகவானோ அல்லது மனிதனோ பெண்ணிற்குதான் முதல் இடம். அதுவும், வேதத்தில் பெண்களுக்குச் சிறப்பு இடம் உள்ளது.

மஹாவிஷ்ணு, லக்ஷ்மியை இருதய தாமரையில் வைத்திருக்கிறார், மஹாதேவர், பார்வதிக்கு இடபாகத்தைக் கொடுத்தார், பிரம்மாவின் நாவில் சரஸ்வதி உள்ளார் என்று மும்மூர்த்திகளும் பெண்ணின் முக்கியத்துவத்தை உணர்த்த இவ்வாறு சேவை சாதிக்கிறார்கள். கோயில்களில் தாயார், அம்பாள் சந்நிதிக்குச் சென்றுவிட்டு வணங்கிய பின்னர்தான் பகவான் சந்நிதிக்கு செல்வது வழக்கம். இவ்வாறு பெண்களுக்கு முதலிடம் கொடுத்து இருக்கிறது நம் கலாச்சாரம்.

மலையத்துவஜ பாண்டியனின் பெண்ணாகப் பிறந்த பார்வதி தேவியின் அம்சமாக விளங்கும் மீனாக்ஷி, சீரும் சிறப்புமாக மதுரையை ஆண்டு வந்தது எல்லோரும் அறிந்தது.



நமது சனாதன தர்மம், பெண்களை தெய்வமாகக் கொண்டாடும். பெண்களில் பங்கேற்பு, முக்கியத்துவம், பொறுப்பு எல்லாவற்றையும் நாம் யுகங்களாக பல புராணங்களில் மற்றும் காவியங்களில் காண்கின்றோம். பெண்கள் ஆட்சி செய்வதும், சிறந்த குருவாகவும், ஞானத்தில் திகழ்பவளாகவும், வீரம், கலை போன்ற எல்லா துறைகளிலும் சிறந்து விளங்குவதை நாம் காண்கிறோம்.

இப்படி பல்வேறு யுகங்களாக, இவர்கள் மங்கையர் திலகமாகத் திகழ்ந்ததைக் காண்போம்.

## இராமாயண காலத்தில் பெண்கள்

சீதை, மண்டோதரி, அனுசுயா, கௌசல்யா, சுமித்ரா, தாரா, கார்கி, மைத்ரேயி, காத்யாயினி, திரிஜடை இவர்கள் வேதாந்தத்தில் சிறந்தவர்கள். இவர்களின் வழிகாட்டுதலால் பல நன்மைகள் பூமிக்குக் கிட்டியுள்ளது. அவர்களின் பதிவ்ரதம் மற்றும் ஞானம் அவர்களின் பண்புகளிலிருந்து அறியலாம். கைகேயி தேர் ஓட்டுவதில் சிறந்தவள். தேவர் அசுரர் யுத்தத்தில் தசரதனுக்கு வெற்றி வாகைச் சூடிக் கொடுத்தவள்.

'மைதிலி உபநிஷத்' சீதா தேவியும் ரிஷிகளும் ப்ரம்மம், ஞானம் பற்றி உரையாடுவதைத் தெளிவாகப் பதிவு செய்துள்ளது. சீதையின் அறிவாற்றலை தெரியப்படுத்துகிறது. மண்டோதரி, சிறந்த பதி

விரதை, அதனால்தான் இராவணனுக்கு அவ்வளவு சக்தி. யாராலும் அவனை எளிதில் வெல்லவும் முடியவில்லை. பல அறிவுரைகள் கூறியும் அவன் திருந்தவில்லை. கார்கி, பல ரிஷிகளுடன் வாதம் புரிந்து பல அர்த்தங்களை சாமான்ய மக்களுக்கு எடுத்துரைப்பாள்.

வாலியின் மனைவி தாரா பேச்சு சாமர்த்தியத்தில் சிறந்தவள். லக்ஷ்மணன் கோபமாக வந்தவுடன், சாதுர்யமாக வார்த்தைகளைப் பயன்படுத்தி அவருடைய கோபத்தை குறைத்தாள். அனுசுயா தேவி, பிற்காலத்தில் நடக்கும் நிகழ்வுகளை அறிந்து, சீதைக்கு வஸ்திரம் மற்றும் பாதுகாப்பு பொருட்களை கொடுத்தாள்.

## மஹாபாரதம் மற்றும் புராணங்களில் பெண்கள்

ருக்மிணி தேவி தன் கடிதத்தில் கண்ணனை விரும்புவதாகவும், கல்யாணம் செய்துகொள்ள வரவேண்டும் என்றும் கவிதையாக எழுதியுள்ளார். இது, புலவர்களால் போற்றப்பட்டது. ஏன் என்றால்? உயர்ந்த சொற்கள் மற்றும் வார்த்தைகளை கவிதை நயமாக துல்லியமான பொருளை உணர்த்தினாள்.

திரௌபதி, கௌரவர் சபையில் சூதின் அதர்மத்தை விளக்குவதை கவிஞர்கள் அவளின் அறிவாற்றலைப் போற்றுகிறார்கள். சுபத்திரா மற்றும் சத்யபாமா தேர் ஓட்டுவதில் சிறந்தவர்கள். நரகாசுர யுத்தத்தில் சத்யபாமா கண்ணனுடன் பங்கேற்றாள். சுபத்திரா அர்ஜுனனுக்குத் தேர் ஓட்டி சுபத்திரா பரிணயம் நடந்தது.

காந்தாரி,தியாகமும் ஞானமும் உடையவள், கணவனுக்கு எப்போதும் நல்லவழி வழங்கி கொண்டே இருப்பாள். திரௌபதி சபிக்கும் போது, காந்தாரியின் வார்த்தையைக் கேட்டு கோபம் குறைத்தாள். இல்லையெனில் அந்த சபை அன்றே அழிந்திருக்கும். குந்தி தேவி, தன் கணவனை இழந்த பின், ஐந்து மகன்களை தர்மம் வழி நடக்க அறிவூட்டியவள். ஐந்து பிள்ளைகளுக்கும் ராஜ தர்மத்தைச் சொல்லி வளர்த்தாள். சாவித்ரி தன் கணவனின் உயிரை மட்டுமின்றி இழந்த ராஜ்ஜியம், மாமனாரின் கண்பார்வை, செல்வம் எல்லாவற்றையும் மீட்டு கொடுத்தாள். நளாயினி என்ற பெண், தன் பதிவ்ரதை தன்மையால் சூரியனை உதிக்க விடாமல் தடுத்தாள். சுகன்யா என்ற பெண், தன் கணவனின் வயதை குறைத்தாள்.

சந்திரமதி, ஹரிச்சந்திரனின் மனைவி தன் கணவனின் வாக்கை காப்பாற்ற தன்னையே அடிமை படுத்திக்கொண்டாள். சத்திய சோதனையை வென்றவள். இவ்வாறு தர்மம், நியாயம், சத்யம், வாக்கு போன்றவற்றை பிறருக்கு உபதேசம் செய்யும் அளவிற்கு அறிவாற்றலும், தைரியமும் உள்ளவர்கள் பெண்கள்.

## கலியுகத்தில் கலி புருஷனை வென்றவர்கள்

கலியை வெல்ல, பக்தி மார்கத்தை வழிநடத்தியவள் குமுதவல்லி நாச்சியார். மிகச் சிறந்த வைணவ பக்தை. திருமங்கை ஆழ்வாரின் வைணவ பக்திக்கு வித்தாக இருந்தவள். வைணவ சம்பிரதாயத்தில் ஆண்டாள் பாடிய திருப்பாவை, நாச்சியார் திருமொழி எல்லா பாசுரங்களையும் விட சிறந்தது என்று முன்னோர்கள் போற்றினார்கள். மீரா பாய், இளவரசியாக இருந்தாலும், தன்னுடைய பக்திப் பாடலால் அந்த கண்ணனையே வரவழைத்தாள்.

பக்தி மார்கத்தில் ஆண்கள், பெண் பாவனையை ஏற்று பாடல்கள் பாடுவார்கள். ஏனெனில், அப்போதுதான் பக்தி தழைக்கும். இவ்வாறு பெண்கள் எழுதிய வரிகள் மிக ரசமாக இருக்கும் என்பது தெரியவருகிறது.

காரைக்கால் அம்மையார் சிறந்த சிவ பக்தை. இவருடைய ஞானம் உலகம் அறியும். அவ்வையார் தான் எழுதிய பொன் மொழிகள் மற்றும் பக்தியால், பல அரசின் பகைமை எல்லாவற்றையும் தன் வாக்கு சாமர்த்தியத்தால் சமாதானம் பேசி உலக நன்மைக்காகப் பாடுபட்டார். அப்பர் சிறுவயது முதல் தன் தமக்கையான திலகவதி அம்மையாரின் வளர்ப்பில் இருந்தார். அக்காள் மிகச் சிறந்த சிவ பக்தை. ஞானமும் பக்தியும் ஊட்டி அப்பரை வளர்த்தாள். அப்பரின் பாடல்கள் மிக இனிமையாக இருக்கும்.

குந்தவை, சோழ அரசரின் பெண். ராஜ ராஜ சோழனின் வெற்றிக்கு மிக முக்கிய பணியாற்றினாள். வைணவம், சைவம் இரண்டையும் இரு கண்களாகக் கொண்டு பல கோயில்கள் கட்டி பராமறித்தாள்.

இயல், இசை, நாடகம் மற்றும் பல கலைகளை பலருக்குக் கற்றும் கொடுத்தாள். அவள், சோழ

சாம்ராஜ்யத்தின் அரசியல் வழிமுறையை நடத்தினாள்.

ருத்ரம்மா தேவி, அக்காலத்தில் ஒரு பெண் அரசாள்வதை ஒப்பு கொள்ளாததால், தானே அப்பதவியை ஏற்று, ஒரு பெண் எதையும் சாதிப்பாள் என்று நடத்தி காட்டி அரசை அறம் சிறக்க ஆண்டாள்.

திருமலா தேவி, கிருஷ்ண தேவராயரின் மனைவி. கலை, பக்தி கொண்டவள். பல கைங்கர் யம் ஸ்ரீநிவாசருக்கு செய்தாள். கங்காதேவி, 14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மிகச் சிறந்த எழுத்தாளர். 'மதுர விஜயம்' என்ற கவிதை நூலை இயற்றினாள். முகலாயரின் படையெடுப்பு, விஜய நகர சாம் ராஜ்யத்தின் எழுச்சி போன்ற நாட்டின் முன்னேற்றம் என்று எல்லா விவரங்களை மிக மிகத் துல்லியமாக எழுதியுள்ளாள். இன்றும் இதை இதிகாசத்தில் ஒரு முக்கியப் பதிவாக ஏற்பதுண்டு.

தாள்ளபாக்க திருமலம்மா (திம்மக்கா), அன்னமய்யாவின் மனைவி. தெலுங்கு முதல் பெண் புலவர் இவர். 'சுபத்ரா கல்யாணம்' என்ற கவிதை நயம் காவியத்தை எழுதிய பெருமைக்குரியவள்.

தரிகோண்ட வெங்கமாம்பா, 18ஆம் நூற் றாண்டைச் சேர்ந்த இவர் திருவேங்கடமுடையான் மற்றும் நரசிம்மரின் பக்தை. பல காவியம், கவிதை, நாடகம் பக்தி ரசமாகவும், பல புராணங்களில் உள்ள தத்துவங்களையும் மிக எளிமையாக்கி எழுதி உள்ளார். வித்யோத்தமா, 4–5 ஆம் நூற்றாண்டை சேர்ந்த காளிதாசரின் மனைவி. 12 வயதில் எல்லா கலைகளிலும் ஞானம் பெற்றவள். அரசரே, தன் மகளின் அறிவை மிஞ்சிய ஒரு ஞானியைத் தேட வேண்டும் என்று வேண்டினான். அவளுடைய அறிவை பல புலவர்கள் ஏற்காததால் பொறாமை யால், முதலில் ஒன்றும் அறியாத காளிதாசனை போட்டியில் வெற்றி பெற வைத்து கேலி செய்தனர். காளியின் அருளால், காளிதாசர், ஞானம் பெற்றார். காளிதாசருக்கு ஏற்றவளாகத் திகழ்ந்தாள். அறிவாற் றல் மிக்கவளாய் திகழ்ந்தாள். காக்கைப்பாடினியார் கடைச்சங்ககாலப் பெண்பால் புலவர்களில் ஒருவர். சங்கநூல் தொகுப்பில் இவரது பாடல்கள் 12 உள்ளன. காக்கை பாடினியம் செய்யுள் இலக்கணம் ஓர் தமிழ் இலக்கண நூல் ஆகும்.

வேதம் "மாத்ரு தேவோ பவ" என்று மாதாவை தான் கூறுகிறது. வேதத்தை "வேத மாதா" என்றும் போற்றுவார்கள். சனாதன தர்மத்தில் கல்வி, செல்வம், வீரம் ஆகிய வாழ்வின் மிக முக்கியமான தேடுதலை சரஸ்வதி, லட்சுமி, பார்வதி தேவியரிடம் வேண்டி பெற்றுக்கொள்ளவேண்டும் என்பது வழக்கம். நவராத்ரி, நோன்பு, விரதம் போன்ற எல்லா பண்டிகைகளும் பெண்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவையே. இவ்வாறு பெண்கள் இல்லை என்றால் இவ்வுலகம் தழைக்காது என்பது திண்ணம்.

## ஸப்தகிரி ஜனவரி 2026 விடைகள்

1. மார்கழி நோன்பு.
2. கொடிமரம்.
3. ஸ்ரீகிருஷ்ண பகவான்.
4. செஞ்சுலக்ஷ்மி.
5. திருவரங்கம்.
6. நந்தகோபன்.
7. விஷ்ணு சகஸ்ரநாமம்.
8. பொங்கல் பண்டிகை.
9. வசந்த பஞ்சமி.
10. பாரதியார்.
11. பரியாயத் திருவிழா.
12. பிரதிவாதி பயங்கரம் அண்ணா.
13. ஆண்டாள்.
14. இராமானுஜர்.
15. இரத ஸப்தமி.






## போட்டி எண். 42

**சரியாகப் பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றிப் பெற்றவர்கள்**

1. செல்வி பா.எ. லோகப்பிரியா
   நசரத்பேட்டை, காஞ்சிபுரம்.
2. செல்வி சி. தேவரதி
   சத்தியமங்கலம், ஈரோடு.
3. செல்வி ஜி.மாலினி
   தடாகம் சாலை,
   கோவை.



# புது வருடப் பிறப்பு (தெலுங்கு) யுகாதி











வஸந்த காலத்தில் முதல். சித்திரை மாதத்தில் முதல். சுக்லபக்ஷம், திதியிலும் முதல் அதாவது ஆதி. இத்தனை ஆதிகளும் சேர்ந்து வரும் நாள்தான் யுகாதி. இது இயற்கை பண்டிகை என்பர். அதனால் தெலுங்கு மாத சைத்ர, சுத்த (வளர்பிறை) பிரதமை அன்று யுகாதி பண்டிகையைக் கொண்டாடுவர்.

யுகாதியன்று ஆண்டின் பலனைக் கேட்பதே பஞ்சாங்க ஸ்வரணம் ஆகும். புதிய வருடத்தில் தேசத்திற்கும், மாநிலத்திற்கும் வரும் ஏற்றத்தாழ்வுகள், வெற்றித் தோல்விகள், பயிர்களின் வளர்ச்சி, மனிதர்களின் அவரவர் நட்சத்திரங்களை அனுசரித்து நடக்கப் போகின்றவை, கிரஹணங்கள் போன்ற அனைத்து விஷயங்களும் பஞ்சாங்கத்தின் வாயிலாகத் தெரிகின்றது. பஞ்சாங்க ஸ்ரவணம் மனிதனுக்கு அந்த ஆண்டு காலத்தின் வெற்றி தோல்விகள், எதிர்படும் கஷ்டங்களை முன்பே அறிவிப்பதால் அவர்கள் தகுந்த ஜாக்கிரதையுடன் இருக்க அவகாசமுள்ளது. யுகாதியன்று புரோகிதர்களின் மூலமாக பஞ்சாங்கத்தைப் படிக்க வைத்து வருடத்தின் பெயர், வருடத்தின் அதிபதி, வருண தேவதை, தனதானியங்களின் அதிதேவதைகளின் பெயர்கள் போன்றவற்றைக் கேட்க வேண்டும் என்றும், அந்த நாளின் பஞ்சாங்க ஸ்ரவணத்தினால் கங்காஸ்நானம் செய்த பலன் கிடைக்கும் என்பதும் சாஸ்த்திர கூற்று.

யுகாதி என்றாலே நினைக்கும்போதே ஆறு சுவைகளான இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, கார்ப்பு, துவர்ப்பு, கசப்பு ஆகிய சுவைகள் நிறைந்த யுகாதி பச்சடி தான் நினைவிற்கு வரும். இதை உட்கொண்டால் நம் உடலில் ஏற்படும் வாதம், பித்தம், கபம் போன்ற உபாதைகள் நீங்கி வருடம் முழுவதும் நாம் ஆரோக்கியமாக வாழலாம்.



அனைவருக்கும் தெலுங்கு (யுகாதி) வருடப் பிறப்பு நல்வாழ்த்துக்கள்!

அனைவருக்கும் திருவேங்கடவனின் திருவருள் பரிபூரணமாகக்கிட்ட ஸப்தகிரி மனமாற வாழ்த்துகிறது.

# சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்



இராமபிரான் அவதாரச் சிறப்பை எடுத்துரைக்கும் ஜெகம் புகழும் புண்ணிய காதை இராமாயணக் காவியமாகும். இதன் நாயகன் இராமபிரான் ஆவார். இவர் தனது தந்தையின் ஆணைக்குப் பணிந்து தனது தம்பி இலக்குமணன் மற்றும் மனைவி சீதாபிராட்டியார் உடன் வன வாசத்துக்குச் செல்லும் சமயம், கங்கை நதியைக் கடக்கப் படகோட்டியாக வந்து உதவி புரிந்தவன் வேட்டுவர் குலத் தலைவன் குகனாவான். இவனை கம்ப இராமாயணம் குகப்படலத்தில் உயர்த்தி, வாழ்த்தி மகிழ்கிறது.

*பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்*
*இறைவனடி சேராதார்*

இக்கருத்தின்படி மானுடராகப் பிறந்தவர்கள் தங்களின் பிறவிப் பெருங்கடலைக் கடந்து இறைவனின் திருவடிகளை அடைய நல் வழிகாட்டியாக ஞான குருவானவர் வருவது போல் மானுட அவதாரமான இராம பிரானுக்கு கங்கை நதியைக் கடக்கப் படகு ஓட்டி உதவி செய்தவர் குகன் என்று சொன்னால் அது மிகையாகாது.

தனது அவதாரச் சிறப்பினை எடுத்துக்காட்ட அரச வாழ்விலிருந்து விலகி (கங்கையின் இக்கரையிலிருந்து) மரவுரி உடுத்தி சாதாரண மானுட வாழ்வியலை வனத்தில் தொடங்க அக்கரைக்குச் செல்ல











# படகு ஓட்டும் குகன்

உதவிய, அன்பின் மறு வடிவாக ஒளிர்ந்த குகனைப் பார்த்து இராமபிரான், குகனே நீ எனது உயிர் போன்றவன். உன்னைக் கண்டு தோழமை கொள்வதற்கு முன் உடன் பிறந்தவர்களாக நால்வர் இருந்தோம். இப்போது உன்னோடு சேர்த்து ஐவராகி விட்டோம் என்று கூறி மனம் மகிழ்ந்தார் என்று கம்ப இராமாயணம் எடுத்து உரைக்கிறது. திருமங்கையாழ்வார்,

*ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது இரங்கி*
*மற்றவற் கின்னருள் சுரந்து,*
*மாழைமான் மடநோக்குஇன்தோழி உம்பி*
*எம்பி என்று ஒழிந்திலை உகந்து,*
*தோழன் நீ எனக்கு இங்கொழி என்ற*
*சொற்கள்*
*வந்து அடியேன் மனத்து இருந்திட....*

என்று தனது பாசுரத்தில் அருளிச் செய்துள்ளார். இராமாயண காவியத்தில் இராமனுக்குக் கூடப் பெருமாள் என்ற பட்டம் கிடையாது. இரண்டு பேர்களுக்குத் தான் அது உண்டு. ஒருவர் இளைய பெருமாள் இலக்குமணன், மற்றொருவர் குகப் பெருமாள் என்பது குறிப்பிடத்தக்கது

"குகனோடும் ஐவரானோம்" என்று கம்ப இராமாயணம் இயம்பும். குகனின் சிறப்பை எடுத்துரைக்கும்.

படகு ஓட்டும் குகனின் குறுஞ்சிற்பங்கள் அமையப்பெற்றுள்ள சில ஆலயங்கள்: கங்கை நதியில் குகன் ஓடத்தை இயக்க அதில் சக்ரவர்த்தித் திருமகன் இராமன், அன்னை ஸ்ரீசீதா உடன் இலக்குமணன் ஆகியோர் எழுந்தருளி உள்ள திருக்காட்சியுடைய மேற்காணும் குறுஞ் சிற்பங்கள் குடந்தை கீழ்க்கோட்டம் நாகேஸ்வரன் திருக்கோயிலிலும், அதே காட்சி உடைய சித்திரம் கும்பகோணம் இராமசுவாமி திருக்கோயிலிலும் மற்றும் இவ்வாலயத் தேரில் மரச்சிற்பமாகவும் உள்ளது.

நாகேஸ்வரர் கோயிலில் உள்ளது போல் கண்டபாதத்தில் உள்ள குறுஞ்சிற்பம். திருச்சி திருமங்கலம் சாமவேதீஸ்வரர் திருக்கோயில் மற்றும் உலகாபுரம் விஷ்ணு கோயிலிலும் உள்ளது.

அதே வடிவுடைய தூண் சிற்பம் – திருநெல்வேலி ஸ்ரீஇராஜ கோபால ஸ்வாமி திருக்கோயிலிலும் உள்ளது குறிப்பிடத் தக்கது.

இதுபோல் வரலாற்றுச் சிறப்புகளையும் பல இதிகாசங்களையும் எடுத்துரைக்கும் குறுஞ் சிற்பங்கள் பழமையான ஆலயங்களில் நிறைந்து உள்ளது. அக்கற்சிற்பங்களை ரசிப்போம். கலைகளைப் பாதுகாப்போம்.

**– படிமக்கலைஞர் திரு. ப.சரவணன்,**
**குடந்தை, 86108 19456**


## STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT

## SAPTHAGIRI

**(MONTHLY)**
**FORM IV**
*See Rule 8*

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | : | TIRUPATI |
| 2. Periodicity of its Publication | : | Monthly |
| 3. Printer's Name | : | Sri R. Vijayakumar, B.A., B.Ed., |
| Whether citizen of India | : | Yes |
| Address | : | Dy.E.O.,T.T.D.Press, K.T.Road, Tirupati. |
| 4. Publisher's Name | : | Dr. V.G.Chokkalingam, M.A., Ph.D., P.G.Dip. in JMC |
| Whether citizen of India | : | Yes |
| Address | : | Chief Editor (FAC) Chief Editor Office,2nd Floor, T.T.D.Press Building,K.T. Road, Tirupati. |
| 5. Editor's Name | : | Dr. V.G.Chokkalingam, M.A., Ph.D., P.G.Dip. in JMC |
| Whether citizen of India | : | Yes |
| Address | : | Chief Editor Office,2nd Floor, T.T.D.Press Building,K.T. Road, Tirupati. |
| 6. Name and address of individuals who own the News paper and partners or share holders holding more than one percent of the Total Capital | } | Tirumala Tirupati Devasthanams |

*I, V.G. Chokkalingam, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.*

TIRUPATI
Date : 28-02-2026

**(Sd.) Dr. V.G.Chokkalingam**
*Signature of the Publisher*


ஸ்ரீநிவாசமங்காபுரம்
ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி
புஷ்ப யாகம்
15-03-2026



# கூரத்தாழ்வான் அருளிச் செய்த

# ஸ்ரீ ஸ்தவம்

கூரத்தாழ்வானால் அருளிச் செய்யப்பட்ட ஸ்ரீஸ்தவம் பெரியபிராட்டியாரின் பெருமைகளும், மகிமைகளும், கருணையும், அருள்புரியும் தன்மையும் விவரிக்ககின்றன. ஸ்ரீஸ்தவத்தைப் பாராயணம் செய்து வந்தால் வாழ்வில் மகிழ்ச்சியும், சகல ஐச்வர்யங்களும் கிட்டும் என்பது நம்பிக்கை. ஸப்தகிரி வாசகர்களும் லக்ஷ்மி ஜெயந்தி நாளில் இச்சுலோகத்தைப் பாராயணம் செய்து தாயாரின் இன்னருளைப் பெற்றிடுங்கள்.

ஸ்வஸ்தி ஸ்ரீர்திசதாதசேஷ ஜகதாம் ஸர்க்கோபஸர்க்க ஸ்திதீ:
ஸ்வர்க்கம் துர்க்கதிமா பவர்க்கிக பதம் ஸர்வஞ்ச குர்வந் ஹரி: ।
யஸ்யா வீக்ஷ்ய முகம் ததிங்கிதபரா: தீநோ விதத்தேகிலம்
க்ரீடேயம் கலு நாந்ய தாஸ்ய ரஸதா ஸ்யாதை கரஸ்யாத் தயா ॥ 1

ஸ்ரீமந்நாராயணன் படைத்தல், அழித்தல், காத்தல், மோட்சம் அளித்தல் என யாவும் பிராட்டியின் அழகான முகக்குறிப்பு இணக்கத்திலேயே செய்கிறான். பகவானுடன் எப்போதும் சேர்ந்தே இருக்கின்ற பிராட்டியே! மிகுந்த பக்தியும், ஞானமும் அளித்து என்னைக் காத்தருள வேண்டும்.

ஹே ஸ்ரீர்தேவி ஸமஸ்தலோக ஜநநீம் த்வாம் ஸ்தோதுமீஹா மஹே
யுக்தாம் பாவய பாரதீம் ப்ரகுணய ப்ரேம ப்ரதாநாம் தியம் ।
பக்திம் பந்தய நந்தயாச்ரிதமிமம் தாஸம் ஜனம் தாவகம்
லக்ஷ்யம் லக்ஷ்மி கடாக்ஷ வீசிவிஸ்ருதேஸ் தே ஸ்யாம சாமீ வயம் ॥ 2

பெரியபிராட்டியே! உனது பெருமைகளைப் புகழ்வதற்கான ஞானத்தை அருள வேண்டும். உன் திருவடியில் சரணடைந்து உனக்கு கைங்கர்யம் செய்பவனாக ஏற்றுக்கொண்டால் மிகுந்த ஆனந்தம் கொள்வேன். தாயே! உன் கருணைமிகு பார்வையில் அருள்புரிதல் வேண்டும்.

ஸ்தோத்ரம் நாம கிமாமநந்தி கவயோ யத்யந்யதீயாந் குணாந்
அந்யத்ர த்வஸதோதிரோப்ய பணிதிஸ் ஸா தர்ஹி வந்த்யா த்வயி ।
ஸம்யக் ஸத்யகுணாபி வர்ண நமதோ ப்ரூயு: கதம் தாத்ருசீ
வாக்வாசஸ்பதி நாபி சக்யரசநா த்வத்ஸத் குணார்ணோநிதௌ ॥ 3

பிராட்டியே! உன்னிடத்தில் யாவும் உள்ளன. உன் திருக்கல்யாண குணங்களை வர்ணிக்க பிரகஸ்பதியாலும் முடியாது. அப்படிப்பட்ட உனது உயர்ந்த திருக்கல்யாண குணங்களைப் பாடிக் கொண்டே இருக்கலாம். உன் அருள் இருந்தால் மட்டுமே இது சாத்தியமாகும்.

யே வாசாம் மநஸாம் ச துர்க்ரஹதயா க்யாதா குணாஸ் தாவகா:
தாநேவ ப்ரதி ஸாம்பு ஜிஹ்வ முதிதா ஹை மாமிகா பாரதீ ।
ஹாஸ்யம் தத்து ந மந்மஹே ந ஹி சகோர்யேகாகிலாம் சந்த்ரிகாம்
நாலம் பாதுமிதி ப்ரக்ருஹ்ய ரஸநாமாஸீத ஸத்யாம் த்ருஷி ॥ 4

மஹாலக்ஷ்மித் தாயே! வார்த்தைகளால் விவரிக்க முடியாத அளவிற்குப் பிரபலமான உன்னுடைய திருக்கல்யாண குணங்களை விவரிப்பதில் எனக்கு மகிழ்ச்சியே. நிலவொளியை முழுமையாகக் குடிக்க முடியாமல் முடிந்தவரை உறிஞ்சும் சகோர பறவையைப் போன்று நானும் உன் புகழைப் பாடி மகிழ்வேன்.

க்ஷோதீயா நபி துஷ்ட புத்திரபி நிஸ்ஸ்நேஹோப்யநீஹோபி தே
கீர்த்திம் தேவி லிஹந்நஹம் ந ச பிபேம் யஜ்ஞோ ந ஜிஹ்ரேமி ச ।
துஷ்யேத் ஸா து ந தாவதா ந ஹிஸுனா லீடாபி பாகீரதீ
துஷ்யேத் ச்வாபி ந லஜ்ஜதே ந ச பிபேத் யார்திஸ் து சாம்யேச்சுந: ॥ 5

பிராட்டியே! உன்னைப் போற்றிப் பாடுமளவிற்கு எனக்கு ஞானமில்லை. இருந்தாலும் உன்னைப் பாடிப் போற்றுவதால் உன்னுடைய புனிதத்துவம் குறைந்து விடுவதில்லையன்றோ. புனிதமான கங்கா தீர்த்தத்தை நாயினால் நக்கி குடிக்கப்பட்டாலும் தீர்த்தத்தின் புனிதம் கெட்டுப் போவது இல்லை. அடியேனும் உன்னை பாட முற்பட்டால் அதை ஏற்று, என்னையும் காத்தருள வேண்டும்.

ஐச்வர்யம் மஹாதேவ வால்பமதவா த்ருச்யேத பும்ஸாம் ஹி யத்
தல்லக்ஷ்ம்யாஸ் ஸமுதீக்ஷணாத் தவ யதஸ் ஸார்வத்ரிகம் வர்த்ததே ।
தேநைதேந ந விஸ்மயேமஹி ஜகந்நாதோபி நாராயண:
தந்யம் மந்யத ஈக்ஷணாத் தவ யத: ஸ்வாத்மாநமாத்மேச்வர: ॥ 6

பிராட்டியே! பூலோகம், ஸ்ரீ வைகுந்தம் எனும் இரு செல்வங்களும் உன் அருளால் அன்றோ கிடைக்கப் பெற்றன. ஸ்ரீமந்நாராயணனும் உன் அருளால்தான் தன்யனானோம் என எண்ணுகிறான்.

ஐச்வர்யம் யதயச்சஷ பும்ஸி யதிதம் ஸௌந்தர்ய லாவண்யயோ:
ரூபம் யதசேஷ ஹி மங்களம் கிமபி யல்லோகே ஸதித்யுச்யதே ।
தத் ஸர்வம் த்வததீநமேவ யதத: ஸ்ரீரித்யபேதேந வா
யத்வா ஸ்ரீமதிதீத்ருசேந வசஸா தேவி ப்ரதாமச்நுதே ॥ 7

பிராட்டியே! இவ்வுலகில் ஐச்வர்யங்கள் யாவும் உன் சம்பந்தத்தில் அடங்கியதாக உள்ளது. அவை யாவும் 'ஸ்ரீ'யை உடையது என்ற சொல் மூலமாகவோ அல்லவா பெருமை அடைகின்றன.

தேவி த்வந்மஹிமாவதிர் ந ஹரிணா நாபி த்வயா ஜ்ஞாயதே
யத்யப்யேவமதாபி நைவ யுவயோஸ் ஸர்வஜ்ஞதா ஹீயதே ।
யந்நாஸ்த்யேவ ததஜ்ஞதாமநுகுணாம் ஸர்வஜ்ஞதாயா விது:
வ்யோமாம்போஜமிதந்தயா கில விதந் ப்ராந்தோயமித்யுச்யதே ॥ 8

பிராட்டியே! உமது பெருமையின் எல்லையை எம்பெருமானாலும் அறியமுடிவதில்லை. உன்னாலும் அறியப்படுவதில்லை. ஆனாலும், இருவரும் அனைத்தையும் அறியும் தன்மையில் எவ்விதமான குறையும் இல்லாமல் உள்ளீர். எந்த ஒரு பொருளையும் அறிந்து கொள்ள முயலாமல் இருப்பதையே அனைத்தும் அறிந்த தன்மை எனச் சான்றோர்கள் அறிவர். 'ஆகாயத் தாமரை' உள்ளதாக அறிபவன் 'பைத்தியக்காரன்' என்றே உலகத்தினரால் கூறப்படுகிறான்.

லோகே வநஸ்பதி ப்ருஹஸ்பதி தாரதம்யம் யஸ்யா: ப்ரஸாத பரிணாமம் உதாஹரந்தி ।
ஸா பாரதீ பகவதி து யதீயதாஸீ தாம் தேவ தேவ மஹிஷீம் ச்ரியம் ஆச்ரயாம: ॥ 9

இவ்வுலகில் ஒருவன் ஜடப் பொருளாகவும், அறிவாளியாகவும் பிறப்பது சரஸ்வதியின் அருளே என்பர். அந்த சரஸ்வதியால் பூஜிக்கத்தகுந்த பிராட்டியைச் சரண் அடைவோம்.

யஸ்யா: கடாக்ஷ ம்ருது வீக்ஷண தீக்ஷணேந ஸத்யஸ் ஸமுல்லஸித பல்லவ முல்லலாஸ ।
விச்வம் விபர்யயஸமுத்த ப்ராக்தாம் தேவ தேவ மஹிஷீம் ச்ரியம் ஆச்ரயாம: ॥ 10

பிரளய காலத்தில் தாயாரின் அருள் கிட்டாத காரணத்தினால் துவண்டு போன இவ்வுலகம் இவளது கடைக்கண் பார்வை பட்டவுடன் மீண்டும் தழைத்து விளங்கியது. வங்கக் கடல் கடைய அமுதினில் பிறந்தவள். தேவர்களின் தலைவனான எம்பெருமானின் பட்டத்து ராணியான பிராட்டியை நாம் சரண் அடைவோம்.



யஸ்யா: கடாக்ஷ வீக்ஷா க்ஷண லக்ஷம் லக்ஷிதா: மஹேசாஸ்ஸ்யு: ।
ஸ்ரீரங்கராஜ மஹிஷீ ஸா மாமபி வீக்ஷதாம் லக்ஷ்மீ: ॥ 11

பிராட்டியின் கடைக்கண் பார்வைக்கு ஒரு நொடிப்பொழுது இலக்காகப் பெற்றவர்கள் பெரும் செல்வம் பெற்றவர்கள் ஆவர். அப்படிப்பட்ட, பிராட்டி என்னையும் தனது கடைக்கண் கொண்டு பார்க்கவேண்டும்.





திரு.முத்தாட ரவிச்சந்திரா அவர்கள் 1995 ஆம் ஆண்டு இந்திய ஆட்சி பணிகள் தேர்வில் தேர்ச்சி பெற்று, 1996 ஆம் வருட இந்திய ஆட்சி பணி பிரிவைச் சேர்ந்தவராவார். இயந்திரத் துறையில் பொறியியல் பட்டம் பெற்ற இவர் ஆந்திர மாநிலத்தில் உதவி ஆட்சியர், ஆசிஃபாபாத் – அதிலாபாத் மாவட்டம், திட்ட இயக்குநர், டிபிஏபி – சித்தூர், மாவட்ட இணை ஆட்சியர் – ஆர்ஆர் ஹைதராபாத், மாவட்ட ஆட்சியர் – நெல்லூர், மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட மாஜிஸ்ரேட் – சித்தூர், துணைத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், ஏபிஹெச்எம்&ஹெச்ஐடிசி – ஹைதராபாத், மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட மாஜிஸ்ரேட் – கிழக்கு கோதாவரி, உறுப்பினர் செயலாளர் – ஆந்திரப் பிரதேச மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், நிர்வாக இயக்குநர், ஏபிஹெச்எம்&ஹெச்ஐடிசி, அரசு செயலாளர் – நிதி (செலவினம்), அரசு செயலாளர் – சமூக நலன், அரசு செயலாளர் – பழங்குடியினர் நலன், அரசு செயலாளர் (கோவிட்–19 மேலாண்மை மற்றும் தடுப்பூசி), சுகாதாரம், மருத்துவம் மற்றும் குடும்ப நலன், அரசு முதன்மைச் செயலாளர் (கோவிட்–19 மேலாண்மை மற்றும் தடுப்பூசி) சுகாதாரம், மருத்துவம் மற்றும் குடும்ப நலன், அரசு முதன்மைச் செயலாளர் – பெண்கள், குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் மூத்த குடிமக்கள் எனப் பல முக்கிய நிர்வாகப் பதவிகளை வகித்துள்ளார். தற்போது முதலமைச்சரின் சிறப்பு தலைமைச் செயலாளராகவும் பணி புரிந்து வருகிறார்.

அண்மையில் ஆந்திர மாநில அரசு இவரை தி.தி.தேவஸ்தான செயலாட்சித் தலைவராக (முழு கூடுதல் பொறுப்பு) நியமித்தது. 06–02–2026 அன்று திருவேங்கடமுடையானைத் தரிசித்து விட்டு தி.தி.தே. செயலாட்சித் தலைவராகவும், தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுவின் பதவி அடிப்படையில் உறுப்பினராகவும் பதவி பொறுப்பினை ஏற்றார். கூடுதல் செயலாட்சித்தலைவர் திரு.சிஎச்.வெங்கைய சௌதரி ஐ.ஆர்.எஸ்.அவர்கள், இணைச்செயலாட்சித்தலைவர் (திருப்பதி) திரு.வி.வீரபிரம்மம் ஐ.ஏ.எஸ். அவர்கள், இணைச்செயலாட்சித்தலைவர் (கல்வி மற்றும் சுகாதாரம்) டாக்டர் எ.சரத் ஐ.ஏ.எஸ். (ஓய்வு) அவர்கள், தலைமை கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு அதிகாரி திரு.கே.வி.முரளிகிருஷ்ணா ஐ.பி.எஸ். அவர்கள் உடன் இருந்தனர். "ஸப்தகிரி" மாத இதழின் சிறப்பு ஆசிரியராக விளங்கக்கூடிய புதிய செயலாட்சித் தலைவரை ஸப்தகிரி அன்புடன் வரவேற்கின்றது.



25–01–2026 அன்று
தி.தி.தேவஸ்தானத்தின் புதிய இணைச் செயலாட்சித் தலைவராக (கல்வி மற்றும் சுகாதாரம்) பதவி பொறுப்பினை ஏற்கும் டாக்டர் எ.சரத் ஐ.ஏ.எஸ். (ஓய்வு) அவர்கள்

# தி.தி.தேவஸ்தானம் நிர்வகிக்கும்

# ஸ்ரீராமர் திருக்கோயில்கள்

**திருமதி விஜயலட்சுமி சுப்பிரமணியம்,**
**கல்லிடைக்குறிச்சி, 98425 39275**

ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் அவதாரங்களில் திரேதா யுகத்தில் நடைபெற்ற ஸ்ரீ ராமாவதாரம் தலைசிறந்த ஒரு அவதாரமாகப் போற்றி வழிபடப் படுகிறது. ஏகபத்னி விரதனாகத் திகழ்ந்த ஸ்ரீ ராமர் அவரது இனிய நற்குணங்களால் புருஷோத்தமன் என்று அனைவராலும் போற்றப்படுகிறார். இந்த அற்புத அவதாரத்திற்குரிய ஆலயங்கள் ஸ்ரீராம பிரானின் அவதாரத் தலமான அயோத்தியா முதல் கன்னியாகுமரி வரை ஏராளமாக அமைந்துள்ளன. இந்தியத் திருநாட்டில் ஏறக்குறைய 2000க்கும் மேற்பட்ட ஸ்ரீராமபிரான் ஆலயங்கள் அமைந்து உள்ளதாகக் கூறப்படுகிறது.

ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு மிகப் பிரபலமான இராமர் ஆலயம் இருப்பது குறிப்பிடத் தக்கது. ஜம்முவில் உள்ள ஸ்ரீ ரகுநாத் ஆலயம், அமிர்தசரஸ் ஸ்ரீ ராம் தீர்த்தா ஆலயம், உத்திரப் பிரதேசம் அயோத்தியா ஸ்ரீ ராம்லல்லா என்ற பால ராமர் மந்திர், மத்தியப் பிரதேசம் ஊர்ச்சா ஸ்ரீ ராம்ராஜா ஆலயம், பீஹார் கேசரியா ஸ்ரீ விராட் ராமாயண மந்திர் (தற்போது மிகப் பிரம்மாண்டமான அளவில் கட்டப்பட்டு வருகிறது), மஹாராஷ்ட்ரா நாசிக்கில் உள்ள காலாராம் மந்திர், தெலங்கானா மாநிலம் பத்ராசலம் ஸ்ரீ சீதா ராமச்சந்திர ஸ்வாமி ஆலயம், ஆந்திர மாநிலம் ஒண்டிமிட்டா ஸ்ரீ கோதண்ட ராமர் ஆலயம், கர்நாடகா சிக்கமக ளூர் ஸ்ரீ கோதண்ட ராமஸ்வாமி ஆலயம், தமிழ் நாடு கும்பகோணம் ஸ்ரீ ராமஸ்வாமி ஆலயம், கேரள மாநிலம் த்ரிப்பரையார் ஸ்ரீ ராமர் ஆலயம் போன்றவை இந்தியாவில் ஸ்ரீ ராமனுக்கு அமைந் துள்ள மிகப் பிரபலமான ஆலயங்கள் ஆகும்.



கலியுகத்தில் பக்தர்களின் துயர் துடைக்க ஸ்ரீ மஹாவிஷ்ணு வேங்கடேசப் பெருமாளாக அவதரித்த அற்புதத் தலமான திருமலை திருத் தலம் கலியுக வைகுண்டமாக அனைவராலும் போற்றப்படுகிறது. திருமலை திருப்பதி தேவஸ் தான நிர்வாகத்தின் கீழ்க்காணும் ஆலயங்கள் மிகச் சிறப்பான முறையில் பராமரிக்கப்படும் ஸ்ரீ ராமபிரான் ஆலயங்கள் ஆகும்.

### திருமலை ஆலயத்தில் உள்ள ஸ்ரீ ராமர் மேடை ஸ்ரீ கோதண்டராமர்

கலியுக வைகுந்தமான திருமலைத் திருத் தலத்தில் கலியுகத் தெய்வமாக எழுந்தருளி இருக்கும் திருவேங்கடமுடையான் கர்பாலய மூலவருக்கு இடப்புறம் ஸ்ரீ கோதண்டராமர், சீதா, லட்சுமணன், அனுமன் சமேதராக பஞ்சலோக உற்சவ விக்கிரகங்களாக மேடையில் எழுந்தரு ளியிருக்கிறார். ஸ்ரீராமபிரான் இடக்கையில் வில்லும் வலக்கையில் அம்புடன் தலையைச் சற்றே வலப் புறம் சாய்த்து அருட்காட்சி தரும் இந்த மூர்த்தியின் கம்பீரமும், அழகும் பார்த்து பரவசப்படாத பக்தர்களே இருக்க முடியாது.

விஸ்வாம்பரர் என்ற முனிவர் தான் வழிபட்டு வந்த ஸ்ரீராமர், சீதை, லட்சுமணன், அனுமன், சுக்ரீவன், ஜாம்பவான் ஆகியோரின் பஞ்சலோக திருமேனிகளை திருவேங்கடவனின் ஆணைப்படி கொண்டு வந்து ஸ்ரீ ராமாநுஜரிடம் அளிக்கவே, உடையவர் ஸ்ரீராமரை திருவேங்கடவன் கருவறை யின் இடப்புற மேடையில் பிரதிஷ்டை செய்தார் என்றும் ஒரு வரலாறு கூறப்படுகிறது. ஸ்ரீ ராம பிரானே திருவேங்கடவனாக இங்கு அருள்புரிவ தாக பக்தர்கள் நம்புகின்றனர்.

இந்த கோதண்டராமருக்கு ஸ்ரீ ராமநவமியின் போது ஆஸ்தானம் நடத்தப்படுகிறது. ஸ்ரீ ரங்க நாயகலு மண்டபத்தில் சிறப்புத் திருமஞ்சனமும், தொடர்ந்து அனுமன் வாகனத்தில் திருவீதி உலா, பாலகாண்ட பாராயணம் போன்றவை நடைபெறு கின்றன. சைத்ர சுத்த தசமி நாளன்று நடைபெறும் பட்டாபிஷேக வைபவத்தில் அங்கதன், சுக்ரீவன் போன்றோரும் எழுந்தருளுகின்றனர். அன்று அயோத்யா காண்ட பாராயணம் நடைபெறுகிறது.

## ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமி ஆலயம், திருப்பதி

திருப்பதி இரயில் நிலையத்திலிருந்து சுமார் 2 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமி ஆலயம் புராண மற்றும் வரலாற்றுப் பின்னணிகளைக் கொண்டது. தி.தி.தே. கீழ் உள்ள இவ்வாலயம் சோழ மன்னர் காலத்தில் கட்டப்பட்டு விஜயநகர மன்னர்கள் ஆட்சியின் போது விரிவாக் கம் பெற்றுள்ளது.

கருவறையில் ஸ்ரீ சீதா, லட்சுமண சமேதராக ஸ்ரீ ராமபிரான் கோதண்டராம ஸ்வாமியாக எழுந்தருளி அருள்பாலிக்கிறார். இந்த ஆலயத்தை ஜாம்பவான் கட்டியதாகவும், பின்னர் துவாபர யுகத்தில் ஜனமேஜய மன்னன் சீரமைத்துக் கட்டியதாகவும் புராண வரலாறு தெரிவிக்கிறது.

கருவறையில் ஸ்ரீ கோதண்டராமர் சுமார் ஐந்து அடி உயரத்தில் ஸ்ரீ சீதா, லட்சுமணர் சகிதமாக மேற்கு திசை நோக்கி காட்சி தருகிறார். இங்கு வித்தியாச மாக ஸ்ரீ ராமபிரானின் வலப்புறத்தில் சீதா தேவியும், இடப்புறத்தில் லட்சுமணரும், அனுமன் இன்றி காணப்படுவது தனிச் சிறப்பாகும். பிற்காலத்தில் ஆலயத்தின் எதிரில் தனிச் சன்னதியில் அனுமனை எழுந்தருளச் செய்துள்ளனர். ஸ்ரீ விஷ்வக்சேனர்,



இராமாநுஜர், கருடன் சன்னதிகள் உள்ளன. இங்கு திருமலை போன்றே பஞ்ச பேர மூர்த்திகள் உள்ளனர். வைகானச ஆகம முறைப்படி பூஜைக ளும், விழாக்களும் நடைபெறும் இந்த ஆலயம் காலை 5 மணி முதல் இரவு 9 மணி வரை திறந்து வைக்கப்படுகிறது.

திருமலை திருவேங்கடவனின் ஆலயத்திற்கு நிகராக பக்தர்களால் இந்த ஸ்ரீ ராமர் போற்றி வழிபடப் படுகிறார். இராவண வதம் முடிந்து ஸ்ரீ ராமர் அயோத்தி திரும்பும்போது இப்பகுதிக்கு வந்ததாக வும், பின்னர் இங்கு வந்த ஜாம்பவான் இங்கிருந்த ஒரு குகையிலிருந்து ஒளி வீசுவதைக் கண்டு சென்று பார்க்க, ஸ்ரீ ராமபிரான் விக்கிரகத்தைக் கண்டு பெரு மகிழ்ச்சி அடைந்து அதை எடுத்து வந்து ஆலயம் கட்டி பிரதிஷ்டை செய்து வழிபட்டதாகவும் புராணங்கள் தெரிவிக்கின்றன. 1480 ஆம் ஆண்டு விஜயநகர ஆட்சியின் போது இந்தக் கோயில் விரிவாக்கம் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஸ்ரீ ராமநவமி, சீதா–ராமர் திருக்கல்யாணம், பட்டாபிஷேகம் போன்ற விழாக்கள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும். இந்த ஆலயத்தில் பேட்டை உற்சவம் என்ற பெயரில் ஒரு வித்தியாசமான விழா நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. ஒவ்வோர் ஆண்டும் மாக (ஜனவரி–பிப்ரவரி) மாத பௌர்ணமி நாளன்று ஸ்ரீ ராம, சீதா, லட்சுமண உற்சவ மூர்த்திகள் திருப்பதி நகரிலிருந்து சுமார் 8 கி.மீ. தொலைவில் உள்ள கூபுசந்திரபேட்டை என்ற கிராமத்திற்கு திருவீதி உலாவாக எழுந்தருளச் செய்து, அங்கு ஸ்நபன திருமஞ்சனமும், ஊஞ்சல் சேவையும் நடத்தப்படுகிறது. கிராமோற்சவம் என்று அழைக்கப்படும் இவ்விழாவின்போது கிராம மக்களும் தங்கள் ஊருக்கு வருகை தரும்

ஸ்ரீராமருடன் நெருங்கிய பக்திப் பிணைப்பு ஏற்படுவதாக நம்புகின்றனர்.

வருடாந்திர பிரம்மோற்சவம் பங்குனி மாதம் (மார்ச்–ஏப்ரல்) ஸ்ரீராமநவமியை முன்னிட்டு மிகச் சிறப்பாக நடைபெறும். ஸ்ரீ ராமநவமிக்கு அடுத்த நாள் சீதாராம திருக்கல்யாண உற்சவம், பட்டாபிஷேகம் போன்ற நிகழ்வுகளும் நடைபெறும். ஆலயத்தின் எதிரில் உள்ள இராமச்சந்திர குண்டா என்ற திருக்குளத்தின் கிழக்குக் கரையில் உள்ள மண்டபத்தில் கோவிந்தராஜ ஸ்வாமி திருகோயிலில் எழுந்து அருள் புரிந்து வரும் ஆண்டாள் நாச்சியார் மார்கழி மாத கடைசி ஏழுநாட்களுக்கு எழுந்து அருளுகிறார்.

## ஸ்ரீ கோதண்ட ராமஸ்வாமி ஆலயம், சந்திரகிரி

இங்குள்ள மலைக் குன்றில் சிவ பெருமானை நோக்கி சந்திரன் தவம் செய்த இடமாதலால் இப்பகுதி சந்திரகிரி என்று பெயர் பெற்றதாகக் கூறப்படுகிறது. இந்த ஊரில் 11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிரம்மாண்டமான கோட்டை புகழ் பெற்றது. சந்திரகிரி ஒரு கால கட்டத்தில் விஜய நகர மன்னர் ஆட்சியின் தலைநகரமாகத் திகழ்ந்துள்ளது. இந்த இராமாலயம் சோழ மன்னர்களால் கட்டப்பட்டு, பின்னர் விஜயநகர மன்னர்களால் திருப்பணிகளும், செய்யப்பட்டுள்ளன.

ஸ்ரீ ராமபிரான், சீதா தேவி மற்றும் லட்சுமணரோடு இப்பகுதிக்கு விஜயம் செய்ததைக் கொண்டாடும் வகையில் விஜயநகர ஆட்சியாளர்களால் இங்கு ஸ்ரீ ராமபிரானுக்கு ஆலயம் எழுப்பப்பட்டதாக வரலாறு தெரிவிக்கிறது. கருவறையில் ஸ்ரீராமர், சீதா தேவி, லட்சுமணன், பரதன் மற்றும் சத்ருக்னன், இரு புறங்களிலும் கருடன், அனுமன் காட்சி தருகின்றனர். பெரிய கோபுரங்களுடன் திகழும் இவ்வாலயம் திருப்பதியிலிருந்து சுமார் 13 கி.மீ. தொலைவில் அமைந்து உள்ளது.







காலை 5.00 மணி முதல் மதியம் 12.30 மணி வரையிலும், மாலை 5.30 மணி முதல் 8.00 மணி வரையிலும் நடை திறந்து வைக்கப்படுகிறது.

## ஸ்ரீ பட்டாபிராம ஸ்வாமி ஆலயம், வாயல்பாடு (வால்மீகிபுரம்)

திருப்பதியிலிருந்து சுமார் 100 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள வாயல்பாடு ஸ்ரீ பட்டாபிராம ஸ்வாமி ஆலயத்தை திரேதாயுகத்தில் ஜாம்பவான் நிர்மாணித்ததாகத் தலபுராணம் தெரிவிக்கிறது. மஹரிஷி வால்மீகி, ஒரு புற்றில் (வல்மீகம்) ராமர் மற்றும் பரிவார விக்கிரகங்களைக் கண்டெடுத்தார் என்றும், பின்னர் ஜாம்பவானால் ஆலயம் கட்டப்பட்டது என்றும் கூறப்படுகிறது. வால்மீகி முனிவரின் நினைவைப் போற்றும் வகையில் இது வால்மீகிபுரம் என்று அழைக்கப்பட்டு, பின்னர் இங்கு சுற்றிலும் நெல் வயல்கள் சூழ்ந்துள்ளதால் வயல்பாடு என்ற பெயரைப் பெற்றது. தற்போது மக்கள் வாயல்பாடு என்று அழைக்கின்றனர்.

இத்தலத்தில் ஸ்ரீ ராமபிரான் சீதா தேவி, லட்சுமணர், பரதன், சத்ருக்னர் மற்றும் அனுமனோடு ஒரே பீடத்தில் பட்டாபிஷேகத் திருக்கோலத்தில் காட்சி தருகிறார்.

கருவறையில் இராமபிரான் வடக்கு நோக்கி, கோதண்டமின்றி கட்கம் என்ற குறுவாள் ஏந்தி பட்டாபிஷேகக் கோலத்தில் காட்சி தருவது தனிச் சிறப்பாகும். பாஞ்சராத்ர ஆகமப்படி நித்ய பூஜைகளும், உற்சவங்களும் நடைபெறுகின்றன. ஸ்ரீ சீதா தேவியின் திருநட்சத்திரமான வைசாக பூச நட்சத்திரத்தன்று திருக்கல்யாண உற்சவம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. பிரம்மோற்சவத்தின் ஆறாவது நாள் திருக்கல்யாணம் முடிந்து, ஸ்ரீ பட்டாபிராமர் திருவீதி உலா வருகிறார். ஸ்ரீ ராமர் பட்டாபிஷேக வைபவம் சிராவண மாதம் (ஆகஸ்டு–செப்டம்பர்)

சுக்ல பஞ்சமி முதல் சப்தமி வரை மூன்று நாட்கள் வெகு விமரிசையாக நடைபெறுகிறது.

திருப்பதியிலிருந்து சுமார் 90 கி.மீ. தொலைவில் உள்ள இவ்வாலயம் காலை 5.30 மணி முதல் இரவு 8.00 மணி வரை நடை திறந்து வைக்கப்படுகிறது.

## ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமி ஆலயம், ஒண்டிமிட்டா

ஆந்திர மாநிலம் கடப்பா மாவட்டத்தில் உள்ள ஒண்டிமிட்டா ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமி ஆலயம் இந்தியாவில் உள்ள மிகப் பெரிய ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தி கோயில்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. ஸ்ரீ ராமபிரான் வனவாசத்தின் போது இப்பகுதிக்கு வந்து அசுரர்களால் துன்புற்ற முனிவர்களுக்கு அபயம் அளித்து, அவர்களின் வேண்டுகோளின்படி இங்கு கோயில் கொண்டதாக தல புராணம் தெரிவிக்கிறது. மேலும், இப்பகுதியில் சுற்றித் திரிந்த ஒண்டோடு, மிட்டோடு என்ற இரு கொள்ளையர்கள் ஸ்ரீ ராமரின் திருவருளால் மனம் திருந்தினர் என்றும், அவர்கள் பெயராலேயே இந்த இடம் ஒண்டிமிட்டா என்ற பெயர் பெற்றது என்றும் கூறப்படுகிறது. விஜய நகர மன்னரின் தளபதி குமார கம்பண்ணர் (1356–1357) இங்கு படைகளுடன் வந்தபோது இந்தக் கொள்ளையர்கள் அவர்களின் தாகம் தீர இராம தீர்த்தத்தைக் காட்டிக் கொடுத்ததால் அவர்கள் பெயரிலேயே இந்த கிராமம் அழைக்கப்பட்டது என்றும் இன்னொரு கதை தெரிவிக்கிறது. இத்தலத்தை இரண்டாம் அயோத்தி என்றும் போற்றுகின்றனர்.

### திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருமலை

- திருமலையான் தரிசனத்திற்கு ஆலயத்தில் நுழையும் பக்தர்கள் காலணிகள், ஆயுதங்கள், அலைபேசி மற்றும் மின்னணுக்கருவிகளை தங்களுடன் எடுத்துச் செல்லக் கூடாது.
- வி.ஐ.பி. தரிசனம் மற்றும் ஆர்ஜித சேவைக்கு வரும் பக்தர்கள் பாரத பண்பாட்டு ஆடைகளையே அணிந்து வர வேண்டும்.
- ஆண்கள் : வேட்டி, மேற்துண்டு அல்லது குர்தா பைஜாமா.
- பெண்கள் : புடவை, இரவிக்கை/பாவாடை, தாவணி/ பஞ்சாபி டிரஸ்–சுடிதார்.



இங்கு கருவறையில் ஒரே பீடத்தில் ஸ்ரீ சீதா தேவி மற்றும் லட்சுமணரோடு ஸ்ரீராமபிரான் கோதண்ட ராமராக வனவாசத் திருக்கோலத்தில் அருள்பாலிக்கிறார். இங்கு அனுமன் பிரதான வாயில் அருகே மேற்கு நோக்கி தனிச் சன்னதியில் காட்சி தருகிறார்.

திருமலை திருப்பதி தேவஸ்தான நிர்வாகம், ஒண்டிமிட்டா ஆலய நிர்வாகத்தை 2015 ஆம் ஆண்டு தன் வசம் கொண்டு, திருப்பணிகள் செய்ததோடு, ஸ்ரீ சீதா ராம திருக்கல்யாணம் மிகச் சிறப்பாக நடைபெறும் வகையில் ஒரு அழகிய திருக்கல்யாண மண்டபத்தையும் கட்டியுள்ளனர். 2016 ஆம் ஆண்டு முதல் ஸ்ரீராமநவமியை முன்னிட்டு நடைபெறும் பிரம்மோற்சவத்தின் போது ஸ்ரீ சீதா ராமர் கல்யாணம் மிகச் சிறப்பாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. திருப்பதியிலிருந்து சுமார் 117 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள இவ்வாலயம் காலை 5.15 மணி முதல் இரவு 8.30 வரை நடை திறந்திருக்கிறது.

இவ்வாண்டு ஸ்ரீ ராம நவமி 27.3.2026 வெள்ளி அன்று நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது, இந்நாளில், ஸ்ரீ ராம ரக்ஷா ஸ்தோத்திரத்தில் உள்ள ஸ்ரீ ராமர் பற்றிய கீழ்க்கண்ட சுலோகத்தைப் பாராயணம் செய்து அனைவரும் ஸ்ரீ ராமபிரானை வழிபட்டு அருள் பெறுவோம்.

*ராமாய ராமபத்ராய ராம சந்த்ராய வேதஸே*
*ரகுநாதாய நாதாய சிதாய பதயே நம:*

தரிசிப்பவர்களுக்கு மகிழ்ச்சி தருபவன், மங்கலம் நிறைந்தவன், சந்திரனுக்கு நிகரான அழகு பொருந்தியவன், வேதங்களால் போற்றப்படுபவன், ரகு வம்சத்தின் தலைவன், அனைவருக்கும் தலைவன், ஸ்ரீ சீதா தேவியின் பதி ஆகிய ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியை நமஸ்கரிக்கிறேன்.

அலசுவோம்... அறிவோம்...

ஆதிகாவிய நாயகர்களை ...

# அன்னை சுமித்திரை

**தொண்டர்களைப் பெற்றளித்த அன்னை**

திரு.எஸ். ஸ்ரீதுரை, காஞ்சீபுரம், 9486139685

அறவழியில் நின்ற அக்காலத்து மன்னர்கள் பல பெண்களைத் திருமணம் செய்து கொண்டதற்குரிய காரணம் புத்திரபாக்கியம் ஏற்படுவதுடன், அவர்களின் அரசபரம்பரை அறுபடாமல் தொடர்வதற்காகவே அன்றி சிற்றின்ப நோக்கம் அன்று.

இவ்வகையில் இக்ஷ்வாகு வம்சத்தைச் சேர்ந்த கோசல தேசத்தின் பேரரசராகிய தசரதச் சக்கரவர்த்தி கௌசல்யை, சுமித்திரை, கைகேயி ஆகிய மூவரையும் மணந்து கொண்டார். தசரதரின் முதல் மனைவியாகிய கௌசல்யை பட்டத்து ராணியாக விளங்கினாள் என்பதும், மனைவியர் மூவரிலும் இளையவளாகிய கைகேயி தசரதரின் பிரியத்துக்கு உரியவளாக விளங்கினாள் என்பதும் உண்மைதான்.

ஆனால், இக்காரணங்களால் ஸ்ரீமத்ராமாயணம் என்னும் மாபெரும் புனிதச்சரித்திரத்தில் சுமித்திரையின் முக்கியத்துவம் எவ்விதத்திலும் குறைந்துவிடவில்லை என்பதே நிஜம்.



மகத தேசத்து இளவரசியாகப் பிறந்து, தசரதச் சக்கரவர்த்தியின் இரண்டாவது மனைவியாக அயோத்திக்கு வந்து சேர்ந்த சுமித்திரை தன்னுடைய பெயருக்கு ஏற்றபடி அரண்மனையிலுள்ள அனைவருடனும் நட்புறவுடன் இனிமையாகப் பழகி வந்தாள்.

பட்டத்துராணியாகிய கௌசல்யா தேவி மனக்கலக்கம் அடையும்பொழுது அவளைத் தனது தோளில் அணைத்துக் கொண்டு ஆறுதல்மொழி கூறி அமைதிப் படுத்துகின்ற நல்லதொரு தோழியாகவும் சுமித்திரை விளங்கினாள்.

தசரதருக்கு புத்திரபாக்கியம் ஏற்படாத நிலையில் குலகுரு வசிஷ்டரை முன்னிட்டுக் கொண்டு ரிஷ்யசிருங்கர் என்ற முனிவரைக் கொண்டு புத்திர காமேஷ்டி என்னும் யாகம் செய்ய ஏற்பாடாகியது.

நல்லோரைக் காக்கவும் தீயோரை அழிக்கவும் எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன் தசரதப் புத்திரராக அவதரிக்கத் திருவுள்ளம் பற்றி இருந்தார். அச்சமயத்தில் நடைபெற்ற புத்திர காமேஷ்டி யாகத்தின் வேள்விக்குண்டத்தில் தோன்றிய தேவ புருஷன் பாயஸம் நிறைந்த ஒரு தங்கக் குடத்தை தசரதரிடம் வழங்கினார். மிகவும் மகிழ்ச்சியுடன் அதனைப் பெற்றுக் கொண்ட தசரதர் அப்பாயஸத்தின் ஒரு பாதியைக் கௌசலைக்கு அளித்து அருந்தச் சொன்னார். மீதமிருந்த பாயஸத்தில் பாதியை சுமித்திரைக்கு அளித்தார். அதன் பின்னர் மிகுந்திருந்த பாயஸத்தைக் கைகேயிக்கு அளிக்க, அவள் அதில் பாதியை அருந்தி மீதமுள்ள பாயஸத்தினைச் சுமித்திரைக்கு அளித்தாள். இவ்வகையில், தேவபுருஷன்

அளித்த பாயஸப் பிரசாதத்தில் அரை பாகம் கௌசல்யைக்கும், கால் பாகம் சுமித்திரைக்கும், அரைக்கால் பாகம் கைகேயிக்கும், இன்னோர் அரைக்கால் பாகம் மறுபடியும் சுமித்திரைக்கும் கிடைத்தது.

இவர்கள் பாயஸத்தை உட்கொண்ட பின்பு பன்னிரண்டு மாதங்கள் கழித்து வளர்பிறை நவமி திதியுடன் கூடிய புனர்வசு நட்சத்திரத்தில் ஸ்ரீராம பிரானும், பூச நட்சத்திரத்தில் பரதாழ்வானும், ஆயில்ய நட்சத்திரத்தில் லட்சுமணன், சத்ருக்னன் ஆகிய இருவரும் முறையே கௌசல்யை, கைகேயி, சுமித்திரை ஆகிய மூவரின் திருவயிற்றிலிருந்து அவதரித்தனர். இவர்களுள் சுமித்திரையின் புதல்வர்கள் இருவருள் ஒருவனை செல்வம் நிறைந்தவனாக இருப்பான் என்று ஆசீர்வதித்து லக்ஷ்மணன் என்று குலகுரு வசிஷ்டர் பெயரிட்டார்.

அதே போன்று மற்றொருவனை புலன்களாகிய சத்ருக்களை ஜெயித்தவனாக இருப்பான் என்று ஆசீர்வதித்து சத்ருக்னன் என்று பெயரிட்டார். இவர்களுள் லட்சுமணன் தன்னுடைய அண்ணன் ஸ்ரீராமனுக்குத் தொண்டு செய்வதையே தமது வாழ்நாள் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்ததையும், சத்ருக்னன் பரதனுடன் ஒட்டிக் கொண்டு அவனுக்கே தொண்டு புரிந்து வந்ததையும் நாம் அறிவோம்.

**கச்சதா மாதுலகுலம் பரதேந ததாநக: |**
**சத்ருக்னோ நிதசத்ருக்ந: நீத ப்ரீதி புராஸ்க்ருத:||**

ஸ்ரீமத்வால்மீகி ராமாயணத்தின் அயோத்யா காண்டத்தின் தொடக்கத்தில் வரும் மேற்கண்ட சுலோகத்தில் சத்ருக்னன் "அநக:" என்று வடமொழியில் குறிப்பிடப்படுகின்றான். "அநக:" என்றால் குற்றமற்றவன் என்பது பொருள். இச்சொல்லுக்கு, ஸ்ரீராமபிரானை ஏறெடுத்துப் பார்க்கின்ற குற்றத்தினைச் செய்யாதவன் என்று ஸ்ரீவைஷ்ணவப் பெரியோர்கள் பொருள் கூறுகின்றனர்.

ஏனென்றால், எம்பெருமான் ஸ்ரீராமபிரானை அவன் ஏறெடுத்துப் பார்த்திருந்தால் அவருடைய அழகிலும், கல்யாண குணங்களிலும் ஈடுபட்டு அவருக்கே தொண்டு செய்திருப்பான். அப்படிச் செய்திருந்தால், பரம பாகவதனாகிய பரதனுக்குத் தொண்டு செய்திருக்க மாட்டான்.

எனவே, பெருமாளுக்கு அடிமைப்பட்டுத் தொண்டு புரிவதாகிய குற்றத்தைச் செய்யாமல், அவருடைய தொண்டனாகிய பரதாழ்வானுக்குத் தொண்டு புரிந்த புனிதன் என்று வால்மீகிபகவான் சத்ருக்னனைக் கொண்டாடுகின்றார்.

இவ்வகையில் பார்த்தால், தசரதரின் மனைவியரில் மூத்தவளாகிய கௌசல்யை பகவானை ஈன்றெடுத்தாள். இளையவளாகிய கைகேயி பகவானின் தொண்டனாகிய பரதாழ்வானை ஈன்றெடுத்தாள். அதே சமயம், தசரதமகாராஜாவின் இரண்டாவது மனைவியாகிய சுமித்திராதேவியோ லட்சுமணன் என்னும் பகவானின் தொண்டனையும், சத்ருக்னன் என்னும் தொண்டனுக்குத் தொண்டனையும் இவ்வுலகிற்கு அளித்து காலத்தால் அழியாத பெருமையைப் பெற்றுவிட்டாள்.

ஸ்ரீமத்ராமாயணத்தில் சுமித்திராதேவியின் ஆளுமையும், தனித்தன்மையும் வெளிப்படும் சம்பவங்கள் ஆங்காங்கே இடம் பெற்றிருக்கின்றன. அவற்றுள் இரண்டு சம்பவங்களை இங்கே காண்போம்.

கைகேயிக்கு தசரதமகாராஜா அளித்த வரத்தின்படி ஸ்ரீராமபிரான் கானகம் செல்ல வேண்டியதாயிற்று. அவ்வாறு காட்டிற்குச் செல்வதற்கு முன்பு கௌசல்யாதேவியை மட்டுமின்றி, தன்னுடைய சிறிய தாயாராகிய சுமித்திராதேவியையும் சென்று சந்தித்து வணங்கும் பொழுது, லட்சுமணனும் ஸ்ரீராமபிரானுடன் இருக்கிறான். அவனைப் பார்த்து சுமித்திரை கூறுகின்ற வார்த்தைகள் நம் நெஞ்சை உருக்கக்கூடியவையாக இருக்கின்றன.

***"பின்னும் பகர்வாள், மகனே!, இவன்பின் செல் தம்பி!, என்னும்படி அன்று அடியாரின், ஏவல் செய்தி!, மன்னும் நகர்க்கே இவன் வந்திடில் வா, அன்றேல் முன்னம் முடி! என்றனள் வார்விழி சோர நின்றாள்"***

என்ன ஓர் உணர்ச்சிகரமான அறிவுரை!

"ஏ லட்சுமணனே! இன்று காட்டுக்குச் செல்லும் உன் அண்ணனைப் பின் தொடர்ந்து நீயும் செல்வாயாக! வனவாச காலத்தில் நீ இவனுக்கு ஒரு தம்பியாக நடந்து கொள்ளாமல், ஓர் அடியவனைப் போலத் தொண்டு செய்வாயாக! இன்னொன்றும் சொல்கிறேன் கேள்! உன் அண்ணன் ஸ்ரீராமன் மீண்டும் இந்த அயோத்தி நகருக்குத் திரும்பி வந்தால்

மட்டுமே நீயும் இந்நகருக்கு வரவேண்டும். அப்படி இல்லையேல், உன் அண்ணனுக்கு முன்பாக நீ உன் உயிரைத் துறந்துவிடவும் சித்தமாக இருக்க வேண்டும்" என்று தான் பெற்ற திருமகனாகிய லட்சுமணனுக்கு சுமித்திராதேவியார் கூறிய வார்த்தைகள் பொன்னெழுத்தில் பொறிக்கப்பட வேண்டியவை ஆகும்.

சுமித்திராதேவி ஸ்ரீராமபிரானைத் தன்னுடைய திருவயிற்றில் சுமக்காவிட்டாலும், அவனைப் பெற்ற தாயாராகிய கௌசல்யாதேவியைக் காட்டிலும் அதிகமான பாசத்தினை அவனிடத்தில் காட்டிய தாய் உள்ளம் நம்மையெல்லாம் பிரமிக்கச் செய்கின்றது.

அது மட்டுமா? அன்னை சுமித்ராதேவியானவள் ஒரு பாசமுள்ள தாய் என்பதற்கும் மேலாக, தத்துவங்களை உணர்ந்த தீர்க்கத்தரிசியாகவும், குறிப்பாக ஸ்ரீராமபிரானும் ஸ்ரீமந்நாராயணனும் வேறல்லர் என்பதை உணர்ந்த பிரம்மஞானியாகவும் தன்னை இவ்வுலகுக்குக் காட்டியதொரு சந்தர்ப்பமும் ஸ்ரீமத்ராமாயணத்தில் இடம் பெற்றுள்ளது.

தசரதமஹாராஜா தம்முடைய மூன்றாவது மனைவி கைகேயிக்கு அளித்த வரங்களின்படி ஸ்ரீராமபிரான் சீதாதேவியுடனும், இளைய பெருமாளுடனும் வனவாசம் செல்வதற்காகக் கிளம்பினார். ஸ்ரீராமன் வனத்திற்குச் சென்றதைத் தொடர்ந்து தன் கணவர் தசரத மஹாராஜா மீளாத் துயரத்தில் ஆழ்ந்த காரணத்தால் சொல்லொணாத சோகத்தில் ஆழ்ந்த கௌசல்யாவுக்கு உற்ற தோழியாய் சுமித்திரா தேவி ஆறுதல் கூறும் பாங்கு தனிச்சிறப்புப் பெற்றது.

*அபீதாநீம் ஸ கால:ஸ்யாத் மம சோககூஷய: சிவ:।*
*ஸபார்யம் யத் ஸஹ ப்ராத்ரா பஸ்யேயம் இஹ ராகவம் ॥*

தன் மனைவியுடனும், தம்பியுடனும் காட்டுக்குச் சென்ற என் ஸ்ரீராமச்சந்திரனை நான் மீண்டும் பார்க்கும் காலம் இப்பொழுதே வந்துவிடாதா என்று கௌசல்யை புலம்ப, அதற்கு சுமித்ரை என்ன சொல்கிறாள் தெரியுமா,

*ஸூர்யாபி பவேத் ஸூர்ய: ஹ்யக்நேரக்நி: ப்ரபோ: ப்ரபு: ।*
*ச்ரிய: ஸ்ரீஸ்ச பவேத் அக்ர்யா, கீர்த்யா: கீர்த்தி: க்ஷமாக்ஷமா ॥*

அக்கா, கௌசல்யா தேவியே! நம் ஸ்ரீராமனை யாரென்று நினைத்தீர்கள். அவன் சூரியனுக்குச் சூரியன்; அக்னிக்கு அக்னி; அரசர்களுக்கு அரசன்; மஹாலக்ஷ்மிக்கே செல்வம் போன்றவன். அப்படிப் பட்ட நம் ஸ்ரீராமனுக்கு வனவாசம் ஒருபொழுதும் சிரமமாக இருக்காது. எனவே நீங்கள் கவலைப் படாதீர்கள் என்று தேற்றினாள். மேலும்,

*தைவதம் தைவதாநாம் ச பூதாநாம் பூத ஸத்தம:।*
*தஸ்ய கேஹ்யகுணா தேவீ! வநேவாப் யதவா புரே॥*

அக்கா! நம்முடைய செல்வனாகிய ஸ்ரீராமபிரான் தெய்வங்களுக்கெல்லாம் தெய்வம். ஜீவராசிகளுக்கெல்லாம் மேம்பட்டவன். அப்படிப்பட்டவனுக்கு வனவாசத்தாலோ ஒரு தீமையும் நேராது என்று கௌசல்யைக்கு ஆறுதல் கூறினாள் சுமித்திரை. இதற்கும் மேலாக ஒரு படி சென்று,

*ப்ருதிவ்யாஸ் ஸஹ வைதேஹ்யா ச்ரியா ச புருஷர்ஷப:।*
*க்ஷிப்ரம் திஸ்ருபிரேதாபி: ஸஹ ராமோ அபிஷேக்ஷ்யதே॥*

அக்கா கௌசல்யே! நம் செல்வனாகிய ஸ்ரீராமபிரான் வெகு விரைவில் வனவாசத்தை முடித்துக் கொண்டு திரும்பிவந்து அரியணையில் அமர்ந்து சீதையுடன் பட்டாபிஷேகம் கண்டு பெரும் செல்வத்துடன் கூடிய இந்தப் பூமண்டலத்தை ஆளப் போகின்றான், பார்த்துக்கொண்டே இருங்கள்! என்றும் எடுத்துக்கூறி கௌசல்யா தேவியின் அலை பாயும் மனத்தை அமைதிப்படுத்தினாள் சுமித்திரா.

இங்ஙனம் ஸ்ரீமத்ராமாயணமென்னும் மஹா காவியத்தில், பரதனும், அவன் தம்பி சத்ருக்னனும் கேகய நாட்டிற்குச்சென்ற நேரத்தில், ஸ்ரீராமபிரான் ஸ்ரீசீதாதேவி, லட்சுமணன் இருவருடன் வனவாசம் சென்றுவிட தசரதரின் அரண்மனையே குழப்பத்தில் ஆழ்ந்திருந்த முக்கியமானதொரு சந்தர்ப்பத்தில் தானும் மனக்கலக்கம் அடையாமல், கௌசல்யா தேவிக்கும் ஆறுதல் கூறி அமைதிப்படுத்தியது மிகவும் சிறப்பானதொரு விஷயமாகும்.

கடினமானதொரு காலத்தில் தன்னுடைய ஆளுமையை வெளிப்படுத்திய கைகேயி மாதர் குலத்தவர்கள் அனைவருக்குமே சிறந்த வழிகாட்டி என்றால் அது மிகையாகாது.



மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா அருளிய

# ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்

**தெலுங்கு மூலம் :**
**பேராசிரியர் கே.சர்வோத்தம ராவ்.**
**தமிழாக்கம் :**
**டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.**

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

திருவேங்கடவன் திருமலையில் இருந்த வண்ணம் வைகுண்ட வைபவங்களை நினைத்துக் கொண்டே இருந்ததால் காலம் கடந்து கொண்டே இருந்தது. ஒரு சமயம் ஸ்ரீதேவி, பூதேவி, நீளா தேவியோடு ஸ்வாமி வைகுண்டபுரம் வந்து சேர்ந்தார். அங்கு நித்தியசூரிகளைப் பார்த்து ஆனந்தித்தார். பிறகு திருமாமணி மண்டபத்தில் உள்ள அந்தப்புரத் தில் ஆதிசேஷன் மீது பள்ளி கொண்டார். இவ்வாறாக இருக்க வருடங்கள் பல கடந்தன. வேங்கடாத்ரிக்கு நாரதர் வந்தார். ஸ்வாமி ஸ்ரீநிவாசர் மீண்டும் வைகுண்டத்திற்குச் சென்றுவிட்டார் என்ற செய்தியை அறிந்து நேராக சத்தியலோகத்திற்குச் சென்று பிரம்ம தேவரைக் கண்டு வணங்கினார். சக்கரபாணியாகிய ஸ்வாமி சேஷாத்ரியை விடுத்து வைகுண்டபுரத்திற்குப் புறப்பட்டு சென்று விட்ட செய்தியை நாரதர் கூறியதைக் கேட்டு பிரம்மதேவர் மிகவும் வருந்தினார்.

“நாரதா! நாராயணன் சேஷாசலத்தின் மீது இருந்தவரை மக்கள் எல்லோரும் சாத்வீகமானவர் களாகவே வாழ்ந்தார்கள். ஸ்ரீஹரி வைகுண்டம் சென்ற தினால் ஸ்வாமிக்கு நான் செய்து வந்த திருத்தேர் உற்சவத்தை வராக தேவர் ஒருவரால் நிர்வகிக்க முடியாது. அந்த ஸ்ரீநிவாசர் சேஷாத்திரி மலையில் இருந்தே தீர வேண்டும். எனவே அதற்குத் தகுந்தாற் போல் வசு தேவர், தசரதர் இவர்களின் சீர்மை தாங்கிய புளியமரம் ஒன்றை நான் தோற்றுவிக்கிறேன். அதேபோல் தேவகி, கௌசல்யை அவர்களின் அங்கங்களின் அம்சமாக புற்று ஒன்றையும் அமைக்கிறேன். அந்தப் புற்றுக்குள் ஸ்வாமி ஸ்ரீநிவாசன் வந்து சேர்வதற்கான உபாயம் ஏதாவது ஒன்றை ஆலோசிப்பாயாக. மலையப்ப ஸ்வாமி அந்த மலையில் வந்து சேர்ந்தவுடன் நான் முன்பு செய்து வந்ததைப் போலவே மக்களின் நலன் கருதி திருத்தேர் உற்சவத்தை நடத்தி வைக்கிறேன்” என்றார் பிரம்ம தேவர்.

மேலும், பிரம்மதேவர் “பூலோகத்தில் ஸ்வாமி ஸ்ரீநிவாசன் இல்லாமல் போனதால் மக்கள் தீய செயல்களுக்கு ஆளாகிறார்கள். கலி புருஷன் மடியில் சிக்கிக் கொண்டார்கள். சத்தியத்தை விட்டு விலகிச் சென்றார்கள். ஆகவே, ஸ்வாமி மீண்டும் திரும்பி வரவில்லை எனில் பூலோக வாசிகளை எமன் நரகத்தில் கொண்டு போய் தள்ளி விடுவான். எனவே எப்படியாவது ஸ்வாமி ஸ்ரீநிவாசரை மீண்டும் சேஷகிரிக்கு வரவைப்பதற்கான நல்ல உபாயத்தை சிந்திப்பீர்” என்று கூறினார். நாரதரும் பிரம்மதேவனின் திருப்பாதங்களை வணங்கி விட்டு அங்கிருந்து கங்கை நதிக்கரையில் வேள்வி செய்து கொண்டிருந்த காசிப முனிவரிடம் சென்றார். வீணை மீட்டியபடி நாராயணனின் திருநாமத்தைப் பாடிக் கொண்டு வேள்வி மண்டபத்திற்கு வந்த நாரதரை கண்டவுடன் காசிபர் முதலான முனிவர்கள் சிறப்பாக வரவேற்று மரியாதை செய்தனர்.

அப்போது நாரதர் ஏதும் அறியாதவர் போல் முனிவர்களைப் பார்த்து “மகாத்மாக்களே! உலக

## குறுக்கெழுத்துப்புதிர் 116க்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 வ | 2 சி | ஷ் | ட | ர் | | 3 கு | ல | ம் | த | ரு | ம் |
| ரு | க | 4 தீ | 5 பா | வ | ளி | 6 சு | வா | தி | தி | வா | 7 சு |
| ண | ண் | 8 ப | ர | ணி | | | 9 வா | ல் | மீ | கி | |
| ன் | டி | ம் | தி | ந் | ய | ம | 11 த | 12 சு | க | ர் | |
| 13 அ | ன | ந் | த | ன் | ரா | பி | தி | னா | ல | ம | 15 அ |
| ன் | ம் | ன | யா | 16 தி | ரு | வே | ங் | க | ட | ம் | ம் |
| ன | | | ம் | மு | ர | ப | ம் | 17 அ | க | ல | க |
| 18 மா | ய | னை | 19 தி | ரு | மா | லை | | 20 தா | ட | கை | ங் |
| ச் | டி | ர | க | சே | ல | 21 கு | ரு | க்ஷே | த் | தி | ர |
| 22 சா | ர | ங் | க | பா | ணி | | ர் | வ | தே | சு | 23 வ |
| ர் | 24 க | ல் | யா | ண | ஜ | க | ன் | னா | த | ன் | ரு |
| யா | ரா | 10 ஆ | ம் | த | ந் | ப | ர | பி | ய | வ் | 14 தி |

நன்மைக்காக நீங்கள் எத்தனையோ வேள்விகளைச் செய்கிறீர்கள். தற்போது இந்த வேள்வியின் அவிர் பாகத்தை யாருக்கு அளிப்பீர்" என வினாவினார். இக்கேள்விக்குப் பதில் அளிக்க முடியாமல் முனிவர்கள் திகைத்தனர். அதன் பிறகு பிருகு மகரிஷியுடன் கலந்து இதைப்பற்றி ஆழமாக ஆலோசனை நடத்தினர். இருந்தாலும் அதற்குச் சரியான தீர்வு காண முடியவில்லை. நாரதர் நாராயண நாமத்தை உச்சரித்தபடியே "பிரஜாபதிகளே! மோட்சத்தை அளிக்கும் வல்லமை யாருக்கு இருப்பதாக நினைக்கிறீர்கள். பிரம்மாவிற்கா? தாமரைக்கண்ணனுக்கா? பரமசிவனுக்கா? இதில் யாருக்கு முக்தி அருளும் வல்லமை உள்ளதோ அவர்களுக்கு இந்த வேள்வி பலனான அவியை அளித்து மனம் மகிழுங்கள் என்று கூறி அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார். பிரம்ம தேவரும் சேஷகிரியில் புற்று ஒன்றையும், இரண்டு புளிய மரங்களையும் படைத்தார். நாரதர் கூறியதைக் கேட்ட முனிவர்கள் என்ன செய்வது? எப்படி செய்வது? என்று தங்களுக்குள் விவாதித்துக் கொண்டார்கள். முக்தி அளிக்க வல்லவர் யார் என்பதை தீர்மானிக்கும் பொறுப்பினை பிருகு முனிவரிடம் ஒப்படைத்தனர்.

பிருகு முனிவரும் மும்மூர்த்திகளில் முதலில் பிரம்மாவை சோதித்து அடையாளம் காண்பதற்கு சத்திய லோகத்திற்குச் சென்றார். தவசீலர்கள் மத்தியில் பிரம்மா இருப்பதைக் கண்டார். பிரம்மா அவரை அமருங்கள் என்று சொல்வதற்கு முன்பாகவே தானே அருகில் இருந்த ஒரு ஆசனத்தில் அமர்ந்தார். பிரம்மா பிருகு முனிவருக்கு மரியாதை கொடுக்காததோடு, ஒரு வார்த்தை கூட பேசவும் இல்லை.

தன்னை ஒரு பொருட்டாக நினைக்காதவரும் என்னை பார்த்தும் பார்க்காமல் இருக்கின்ற இவர் ரஜோகுணம் உடையவர் என்று பிருகு முனிவர் முடிவு செய்தார். மேலும், இந்த உலகத்தில் பிரம்மாவிற்கு ஆலையங்களே இருக்கக் கூடாது என்றும் சபித்தார். அங்கிருந்து கைலாயம் நோக்கிப் புறப்பட்டார்.

பெருமை அறிவோம்...

### 2026, ஏப்ரல் மாதப் பண்டிகைகள் மற்றும் பருவ தினங்கள்

| | |
|---|---|
| 01 | திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஆலயத்தில் பங்குனி உத்திரம், தும்புரு தீர்த்தம். |
| 14 | தமிழ் வருடப் பிறப்பு. |
| 20 | பரசுராம ஜெயந்தி, அக்ஷய திருதியை. |
| 21 | சங்கர ஜெயந்தி. |
| 22 | இராம ஜெயந்தி. இராமானுஜ ஜெயந்தி. |
| 25-27 | திருமலை ஸ்ரீபத்மாவதி ஸ்ரீநிவாச பரிணயம் |
| 28-மே.01 | திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித் தாயார் வஸந்தோத்ஸவம். |
| 30 | ஸ்ரீநரசிம்ம ஜெயந்தி, மதுரகவி ஆழ்வார், அனந்தாழ்வான் சாத்துமுறை. |

சென்ற இதழின் தொடர்ச்சி...

மங்காத் திருமைந்தனை வைது அடரும் அவுணன்
வெங்காத்திரமோடு அறை தூணினுள் மீளியாகி,
அங்காத்துகிரால் அவன் ஆக்கை பிளந்து அளைந்து
சிங்காத்திரு மாநகர் மேவிய சீயம் வாழி

**த்யானச்லோகம்**

நித்யம்ஸ்ரீமதகோபில ப்ரவிலஸல் லக்ஷ்மீ நருஸிம்ஹோமஹாந்.
ராஜத்தேம குஹா விமாந விலஸந் மத்யஸ்த கர்ப்பாலயம்
ப்ரஹ்லாதஸ்ய யதா குருஸ் தநுப்ருதாம் தத்வோபதேஷ்டாஜகத்,
யத்யாஸ்தே பவநாசிநீ பரிஸரே ஸர்வத்ர வித்யோததே
(ஸ்ரீவிஷ்ணு ஸ்தலாதர்சம்)

**பாசுரம்**

நல்லை நெஞ்சே நாம் தொழுதும் நம்முடைய நம்பெருமான்,
அல்லிமாதர் புல்கநின்ற ஆயிரம் தோளன் இடம்.
நெல்லி மல்கிக் கல் உடைப்புல் இலை ஆர்த்து, அதர்வாய்
சில்லி சில் என்று ஒல் அறாத சிங்கவேள் குன்றமே
– திருமங்கையாழ்வார்

வாழ் குமரன் மேல், கனக வஞ்சகன் மேல், ஓர் முகத்தே
சூழ்க்கருணையும் முனிவும் தோன்றியவால் - கேழ்கிளரும்
அங்கவேள் குன்ற அழல் சரபத்தைப் பிளந்த
சிங்கவேள் குன்றத்தினார்க்கு
– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

**நாமாக்கள்:**

918. ஓம் தக்ஷிண:நம:
கஜேந்திரனை இன்சொல்லால் தேற்றியவன்
ஓம் சக்ரிணீ: நம:
சக்ராயுதத்தைத் தரிப்பவள் (சில உபாசனங்களில் பத்மத்துக்குப் பதிலாக திருவாயுதம் ஏந்தி இருப்பதாக லக்ஷ்மீ தந்த்ரம் கூறுகிறது)

919. ஓம் க்ஷமிணாம்வர: நம:
பொறுமையின் பொறுமை
ஓம் ச்யாம:நம:
யௌவனம் மாறாது இருப்பவள்

920. ஓம் வித்வத்தம:நம:
கஜேந்திரனின் இங்கிதம் அறிந்தவன்
ஓம் ஸமா:நம:
எல்லாரிடமும் பக்ஷபாதம் இல்லாமல் இருப்பவள்



921. ஓம் வீதபய:நம:
கஜேந்திரனின் பயத்தைப் போக்கியவன்
ஓம் கோத்ரா:நம:
அடியார்களின் வார்த்தைகளைக் காப்பவள்

922. ஓம் புண்யஸ்ரவணகீர்த்தந:நம:
கஜேந்திரன் கதையைக் கேட்பவர்களையும், சொல்பவர்களையும் புனிதராக்குபவர்
ஓம் ரமா:நம:
எப்போதும் சந்தோஷத்துடன் இருப்பவள்

923. ஓம் உத்தாரண:நம:
கஜேந்திரனைக் காத்தவன்
ஓம் த்யுதி:நம:
இயற்கையான காந்தியை உடையவள்

924. ஓம் துஷ்கிருதிஹாநம:
கஜேந்திரனுக்குத் தீங்குசெய்த முதலையை அழித்தவன்
ஓம் சாந்தி: நம:
புறப்புலன்களை அழிக்கும் சக்தியைக் கொடுப்பவள்

பார்கவ ஸ்ரீ நரஸிம்ஹ பர ப்ரம்மணே நம:
சத்ரவடஸ்ரீ நரஸிம்ஹ பர ப்ரம்மணே நம:
ஸ்ரீ யோகாநந்த நரஸிம்ஹ பர ப்ரம்மணே நம:
ஸ்ரீமதே லக்ஷ்மீ ஸமேத க்ரோடகர (உக்ர)
ஸ்ரீ நரஸிம்ஹ நரஸிம்ஹ பர ப்ரம்மணே நம:
ஸ்ரீ காரஞ்ஜ நரஸிம்ஹ பர ப்ரம்மணே நம:
ஸ்ரீ மாலோல நரஸிம்ஹ பர ப்ரம்மணே நம:
ஸ்ரீ ஜ்வாலா நரஸிம்ஹ பர ப்ரம்மணே நம:
ஸ்ரீ பாவன நரஸிம்ஹ பர ப்ரம்மணே நம:
ஸ்ரீமதே அம்ருதவல்லீ, செஞ்சு லக்ஷ்மீ ஸமேதாய
ஸ்ரீமதே லக்ஷ்மீ நரஸிம்ஹ (ப்ரஹ்லாதவரத)
பர ப்ரம்மணே நம:

**குறிப்பு:**

சென்னை – மும்பை ரயில் வழி பாதையில் கடப்பாவில் இறங்கி பேருந்தில் 86 கி.மீ. தூரத்தில் உள்ள அல்லகட்டா செல்ல வேண்டும். அங்கிருந்து 56 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது அஹோபிலம். நந்தியாலா இரயில் நிலையத்தில் இறங்கி அங்கு இருந்தும் பேருந்து வாயிலாகச் செல்லலாம்.

இத்தலம் அடர்ந்த வனப்பகுதியில் அமைந்து இருப்பதால் சரியான வழிகாட்டியுடன் செல்வதே பாதுகாப்பானதாகும்.

திவ்ய தேச தரிசனம் தொடரும்...

**திருமலை திருப்பதி தேவஸ்தானம்**

## திருமலையில் பக்தர்களுக்கு தடைவிதிக்கப்படுவன

- திருமலையில் புகைபிடித்தல், போதை தரும் பொருட்கள், மாமிச உணவுப்பொருட்கள் உட்கொள்வதற்கு முழுமையாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
- எம்பெருமான் தரிசனம் மற்றும் தங்கு வசதிக்காக தளாலிகளை அணுகாதீர்கள்.
- பிளாஷ்டிக் பொருட்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளன.
- பிச்சைக்காரர்களை உற்சாகப்படுத்தாதீர்கள்.
- கோயில் வளாகத்திற்குள் துப்புதல் போன்ற செயல்களைச் செய்யாதீர்கள்.
- பிற மதப் பிரசாரம் செய்யாதீர்கள்.
- பல்வேறு வகையான அரசியல் கூட்டங்கள், சுவரொட்டிகள், போராட்டங்கள், கடை அடைப்புகள் முதலானவைகளுக்கு திருமலையில் தடைவிதிக்கப்பட்டுள்ளன.
- விலங்குகள் வதை செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
- திருமலையில் சூதாட்டம், சீட்டாட்டம் முதலானவைகளுக்கு முழுமையாகத் தடை விதிக்கப்பட்டுள்ளன.
- கோயிலுக்குள் அலைபேசி, புகைப்படக்கருவி முதலான மின்னணுக்கருவிகளை எடுத்துச் செல்லவும், ஆயுதங்களைக் கொண்டு செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

– செயலாட்சித் தலைவர்







# முதலியாண்டான்

- ஸ்ரீ உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,
சென்னை, 9841884972

சென்ற இதழின் தொடர்ச்சி...

(ஊர் திருந்தச் சீர் பாதம் ஊன்றினான் வாழியே) இராமாநுசர் முதலி ஆண்டானோடு மேல்நாட்டுக்கு எழுந்து அருளினார். மேற்கே வஹ்நி புஷ்கரணியாகிய கிராமத்தில் எழுந்தருளினார்.

அங்கு சில காலம் தங்கிய பிறகு மிதிளாபுரி என்னும் கிராமத்துக்கு எழுந்தருளினார். அங்கு ஊர் முழுவதும் ஜைன, பௌத்தர்களாய் ஸ்ரீவைஷ்ணவ விரோதிகளாய் இருந்தனர். அதனால் எம்பெருமானாரை அனாதரித்திருந்தனர்.

இராமாநுசரும் முதலியாண்டானை பார்த்து, இவ்வூரார் நீர் எடுத்துச்செல்லும் துறைக்கு எதிர்த்துறையில் உம்முடைய ஸ்ரீபாதத்தை நீட்டிக்கொண்டு இரும் என்று நியமித்தார். அவரும் அப்படியே செய்தார். அதாவது எம்பெருமான் த்ரிவிக்ரம அவதாரம் செய்தபோது மூவுலகங்களையும் தன் திருவடியால் அளந்தான்.

இதனை திருமழிசையாழ்வார் நான்முகன் திருவந்தாதியில் (9) ***''குறைகொண்டு நான்முகன் குண்டிகை நீர் பெய்து மறைகொண்ட மந்திரத்தால் வாழ்த்தி, கறைகொண்ட கண்டத்தான் சென்னி மேல் ஏறக்கழுவினான் அண்டத்தான் சேவடியை ஆங்கு''*** என்கிறபடியே நான்முகன் தர்ம தேவதையை நீராகக்கொண்டு வேத மந்த்ரத்தாலே வாழ்த்தி த்ரிவிக்ரமன் திருவடியை விளக்கின போது சிவபிரானும் ஸ்ரீபாத தீர்த்தமான கங்கை என்கிற அந்தத் தீர்த்தத்தைத் தலையில் தரித்ததனாலே அகங்கார மமகாரங்கள் முதலானவை தீரப்பெற்றாப்போலே, அவ்வூரார் முதலி ஆண்டானுடைய ஸ்ரீபாத வைபவத்தாலே அகங்காரம் தொலைந்தவர்களாய்,,. ஸத்வ குணத்தோடு கூடியவர்களாய் மறுநாளே அவ்வூரார் எல்லாரும் இராமாநுசர் ஸ்ரீபாதத்தைப் பற்றினர்.

எம்பெருமானாரும் அத்தீர்த்த மகிமையையிட்டு இன்று முதல் இவ்வூருக்கு ஸ்ரீசாளக்ராமம் என்று பெயர் வழங்கட்டும் என்று அருளிச்செய்தார். இதுவன்றோ முதலியாண்டான் ஸ்ரீபாதத்தின் சீர்மை. அப்படிப்பட்ட முதலியாண்டானுக்குப் பல்லாண்டு பாடுவோமாக.

(முத்திரையும் செங்கோலும் முடி பெறுவோன் வாழியே) ஒரு சமயம் இராமாநுசர் ஸ்ரீரங்கத்தில் நம்பெருமாள் ஸந்நிதியிலே திருவோலக்கமாய் இருந்தபோது பெரியநம்பி முதலானோர் தொடங்கி இராமாநுசருக்கு தீர்த்தம் முதலானவை ஸாதித்து வர, அப்போது ஸ்வாமி எம்பெருமானார் தாம் தீர்த்தத்தை வாங்கிய பிறகு, சாத்துப்படி, வேளையம் முதலானவற்றை ஸாதிக்கும்போது முதலியாண்டான் திருக்கையைப் பிடித்து அவர் திருக்கையாலே அங்கீகரிக்க அப்போது அங்குள்ள பெரியநம்பி முதலானோரும் மற்றுமுள்ளாரும் கண்டு எம்பெருமானாரைப் பார்த்து முதலியாண்டான் தேவரீருக்கு விரும்பியவராயிற்றே என்றும் எல்லா லௌகிக வைதிக விஷயங்களிலும் இந்த ஆண்டான் மிக்க ஸமர்த்தராக உள்ளார்.

தேவரீர் ஆண்டானைப் பெரிய பெருமாள் கைங்கர்யத்துக்கு ஸ்ரீகார்ய நிர்வாஹகராக்கிச்

செங்கோல் பிரஸாதித்து, தேவரீரிடத்தில் தீதில் நன்னெறி காட்டித் தேசமெல்லாம் திரிந்து திக்விஜயம் செய்து அங்குள்ள திவ்ய தேசங்களின் நிர்வாகங்களை சீராக்கியும், பிற மதத்தவர்களை நிரஸனம் செய்வதன் பொருட்டு ஸ்தாபனம் பண்ணி வரவேண்டும் என்று வேண்டினர்.

பெரிய பெருமாள் மிகவும் உகந்தருளி, இராமாநுசரைப்பார்த்து, உமக்குப் பாதுகா ஸ்தானீயரான நம் வாதூல தேசிகரான முதலியாண்டானே நம் வீட்டை ஆராயக்கடவர். நீர் நம்முடைய ஆராமங்களையும் ஒரு ஒழுங்கிட்டு நம் தர்சனத்தில் களை அறுத்து எம்பெருமானார் தர்சனமே எல்லாவற்றாலும் உயர்ந்தது என்று நான்கு திக்குகளிலும் ஜயஸ்தம்பம் நாட்டி வாரும் என்று விடை கொடுத்து முதலியாண்டானுக்கு செங்கோல் வரிசைகளையும், திருவாழி முத்திரையையும் ஸாதித்தார் என்பது வரலாறு. அத்தகைய முதலியாண்டானுக்குப் பல்லாண்டு பாடுவோமாக.

(முதலியாண்டான் பொற்பதங்கள் ஊழி தொறும் வாழியே) எம்பெருமானாருடைய சிஷ்யர்கள் அனைவருக்கும் நிர்வாஹகராய் இருந்தமையால் இன்றளவும் இராமாநுசருடைய திருவடிகள் முதலியாண்டான் என்றே அழைக்கப்படுகிறது.

முதலிகள் சீடர்கள். அவர்களை நிர்வஹிப்பவராகையால் முதலியாண்டான் எனப்பட்டார். அத்தகைய முதலியாண்டான் பொற்பாதங்களுக்கு காலமெல்லாம் பல்லாண்டு பாடுவோமாக.

*வாழித்திருநாம உரை தொடரும்...*




- போலியோ மெல்லிடஸ், பெருமூளை வாதம், பிறவிக் கோளாறுகள், முதுகுத்தண்டு காயங்கள் மற்றும் எலும்பு சம்மந்தமான மூட்டு சிதைவு நோயாளிகளுக்கு முழுமையான இலவசமாக சேவைகளை வழங்குவதற்காக அதி நவீன மருத்துவ உபகரணங்களுடன் பர்ட் மருத்துவமனை நிறுவப்பட்டது.
- மக்கள் சேவையே மாதவ சேவை என்பதை கருத்தில் கொண்டு நோயாளிகளுக்கு மனிதாபிமான கண்ணோட்டத்துடன் இம்மருத்துவ மனைக்கு உங்கள் பங்களிப்பினை நன்கொடையாக வழங்கிடுங்கள்.
- நன்கொடைகளுக்கு வருமான வரிச்சட்டம் 80(ஜி) ன்படி வரி விலக்கும் உண்டு.


காசோலை/ வரைவோலையை "செயலாட்சித் தலைவர், தி.தி.தே." எனும் பெயரில் எடுத்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

உதவி செயலாட்சித் தலைவர்
(நன்கொடைப் பிரிவு),
ஒருங்கிணைந்த நன்கொடையாளர் நிர்வாக மையம்,
ஆதிசேஷ ஓய்வு இல்லம்,
கூடுதல் செயலாட்சித் தலைவர் முகாம் அலுவலகம் அருகில்,
திருமலை,
தொ.எண் : 0877-2263472.

இயக்குனர், பர்ட் அறக்கட்டளை,
தி.தி.தே. திருப்பதி – 517 501.
தொ.எண். 0877-2264025, 2264619.

இணையதளம் : www.tirumala.org
மின்னஞ்சல் : officebirrd@gmail.com
மொபைல் செயலி : BIRRD HOSPITAL

# நினைவாற்றல்



பாரதத்தின் ஆரோக்கியத்திற்கும் நினைவாற்றலுக்கும் என்ன சம்பந்தம் என்று நம்மில் அனைவருக்கும் தோன்றும். நினைவாற்றல் என்பது நல்ல விஷயங்களை அடுத்த தலைமுறைக்கு கடத்திச் செல்வதற்கு ஒரு முக்கியமான கருவியாகும். யுகங்களைக் கடந்து நமது சாஸ்திரங்களும், சம்பிரதாயங்களும், சுருதி ஞானங்களும், புராணங்களும், இதிகாசங்களும் இன்றுவரை நம்மிடையே இருப்பதற்கு நினைவாற்றலே மிக மிக முக்கியமான காரணமாகும். எழுத்து வடிவமாக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற அனைத்தும் நமது தேசத்தின் பொக்கிஷமாகக் கருதப்பட்ட அனைத்தும் நாளந்தா பல்கலைக் கழகம் போன்ற இடங்களில் பாதுகாக்கப்பட்டது. அனைத்தும் அந்நியர்களால் பஸ்மமாக்கப்பட்ட பல விஷயங்கள் நமது முன்னோர்களின் நினைவாற்றலைக் கொண்டு மீட்கப்பட்டதே ஆகும்.

இப்படிப்பட்ட அரிய பொக்கிஷமாக ஒவ்வொரு மனிதருக்குள்ளும் உள்ள நினைவாற்றல் எவ்வாறு பாதுகாக்கப்பட வேண்டும்? அந்த நினைவாற்றலை எவ்வாறு அதிகரிக்க வேண்டும்? போன்ற வினாக்களுக்கு இந்தப் பதிவு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். நமது ஆன்மாவில் கூட நினைவாற்றல் இருப்பதால்தான் ஒரு நாத்திகர் குடும்பத்திலும் கூட ஆன்மீகச் சிந்தனை உள்ள குழந்தைகள் வளர்கின்றது. நினைவாற்றல் மனித உடம்பில் உள்ள உறுப்புகளில் தலையில் அமைந்துள்ள மூளையையே குறிக்கிறது.

மன ஆரோக்கியம் மற்றும் உடல் ஆரோக்கியம் இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக அமையும். அந்த வகையில் கூர்மையான மனமும், கூர்மையான நினைவாற்றலும் வேண்டும் என நினைப்பவர்கள் ஏராளம். ஆனால், இன்றைய காலகட்டத்தில் அதிக மன அழுத்தம், மோசமான வாழ்க்கைமுறை மற்றும் ஊட்டச் சத்து குறைபாடு போன்றவற்றால் நினைவாற்றல் இழப்பு, குறைவான மூளைத்திறன் உள்ளிட்ட பிரச்சனைகளைச் சந்தித்து வருகிறோம்.

இது பெரியவர்களுக்கு மட்டும் அல்லாமல், சிறு குழந்தைகளுக்கும் வரத் தொடங்கியுள்ளது. மேலும், இது அவர்களின் படிப்பையும், அறிவு வளர்ச்சியையும் பாதிக்கலாம். எனவே அனைவரும் ஆரோக்கியமான உணவுகள் மற்றும் சரியான வாழ்க்கை முறையைக் கையாள்வதன் மூலம் புத்தியைக் கூர்மைப்படுத்தலாம். மேலும், இது நினைவாற்றல் சக்தியை அதிகரிக்கும். உணவைத் தவிர வேறு எந்த வழிகளில் நினைவாற்றலை அதிகரிக்கலாம் என்ற கேள்வி எழும்.

சின்ன விஷயம் தானே என்று பலரும் மறந்துவிட்டு உதாசினமாகப் பொறுப்பற்று நடப்பதால் பலர் துன்பத்தில் சிக்கிக் கொள்கிறார்கள். நாம் மறந்து செயல்படுத்தாமல் அல்லது சொல்ல வேண்டிய இடத்தில் சரியான செய்திகளைச் சொல்ல மறப்பதாலும், செய்ய வேண்டிய செயல்களைச் சரியான இடத்தில் செய்யாமல் மறப்பதாலும், அதனை அலட்சியமாகத் தவிர்ப்பதாலும், நமக்கு பின்னே வரக் கூடிய அனைவருக்கும் நம்மால் துன்பமே தவிர நன்மை விளைய வாய்ப்பே இல்லை.

நினைவாற்றல் மேம்பாடு மற்றும் புத்திக் கூர்மைக்கு தியானம் எளிய மற்றும் சிறந்த வழியாகும். இது உடலில் ஏற்படும் இரத்த

அழுத்தத்தைக் குறைக்க உதவுகிறது. மேலும், தினந்தோறும் தியானம் செய்வது மன அழுத்தத்தைக் குறைப்பதுடன், நினைவாற்றலை மேம்படுத்துகிறது. தியானம் செய்வது மூளையைத் தளர்த்தி நினைவாற்றலைக் கூர்மையாக்குகிறது. தூக்கம் என்பது உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் முக்கிய மான ஒன்று. இன்றைய காலகட்டத்தில் வேலைப் பளு, மொபைல் பயன்பாடு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் இரவு தூக்கத்தை வெறுப்பதுடன், குறைவான நேரமே தூங்குகின்றனர். இதனால், உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படலாம்.

குறைவான தூக்கம் மன அழுத்தத்தை உண்டாக் குவதுடன், நினைவாற்றலை பலவீனப்படுத்துகிறது. மேலும், இது எதிர்மறையான விளைவுகளையும் ஏற்படுத்தலாம். எனவே நினைவாற்றல் மேம்பாடு மற்றும் மூளைத்திறன் அதிகரிக்க, நாள்தோறும் 5 முதல் 6 மணி நேரம் தூங்க வேண்டும்.

தற்காலத்தில் இடைவிடாது கைபேசியைக் காண்பதாலும், இடைவிடாது கண்களுக்கும் மனதிற் கும் தேவையற்ற விஷயங்களைக் கொடுப்பதாலும் நல்ல விஷயங்கள் மூளையில் நிலைத்து நிற்பதற்குச் சிரமமாக இருக்கிறது. போதிய உடற்பயிற்சியும், நல்ல பிராண சக்தி மிகுந்த சுவாசக் காற்றும் இல்லாததாலும் மூளைக்கு கொண்டு செல்லப்படும் ரத்தத்தில் தேவையான ஆக்ஸிஜனேற்றம், ஆன்டிஆக்சிடென்ட் இல்லாததாலும் நினைவாற்றல் குறைகிறது. உடல் ஆரோக்கியமும், மன ஆரோக்கியமும் நினைவாற்றலுக்கு மிகவும் முக்கியமான பங்கு வகிக்கிறது. மனம் சோர்வு அடையும்போது நம் நினைவில் நிற்கும் நல்லவை அனைத்தும் மறந்து துக்கமும், பிரதானமாக சோர்வை மட்டுமே வெளிப்படுத்துகிறது. அதே சமயம் மனம் உற்சாகமாக இருக்கும் போது மூளையானது சுறுசுறுப்படைந்து நிறைய விஷயங்களை நினைவு கூற உதவுகிறது. உடல் சோர்விலும் நினைவுகள் சரியாக வெளிப்படாமல் யோசிக்கும் திறமையை இழந்து பிறரின் உதவியை நாடி மனமும் உடலும் தளர்ந்து விடுகிறது.

உடல் ஆரோக்கியமாகவும் உற்சாகமாகவும் இருக்கும் பொழுது ரத்த ஓட்டம் சீராக இயக்கப் படுகிறது. இதன் காரணமாக இதயத்தில் இருந்து மூளைக்குச் செல்லும் ரத்தம் மிகவும் சீராக செயல் படுத்தப்படுவதால் ரத்தத்தில் தேவையான சத்துக்கள் ஆக்ஸிஜன், ஆன்டிஆக்சிடென்ட் இருப் பதாலும் மூளை சுறுசுறுப்படைந்து நினைவாற் றலைப் பிரகாசமாக வெளிப்படுத்துகிறது.

தற்காலத்தில் ஏற்படும் மறதி என்ற சொல் சிறு குழந்தை முதல் பெரியோர் வரை காணப்படுகிறது. இந்த மறதி என்னும் நோய்க்கு நினைவாற்றலே சிறந்த மருந்தாகும். மறப்பதால் பல தீமைகள்,


**வாசகர்களே...**

**ஏழு மலைகள் நிறைந்த திருமலையில் நித்தியம் வாசம் செய்யும் கலியுகக் கண்கண்ட தெய்வமான திருவேங்கடவன் தங்கள் வாழ்வில் நடத்திய திருவிளையாடல்கள் அதாவது தங்களுக்கு ஸ்வாமியின் திருவருள் கிடைத்த விதத்தினை ஸப்தகிரி பத்திரிகையில் வெளியிடுவதற்கு ஏதுவாக ஸப்தகிரி அலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

*எங்கள் முகவரி :*

**பிரதான ஆசிரியர்,**
**"ஸப்தகிரி" அலுவலகம், 2வது தளம்,**
**தி.தி.தே. அச்சகக் கட்டிடம்,**
**கபிலத்தீர்த்தம் சாலை,**
**திருப்பதி - 517 507.**



விரைவில் விற்பனைக்கு

தி.தி.தே. தமிழ் பஞ்சாங்கம்

**திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினரால் வருடந்தோறும் பஞ்சாங்கம் வெளியிடப்படுகிறது. பராபவ வருட (2026-2027) பஞ்சாங்கம் விரைவில் விற்பனைக்கு வரவுள்ளது. இந்தப் பஞ்சாங்கத்தில் தினசரி திதி, நக்ஷத்திரம், வாரம், யோகம், கரணம், ஹோரைகள் போன்ற விஷயங்களுடன், பொதுவான பஞ்சாங்கம் சார்ந்த தகவல்கள், முகூர்த்த நாட்கள், திருமலை ஆலயம் மற்றும் அதைச் சார்ந்த தி.தி.தே. ஆலயங்களில் நடைபெறும் உற்சவங்கள் குறித்த பட்டியல்கள் போன்ற அரிய பல தகவல்களுடன் விரைவில் உங்கள் முன்...**

**மேலும் விவரங்களுக்கு : துணைச்செயலாட்சித் தலைவர், தி.தி.தே. பதிப்பகம் மற்றும் விற்பனையகம்,**
**தி.தி.தே. அச்சக வளாகம், கே.டி.சாலை,**
**திருப்பதி-517 501. தொ.எண்.0877-2264209**

துன்பங்கள், பிரச்சனைகள் ஏற்படுகிறது. ஒருவரின் சிறு மறதி பலருக்குப் பெரிய துன்பங்களை ஏற்படுத்தி விடும்.

மனதின் செயல்பாடு புலன்களைக் கட்டுப்படுத்துதல், சுயக்கட்டுப்பாடு, ஊகம் மற்றும் ஆழ்ந்து சிந்தித்தல் ஆகும். அதிலிருந்து ஞானம் (புத்தி) பிறக்கிறது. நன்கு செயல்படும் மனம் நல்ல நினைவாற்றலுக்கு ஒரு முன்நிபந்தனையாகும்.

## நினைவாற்றலை மேம்படுத்துவதற்கான காரணிகள்

ஆசார்யர் சரகர் ஸ்மிருதியை (நினைவகத்தை) மேம்படுத்தும் காரணங்களை (பாஹ்ய கரணம்) வெளிப்புற காரணிகள் எனப் பட்டியலிடுகிறார். இவை ஒரு சுலோகத்தை இடைவிடாது பயிற்சி செய்வதாகும்.

1.அப்யாசம் (மீண்டும் மீண்டும் பயிற்சி), 2.ஞான யோகம் (தெய்வீக அறிவு/ஞானம்), 3.புன: ஸ்ருத (மீண்டும் மீண்டும் கேட்டல்/கற்றல்), 4.சத்வானுபந்தம் (கவனம்/நினைவு).

## நினைவாற்றலை மேம்படுத்துவதற்கான பயிற்சிகள்

உகந்த நினைவாற்றலுக்கான முழுமையான நல்வாழ்வை ஆயுர்வேதம் வலியுறுத்துகிறது. பல்வேறு ஆதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகள் பின்வருமாறு:

1.மந்திர ஜபம் (மந்திரங்களை ஓதுவது), 2. மூலிகைகள் (Medya Rasayanas), பிராமி (Bacopa monnieri), ஷங்கபுஷ்பி (Convolvulus pluricaulis) மற்றும் அஸ்வகந்தா, வல்லாரை, வால்நட் உள்ளிட்ட மூலிகைகள் மூளை டானிக்குகளாகப் பரிந்துரைக்கப்படுகின்றன. மிகச் சிறந்த ஆயுர்வேத ஆசாரியரான சரகரின் செய்தி யாதெனில் பசு நெய் தினந்தோறும் உட்கொள்ள வேண்டும். அறிவு மேம்படுவதற்கும், நினைவாற்றல் மிக அதிகமாக வெளிப்படுத்தவும்,மிகவும் உதவுவது பசு நெய். பலம், ஆயுள், ஜீரணம், வாத –பித்த தோஷங்களை சமன் செய்வது போன்ற பல நன்மைகளையும் தரவல்லது.

ஆயுர்வேத மருத்துவர்
டாக்டர்.கி.ஜ.நிகிலா வெங்கட், கோவை, 89409 91234

## ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய கேள்வி புதில்



68. ராமாநுஜ நூற்றந்தாதி ப்ரபந்தத்தில் மிகவும் முக்கியமான பாசுரம் எது என்று பெரியோர்கள் நிர்வாஹம்?

ஏழாவது பாசுரம் "மொழியைக்கடக்கும் பெரும்புகழான்.....கூரத்தாழ்வான்....."

69. "ஸ்ரீரங்கே மீநஹஸ்தே ச ஜாதம் ரங்கார்ய நந்தநம்। ராமாநுஜ பதாஸ்கந்தம் ரங்கநாத குரும்பஜே॥" இந்தத் தனியனில் வர்ணிக்கப்பட்ட பூர்வாசார்யர் எவர்?

திருவரங்கத்தமுதனார்

70. பகவத் ராமாநுஜருடைய வாழித்திருநாமத்தை அநுக்ரஹித்த பூர்வாசார்யர் யார்?

அப்பிள்ளை

71. தொண்டரடிப்பொடியாழ்வார் அவதரித்த திருவவதார ஸ்தலம், மாஸம், திருநக்ஷத்ரம் யாவை?

திருமண்டங்குடி, மார்கழி மாதம், கேட்டை திருநக்ஷத்ரம்.

72. திருக்கோட்டியூர் நம்பி, பெரிய நம்பி, திருமலை நம்பி, திருமாலையாண்டான் ஸ்வாமி திருக்குமாரர்கள் திருநாமங்கள் என்ன?

திருக்கோட்டியூர் நம்பி – தெற்காழ்வான், பெரியநம்பி – புண்டரீகாக்ஷர், திருமலை நம்பி – பிள்ளை திருமலைநம்பி, திருமாலை ஆண்டான் – சுந்தரத்தோளுடையான்.

- தெலுங்கில் : கீர்த்திமூர்த்தி ஸ்ரீ உ.வே.நடாதூர் பாஷ்யாசார்ய ஸ்வாமி, ஸ்ரீபெரும்பூதூர்.
தமிழாக்கம் : திருமதி குமுதா வரதராஜன், சென்னை.



# மார்ச் 2026
# ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.




தொழிலில் நல்ல லாபம் உண்டு. புது முயற்சிகள் செய்யலாம்.மாதத்தின் பிற்பகுதியில் குழந்தைகளால் சுபச் செலவுகள் உண்டாகும். வாழ்க்கைத் துணைக்கு உடல் வலி உண்டு. தொழில் வளர்ச்சிக்காக செலவுகள் அதிகமாகும். தெய்வத் தல யாத்திரையில் நல்ல தரிசனம் கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு இட மாற்றம் உண்டு. மாற்றமும் முன்னேற்றமும் கலந்த மாதம் இது.




தொழிலில் புது முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கும். வேலைப் பளு அதிகமானாலும் அதற்குரிய வளர்ச்சி உண்டு. குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். நண்பர்கள் உறவினர்களால் நன்மை உண்டு. படித்த மாணவர்களுக்கு உடனடியாக வேலை கிடைக்கும். பெண்களுக்கு குடும்பத்தில் நல்ல பெயர் கிடைக்கும். தொடங்கிய அனைத்து காரியத்திலும் வெற்றி கிடைக்கும் மாதம் இது.




தொழிலில் நல்ல முன்னேற்றம் உண்டு. வேலைப்பளு அதிகமானாலும் அதற்குரிய வருவாய் கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கும். ஆன்மீகப் பணிகளில் நல்ல பலன் கிடைக்கும். அலைச்சல் காரணமாக உடல் உஷ்ணம் உண்டாகும். வீடு, மனை, புது ஆபரணங்கள், புது வாகனம் வாங்கும் யோகம் உண்டு. மொத்தத்தில் நல்ல யோகமான மாதம் இது.




ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. வரவை விட செலவுகள் அதிகமாகும்.குடும்பத்தினருடன் பேசும் போது நிதானம் தேவை. தொழிலில் முடக்கம் அதிகமாகும். மாணவர்கள் கடுமையாக உழைத்தால் மட்டுமே நல்ல மதிப்பெண்கள் பெறுவார்கள். உத்தியோகஸ்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும்.மிகவும் கடுமையாக உழைத்து முன்னேறும் மாதம் இது.




குடும்பத்தில் சுப காரியங்கள் விரைவில் நடக்கும். தம்பதியிடையே சிறு பிரச்சனைகள் ஏற்பட்டுப் பிறகு சரியாகும். உங்கள் உடல் வலிக்குத் தக்க மருத்துவம் கிடைக்கும். தொழில் அலைச்சல் காரணமாக தூக்கம் குறையும். மனக் குழப்பத்தை அடைவீர். பெற்றோருக்கும் உங்களுக்கும் சிறு பிரச்சனைகள் ஏற்பட்டுப் பிறகு சரியாகும். கடும் உழைப்பு மற்றும் சிரமத்தின் பேரில் முன்னேறும் மாதம் இது.




ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. உடல் கடுமையாக உஷ்ணமாகும். தொழிலில் மிகுந்த அலைச்சல் உண்டாகும். தம்பதிக்குள் இருந்த பிரச்சனைகள் தீரும். கூட்டுத் தொழிலில் நன்மை உண்டு. முடிந்தவரை கடன் கொடுப்பதையும், வாங்குவதையும் தவிர்க்கவும். தேவையற்ற பயணங்கள், கூட்டமான இடங்கள் செல்வதைத் தவிர்க்கவும். சிரமத்துடன் முன்னேறும் மாதம் இது.




தொழில் போட்டியில் வெற்றி பெறுவீர். குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கும். வீடு, மனை, புது வாகனம் வாங்குவீர். பண உதவி தாராளமாகக் கிடைக்கும். படித்தோருக்கு உடனடியாக வேலைவாய்ப்பு கிடைக்கும். குடும்ப உறுப்பினர்கள் ஆதரவாக செயல்படுவார்கள். நிம்மதிப் பெருமூச்சு விடும் நல்ல மாதம் இது.




தொழிலில் வேலைப்பளு அதிகமாகும். அஜீரணக் கோளாறு உண்டாகும். பண விஷயத்தில் மிகுந்த எச்சரிக்கை தேவை. தெய்வத்தல யாத்திரை செல்வீர்கள். குழந்தைகளுக்கு ஆரோக்கிய குறைவுகள் உண்டாகும். உத்தியோகஸ்தர்களுக்கு விரும்பிய இட மாற்றம் கிடைக்கும். புது முயற்சிகளில் தாமதமாக வெற்றி கிடைக்கும். தெய்வ அனுகிரகத்துடன் முன்னேறும் மாதம்.




தொழிலில் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. பெண் நம்பிகளால் பிரச்சனைகள் உண்டாகும். தம்பதிக்குள் சிறு பிரச்சனைகள் ஏற்பட்டுப் பிறகு சரியாகும். ஆரோக்கிய குறைபாடுகளுக்குச் சரியான மருத்துவம் கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு விரைவில் இடமாற்றம் கிடைக்கும். உழைப்பின் பேரில் முன்னேறும் மாதம் இது.




குடும்ப உறுப்பினர்களுடன் பேசும்போது கவனம் தேவை. விவாதங்களைத் தவிர்க்கவும். பண விஷயத்தில் கவனம் தேவை. ஆரோக்கிய குறைபாடுகளுக்குச் சிறந்த மருத்துவம் கிடைக்கும். பண வரவை புத்திசாலித்தனமாக முதலீடு செய்யவும். கடன் கொடுப்பதை முற்றிலும் தவிர்க்கவும். சகோதரர்களுக்குள் இருந்த பிரச்சனைகள் தீரும். எதிர்பார்ப்பை நிறைவேற்றும் மாதம்.




தொழிலில் பழைய பாக்கிகள் வசூல் ஆகும். தெய்வத்தலங்களுக்கு யாத்திரை செய்வீர். புதிய தொழில் முயற்சிக்கு வெற்றி கிடைக்கும். படித்தவர்களுக்கு உடனடியாக வேலை கிடைக்கும். ஆரோக்கியத்திற்கு ஏற்ற மருத்துவம் கிடைக்கும். பூர்வீகச் சொத்து பிரச்சனைகள் தீரும். வீடு, மனை, புது வாகனம் வாங்கும் யோகம் உண்டு. மனக்குழப்பங்கள் தீரும் இனிய மாதம்.




தொழிலில் புதிய முயற்சிகள் செய்யலாம். வேலைப்பளு காரணமாக உடல் வலியும் சோர்வும் உண்டாகும். செலவுகள் அதிகமாகும். பழைய பாக்கிகள் வசூலாகும்.மனைவியின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சுகாதாரம் இல்லாத இடங்களுக்குச் செல்வதைத் தவிர்க்கவும். படித்த மாணவர்களுக்கு விரைவில் வேலை கிடைக்கும். முயற்சியால் முன்னேறும் மாதம்.


ஒரு ஊரில் மன்னர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு வேட்டையாடுவதில் அதிக இன்பம். அவர் தமது ஆயுதங்களுடன் காட்டில் கொடிய மிருகங்களை வேட்டையாடி விட்டு நகரத்தின் எல்லையில் உள்ள கோயில் மரத்தின் நிழலில் சிறிது நேரம் ஓய்வாக உறங்கிக் கொண்டிருந்தார்.

திடீரென்று எங்கிருந்தோ ஒரு கல் வந்து மன்னரை காயப்படுத்தி அவர் தூக்கத்தைக் கலைத்தது. சுற்றி இருந்த காவலர்கள் நாலா பக்கமும் சென்று ஒரு நடுத்தர வயது பெண்ணை பிடித்து, அழைத்து வந்து மன்னர் முன் நிறுத்தினார்கள். மன்னர் அந்த பெண்மணியைப் பார்த்து. ஏனம்மா என் மீது கல்லை எறிந்தாய்? அது என் தூக்கத்தை கலைத்ததுடன் என்னையும் காயப்படுத்தி விட்டது என்றார்.


அதற்கு அந்த பெண் அரசரை பார்த்து. மன்னர் பெருமானே! நான் காட்டில் விறகு வெட்டியும், அவைகளைப் பொறுக்கி, விலைக்கு விற்று அதில் கிடைக்கும் வருமானத்தில் என் குழந்தைகளுக்கு உணவு அளிக்கிறேன். வரும் வழியில் மரத்தில் பழங்கள் இருப்பதைப் பார்த்தேன். என் குழந்தைகளின் நினைவு வந்தது, பிள்ளைகளின் பசியைப் போக்குவது பெற்றவள் கடமை அல்லவா?.

அந்தப் பழங்களைப் பறிப்பதற்காக ஒரு கல்லை எடுத்து மரத்தின் மீது எறிந்தேன். தாங்கள் மர நிழலில் உறங்கிக் கொண்டிருந்தது தூரத்தில் இருந்த எனக்குத் தெரியவில்லை. நான் எறிந்த அந்தக் கல்லானது உங்கள் மீது பட்டு உங்கள் தூக்கத்தை கலைத்ததுடன், உங்களையும் காயப்படுத்தி விட்டது. இந்தத் தவறுக்கு நான் தான் காரணம். தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள் என்று வேண்டி நின்றாள்.

மன்னர் அந்தப் பெண்மணியைப் பார்த்து பெண்ணே! நீ செய்த தவறுக்கு மன்னிப்பு கேட்கின்றாய். அது உன் சிறந்த பண்பு. உன்னை மன்னித்து விட்டேன் என்று கூறியதோடு அப்பெண்ணுக்கு இரண்டு பசுக்களையும், கை செலவுக்கு பணத்தையும் கொடுக்க ஆணையிட்டார். சுற்றி இருந்த காவலர்கள் மன்னரை நோக்கி, அரசே தங்களை கல்லால் அடித்தவளை மன்னித்ததுடன் அவளுக்குப் பரிசும் தருகிறீர்கள். இச்செயல் எங்களுக்கு வியப்பு அளிக்கிறது என்றனர். காவலர்களைப் பார்த்து மன்னர், காவலர்களே! அறிவற்ற மரம் கல்லால் அடித்தால் பழம் தருகிறது. அவ்வாறு இருக்க அறிவுள்ள நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?. மேலும் அவள் வேண்டுமென்று என்னை கல்லால் அடிக்கவில்லை.



பழங்களை உதிர்க்கவே கல்லால் அடித்தாள். அது தவறுதலாக என் மீது பட்டு என்னை காயப்படுத்தியது. அவள் தான் செய்த தவறுக்கு வருந்தி என்னிடம் மன்னிப்பு கேட்டாள் அல்லவா!.



அது மட்டுமல்ல அவள் தன் பிள்ளைகளின் பசியைப் போக்கவே மரத்தின் மீது கல் எறிந்தாள். அது தாயாகிய அவள் கடமை அல்லவா?. அவள் அவளுடைய பிள்ளைகளுக்காக அவ்வாறு செய்தாள். நான் என் குடிமக்களுக்காக அவளுக்குப் பரிசு வழங்கினேன் என்றார். காவலர்கள் மன்னரின் விளக்கம் கேட்டு பெரு மகிழ்ச்சி அடைந்தனர்.

நீதி : செய்த தவறுக்கு மனம் வருந்தி மன்னிப்பு கேட்பது சிறந்த குணமாகும். எனவே, நாம் தெரியாமல் தவறு செய்திருந்தால் உரியவரிடம் மன்னிப்பு கேட்டு பழக வேண்டும்.

செய்த தவறுக்கு மன்னிப்பு கேட்பது சிறந்தது.

நீதிக் கதை

# மன்னிப்பு கேட்பதும் மனித நேயமே!

- திரு.எம்.அசோக்ராஜா அரவகுறிச்சிப்பட்டி, 9750333265

சிறுவர் உலகம்

# பல்சுவைப் பகுதி



சித்திரத்தைப் பாருங்கள் !!

எண்களை இணைத்து வண்ணம் தீட்டுங்கள்







வண்ணம் தீட்டுங்கள் !!

ஸ்ரீராமருக்கு சிறிய உதவி செய்த இந்த அணிலுக்குப் பசி எடுக்கிறதாம்! பழங்கள் நிறைந்த கூடையை அடைய பாதையைக் காட்டுங்கள்!








பாதையைக் கண்டுபிடி!

யானைக்குட்டிகள் எத்தனை பலூன்களை ஏந்தி நடந்துக்கொண்டிருக்கிறது என கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்!




விடைகள் :

01)6, 02) 5, 03) 8, 04) 10, 05) 4






திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி போட்டி எண் - 44

## ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!

1. வேதத்தின் சாரமாகப் பாசுரங்களை இயற்றிய ஆழ்வார் ..............................
2. கும்பகோணத்தில் 12 ஆண்டுகளுக்கொருமுறை நடைபெறும் திருவிழா..............................
3. வாயல்பாடு திருத்தலத்தில் அருள்புரியும் ஸ்ரீராமரின் திருநாமம் ..............................
4. திருவரங்கத்து அமுதனாருக்கு உபதேசித்த இராமாநுஜரின் சீடர்..............................
5. மங்கைமன்னனின் வைணவ பக்திக்கு வித்திட்டவர் ..............................
6. உம்மோடு ஐவரானோம் என்று இராமபிரான் யாரிடம் கூறினார்..............................
7. கடப்பா மாவட்டம் ஒண்டிமிட்டாவில் அருள்புரியும் ஸ்ரீராமரின் திருநாமம்..............................
8. பிரபந்த காயத்ரி எனக் கொண்டாடப்படுவது..............................
9. தசரதரின் பிள்ளைப் பேற்றிற்காகப் புத்திர காமேஷ்டி யாகம் செய்தவர்..............................
10. தெலுங்கு இலக்கியத்தின் முதல் பெண்பாற் புலவர்..............................
11. ஸ்ரீராமன் என்கிற பதத்திற்கு ஆன்றோர் கூறும் பொருள்..............................
12. பெரிய கோயில் நம்பி என்றழைக்கப்பட்டவர்..............................
13. இளைய பெருமாள் என்று அழைக்கப்படுபவர்..............................
14. திருநாவுக்கரசருக்கு ஞானமும், பக்தியும் ஊட்டி வளர்த்தவர்..............................
15. கும்பகோணத்தில் மகாமகம் நடைபெறும் திருக்குளம்..............................





## போட்டிக்கான நிபந்தனைகள்

- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்கு உட்பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்தியக் குடி மக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்தப் பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, 2nd Floor, T.T.D. Press Building, K.T. Road, Tirupati -517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியைக் குறித்து எவ்விதத் தகவல்களும் தொலைபேசி வாயிலாகத் தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலை பேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.03.2026. **விடையை எழுதுங்கள்!**

**திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்!!**

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதாரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |

சந்ததியை அருள்வதால்...

சந்திரனைப் போன்று பிரகாசிப்பதால்...

தசரதனின் மைந்தன் ஆனதால்...

ஜானகியை மணந்ததால்...

கோதண்டத்தைத் தரிப்பதால்...

ரகு குலத்தைச் சேர்ந்ததால்...

கோசலை நாட்டின் மன்னன் ஆனதால் ...

அனைத்திலும் வெற்றியை அருளுவதால்...

சக்கரத்தைச் சுற்றுங்கள்!

அதே வண்ணக் கட்டத்தில் விடையை எழுதுங்கள்!!





**விடைகள்**

1) இராமச்சந்திரர், 2)தசரதராமர், 3) ஜானகிராமர், 4) கோதண்டராமர், 5) ரகுராமர், 6) கோசலராமர், 7) ஜெயராமர், 8) சந்தானராமர்.

**கணித விளையாட்டு**

இங்கு புத்தகத்தில் உள்ள கணித வினாவிற்குப் பொருத்தமான எழுதுகோல்களின் எண்ணிக்கை உள்ள விடையைப் பொருத்துக

1. 21+2
2. 17+4
3. 32-5
4. 28-2
5. 44+2

i. 46
ii. 24
iii. 23
iv. 25
v. 26
vi. 21

**விடைகள்** 1) iii 2) vi, 3) ii, 4) v, 5) i



இயற்கை எழில் நிறைந்த வனத்தில் துள்ளிக் குதித்து விளையாடும் என் சிவ பெருமானின் திருக்கரத்தில் ஆயுதமாகத் திகழ்கிறேன். முனிவர்கள் தங்கள் ஆசிரமங்களில் எங்கள் இனத்தினை அன்புடன் பராமரித்து வளர்ப்பர். புள்ளிகள் நிறைந்த மேனி, அழகிய கொம்புகள் என வகைப்படுத்தி பலவித பெயர்களில் என்னை அழைப்பர்.
இராமாயணத்தில் என் போன்ற உருவம் எடுத்து மாரீசன் சீதா தேவியைக் கவர்ந்து சென்றதால் இராம-இராவண யுத்தம் நடைபெற்றது.

மழலைச் செல்வங்களே! மேலே குறிப்பிட்டது மற்றும் மேலே உள்ள சித்திரத்தின் அடிப்படையில் நான் யார் என்று கண்டுபிடியுங்கள் பார்ப்போம்...

விடை : மான்




சித்திரக் கதை


# நட்பின் இலக்கணம்

(ஸ்ரீ ராமர்–சுக்ரீவர் நட்பு)

கதை : திரு டி. ஸ்ரீநிவாச தீக்ஷிதுலு
சித்திரம் : திரு.ஸ்ரீ கே. துவாரகநாத்

இராவணன் சீதா தேவியைக் கடத்திக் கொண்டு சென்றான். இராமனும் இலட்சுமணனும் சீதையைத் தேடி ரிஷ்யமுக மலையை அடைந்தனர். அப்போது சுக்ரீவன் அவர்களை மலையின் உச்சியில் இருந்து பார்த்தான். சுக்ரீவன் அனுமனிடம்...





ஸ்ரீராமரும் லட்சுமணரும் மாருதியிடம் நீ யார் என வினவ...
ஐயா! என் பெயர் ஆஞ்சநேயர். நான் சுக்ரீவனின் மந்திரி. சுக்ரீவன் வானரங்களின் அரசன். வாலி அநியாயமாக சுக்ரீவனை நாடு கடத்தினான். சுக்ரீவன் உங்கள் உதவியை நாடுகிறான்.
பின்னர், அனுமன் நடந்தவற்றைக் கூறி இராமரையும் லட்சுமணரையும் சுக்ரீவரிடம் அழைத்துச் சென்றான். சுக்ரீவன் அவர்களை அன்புடன் வரவேற்று...
ஸ்ரீ ராமா! வாலி என் மனைவியையும் ராஜ்யத்தையும் தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டான். இந்த அநீதியைத் தாங்கள் தான் சரி செய்ய வேண்டும்! நான் சீதா தேவியைக் கண்டுபிடிக்க தங்களுக்கு உதவுகிறேன்
சுக்ரீவன் கூறியதைக் கேட்டு ஸ்ரீராமர் மகிழ்ச்சியடைந்தார்.
சுக்ரீவா! வாலியைக் கொல்வேன். தர்மத்தைக் காப்பேன். கவலையை விடு
அனுமன் இரண்டு அரச மரக் குச்சிகளைக் கொண்டு வந்து அவற்றை ஒன்றாகச் சேர்த்து நெருப்பை உருவாக்கினான். இராமரும் சுக்ரீவரும்...
இந்த அக்னி சாட்சியாக நம் நட்பு தொடரும்.
இருவரும் அக்னியின் முன்பாக ஒருவருக்கொருவர் வாக்குறுதிகளை அளித்தனர். இதற்கு அனுமன் சாட்சியாக நின்றான்.
ஸ்ரீராமருக்கும் சுக்ரீவருக்கும் இடையிலான நட்பு உலகிற்கே ஒரு சிறந்த உதாரணமாகத் திகழ்கிறது.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

*(சமய மாத இதழ்)*

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : ________________
(பெரிய எழுத்துக்களில்) ________________
________________
________________

அலைபேசி எண் : ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட / ஆயுள் சந்தா : ☐ ரூ.240/- ☐ ரூ.2,400/- (12 வருடங்கள்)

4. சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ., இணையதளம்)

ரசீது எண் : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை/காசோலை

எண். : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

## தி.தி.தே. கால்சென்டர்

உங்களுக்காக

## 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடைத் திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-**
**2233333**
**2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) இணையதளம் (https://ttdevasthanams.ap.gov.in), இ.எம்.ஓ., வரைவோலை, ஐ.பி.ஓ., டி.டி.-யை "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ (அ) வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
2வது தளம்,
தி.தி.தே.அச்சகக்கட்டிடம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.

Printed by Sri R.V. Vijayakumar, B.A., B.Ed., and Published by Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D. P.G.Dip. in JMC. on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.,P.G.Dip. in JMC.





# திருப்பதி
## ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
## 16-03-2026 முதல் 25-03-2026 வரை

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 16-03-2026 | திங்கள் | ---- | சேனாதிபதி உத்ஸவம், அங்குரார்ப்பணம் |
| 17-03-2026 | செவ்வாய் | துவஜாரோஹணம் | பெரியசேஷ வாகனம் |
| 18-03-2026 | புதன் | சிறியசேஷ வாகனம் | ஹம்ஸ வாகனம் |
| 19-03-2026 | வியாழன் | சிம்ம வாகனம் | முத்துப்பந்தல் வாகனம் |
| 20-03-2026 | வெள்ளி | கல்பவிருக்ஷ வாகனம் | சர்வபூபால வாகனம் |
| 21-03-2026 | சனி | பல்லக்கில் மோகினி அவதாரம் | கருடசேவை |
| 22-03-2026 | ஞாயிறு | அனுமத் வாகனம், மா. வசந்தோத்ஸவம். | யானை வாகனம் |
| 23-03-2026 | திங்கள் | சூரியப்பிரபை வாகனம் | சந்திரப்பிரபை வாகனம் |
| 24-03-2026 | செவ்வாய் | திருத்தேர் | குதிரை வாகனம் |
| 25-03-2026 | புதன் | பல்லக்கு உத்ஸவம்,<br>சக்கரஸ்நானம் | துவஜாவரோஹணம் |



**SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-02-2026 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No.APTAM/2021/80590. Postal Regd. No.TRP/157/ 2024-2026 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No.PMGK/RNP/WPP-04(05)/2024-2026" Posting on 1st of Every month.**





தினமு த்வாதசி நேடு தீர்த்திவசமு நீகு
ஜனகுட அன்னமாசார்யுட விச்சேயவே (பல்லவி)

அனந்தகருட முக்யுலைன ஸுரிஜநுலதோ
கன நாரதாதி பாகவதுலதோ
தனுஜமர்தனுடைன தைவசிகாமணிதோட
வெனுகொனி யாரகின்ச விச்சேயவே (தின)

வைகுண்டான நுன்டி யாளுவாரலலோபல நுன்டி
லோகபு நித்ய முக்துலலோன நுன்டி
ஶ்ரீகாந்ததோடனுன்ன ஶ்ரீ வேங்கடேசு கூடி
ஈகட நாரகின்ச நின்டிகி விச்சேயவே (தின)

சங்கீர்தனமுதோட சனகாதுலெல்ல பாட
பொங்கபு ஶ்ரீவேங்கடாத்ரி பூமி நுன்டி
லங்கே ஶ்ரீவேங்கடகிரி லஷ்மிவிபுடு நீவு
நங்கெல மாயின்டி விந்து லாகரின்சவே (தின)

அன்னமய்யாவின் புண்ணிய திதியான பால்குண
பகுள துவாதசியில் அந்த ஆசாரியனுக்கு பக்தியுடன்
சமர்ப்பிக்கும் விருந்திற்கு திருமகள் கேள்வனான
திருவேங்கடமுடையானுடனும் வைணவ அடியார்
குழாமுடனும் வாருங்கள் என அழைக்கிறார்.

- பெத திருமலய்யா

**அன்னமய்யா
நினைவு நாள்
15-03-2026**